இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின்
எட்டாவது பாராளுமன்றம்
(முதலாவது அமர்வு)

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல. 109

2015 பெப்ரவரி முதல் 2016 மே வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் இடம்பெற்றுள்ள நிதிசார் முறைகேடுகளைப் பற்றி ஆராய்வதற்கான விசேட குழுவாகச் செயலாற்றிய

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின்

அறிக்கை

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்
கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி அவர்களால்

2016 ஒக்றோபர் மாதம் 28 ஆந் திகதி
பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு

1. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி அவர்கள் (தலைவர்)
2. கௌரவ ரவூப் ஹகீம் அவர்கள்
3. கௌரவ அனுர பிரயதர்ஷன யாபா அவர்கள்
4. கௌரவ தயாசிறி ஜயசேகர அவர்கள்
5. கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள்
6. கௌரவ ரவின்ந்ர சமரவீர அவர்கள்
7. கௌரவ சுஜீவ சேனசிங்ஹ அவர்கள்
8. கௌரவ வசந்த அலுவிகார அவர்கள்
9. கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள்
10. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள்
11. கௌரவ அஜித் பீ. பெரேரா அவர்கள்
12. கௌரவ ரன்ஜன் ராமநாயக அவர்கள்
13. கௌரவ அசோக் அபேசிங்ஹ அவர்கள்
14. கௌரவ அனுர திசாநாயக அவர்கள்
15. கௌரவ சந்தரசிறி கஜதீர அவர்கள்
16. கௌரவ மஹிந்தாநந்த அலுத்கமகே அவர்கள்
17. கௌரவ பிமல் ரத்நாயக்க அவர்கள்
18. கௌரவ வீரகுமார திசாநாயக அவர்கள்
19. கௌரவ மாவை சோ. சேனாதிராஜா அவர்கள்
20. கௌரவ அப்துல்லாஹ் மஹ்ரூப் அவர்கள்
21. கௌரவ எஸ். ஸ்ரீதரன் அவர்கள்
22. கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்கள்
23. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்கள்
24. கௌரவ (டாக்டர்) நளின்த ஜயதிஸ்ஸ அவர்கள்
25. கௌரவ ஹர்ஷன ராஜகருணா அவர்கள்
26. கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்கள்

உள்ளடக்கம்

1. குழுவின் அறிக்கை
2. இணைப்பு -

2.1 பின்னிணைப்பு 01

2.1.1 இலங்கை மத்திய வங்கியின் பொது படுகடன் திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தில் இடம்பெற்றிருந்த திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் 2016 யூன் 29 ஆந் திகதி விசேட கணக்காய்வு அறிக்கை

2.1.2 மேற்படி அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் 2016 செப்தெம்பர் 23 வரையான காலத்தில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினாலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அந்த அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை

2.1.3 நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய ஒவ்வொரு பந்தியினதும் துல்லியத்தன்மையை பரிசோதிக்கின்ற அட்டவணை (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.2 பின்னிணைப்பு 02 – மத்திய வங்கி முறிகள் வழங்கல் தொடர்பில் புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதம அமைச்சர் அவர்களால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை

2.3 பின்னிணைப்பு 03 -2016.07.05 ஆந் திகதி மத்திய வங்கி முறிகள் வழங்கல் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட விளக்கமளித்தல்கள் (Presentation) (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.4 பின்னிணைப்பு – 04 2016 யூலை 07 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.5 பின்னிணைப்பு – 05 2016 ஆகஸ்ட் 12 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.6 பின்னிணைப்பு – 06 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.7 பின்னிணைப்பு – 07 2008 சனவரி 07 மற்றும் 2008 ஒக்தோபர் 07 ஆகிய திகதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பத்திரம் மற்றும் நாணயச் சபையின் பணிக் குறிப்புக்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.8 பின்னிணைப்பு – 08 மத்திய வங்கியின் பொதுபடுகடன் முகாமைத்துவ திணைக்களத்தின் செயற்பாட்டு கைநூலிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பகுதி (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.9 பின்னிணைப்பு – 09 2015 – 2016 ஆம் ஆண்டுகளில் மத்திய வங்கியின் முறிகள் வழங்கல் தொடர்பில் பாராளுமன்றக் குழுவின் அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக திடமிடப்பட்டடிருந்த எதிர்கால நடவடிக்கைகள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.10 பின்னிணைப்பு – 10 2015 பெப்ரவரி முதல் 2016 மே வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் பொது படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கைக்காக மத்திய வங்கியின் ஆளுநரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதில்களிற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.11 பின்னிணைப்பு – 11 பாராளுமன்றக் குழுவினால் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த வினாக்கொத்து மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த பதில்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.12 பின்னிணைப்பு – 12 பாராளுமன்றக் குழுவினால் நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த வினாக்கொத்து மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த பதில்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.13 பின்னிணைப்பு – 13 2016.06.08 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.14 பின்னிணைப்பு – 14 2016.09.23 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்றக் குழு கூட்டத்தின் சொல்லுக்குச் சொல் அறிக்கை (Verbatim Report) (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.15 பின்னிணைப்பு – 15 2016.10.05 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்றக் குழு கூட்டத்தின் சொல்லுக்குச் சொல் அறிக்கை (Verbatim Report) (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.16 பின்னிணைப்பு – 16 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் தயாரிக்கப்பட்டு 2016 செப்தெம்பர் 23 ஆந் திகதி பாராளுமன்றக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முதலாவது வரைபு அறிக்கை (பக்கம் ……….. முதல் ……………..வரை)

2.17 பின்னிணைப்பு – 17 2016 செப்தெம்பர் 25 ஆந் திகதி சன்டே ஒப்சவர் செய்திப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த பர்பவுல் டிரசரீஸ் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள்.

2.18 பின்னிணைப்பு – 18 பர்பவுல் டிரசரீஸ் கம்பனி சார்பில் மத்திய வங்கியின் முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கியின் தலையீடு தொடர்பில் அர்னஸ்ட் என்ட் யங் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கை.

2.19 இணைப்பு 19 - 2016.10.20 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)

2.20 இணைப்பு 20 - 2016.10.21 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)

2.21 இணைப்பு 21 - 2016.10.24 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)

2.22 இணைப்பு 22 - 2016.10.26 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)

2.23 இணைப்பு 23 - 2008 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி நாணயச் சபையின் தீர்மானங்கள் / மத்திய வங்கியின் இணையத்தளத்தில் முறிகளின் அடிப்படைப் பண்புகள் பற்றிய விளக்கமளித்தல்

2.24 இணைப்பு 24 - 2015 பெப்ரவரி 27 விலைக் கேட்பு அறிக்கை

2.25 இணைப்பு 25 - கலாநிதி திரு அசீம் அவர்களின் வாய்மூல சாட்சியம்

அறிக்கை

2015 பெப்ரவரி மாதம் தொடக்கம் 2016 மே மாதம் வரை இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மத்திய வங்கி முறிகள் வழங்கலின்போது இடம்பெற்றுள்ள நிதிசார் முறைகேடுகளைப் பற்றி ஆராய்வதற்கான விசேட குழுவாகச் செயலாற்றிய அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையை எட்டாவது பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர் என்ற வகையில் இன்றைய தினம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க விரும்புகிறேன்.

இக் குழுவின் அடிக்குறிப்புகள் இன்றி பொதுவாக அறிக்கைக்கு குழுவின் பின்வரும் உறுப்பினர்கள் 15 பேர் இணக்கம் தெரிவித்தனர்.

1. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி அவர்கள் (தலைவர்)
2. கௌரவ ரவூப் ஹகீம் அவர்கள்
3. கௌரவ அநுர பிரயதர்ஷன யாபா அவர்கள்
4. கௌரவ தயாசிறி ஜயசேகர அவர்கள்
5. கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள்
6. கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள்
7. கௌரவ அநுர திசாநாயக அவர்கள்
8. கௌரவ சந்தரசிறி கஜதீர அவர்கள்
9. கௌரவ மஹிந்தாநந்த அலுத்கமகே அவர்கள்
10. கௌரவ பிமல் ரத்நாயக்க அவர்கள்
18 கௌரவ வீரகுமார திசாநாயக அவர்கள்
12. கௌரவ எஸ். ஸ்ரீதரன் அவர்கள்
13. கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்கள்
14. கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ அவர்கள்
15. கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்கள்

இக் குழுவின் அடிக்குறிப்புகளுடன் அறிக்கைக்கு குழுவின் பின்வரும் உறுப்பினர்கள் 9 பேர் இணக்கம் தெரிவித்தனர்.

1. கௌரவ ரவின்ந்ர சமரவீர அவர்கள்
2. கௌரவ சுஜீவ சேனசிங்ஹ அவர்கள்
3. கௌரவ வசந்த அலுவிகார அவர்கள்
4. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள்
5. கௌரவ அஜித் பீ. பெரேரா அவர்கள்
6. கௌரவ அசோக் அபேசிங்ஹ அவர்கள்
7. கௌரவ அப்துல்லாஹ் மஹ்ரூப் அவர்கள்
8. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்கள்
9. கௌரவ ஹர்ஷன ராஜகருணா அவர்கள்

இவ்வறிக்கையின் இறுதியில் உள்ள விதப்புரைகளுக்கு குழுவின் உறுப்பினர்களான பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஏகோபித்த விதத்தில் இணக்கம் தெரிவித்தனர்.

சுனில் ஹந்துன்நெத்தி
அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்

தவிசாளரின் குறிப்பு

2015 பெப்ருவரி மாதத்தில் இருந்து 2016 மே மாதம் வரையான காலப்பகுதிக்குள் இலங்கை மத்திய வங்கியில் இடம்பெற்ற திறைசேரி முறிகளின் வழங்கல் பற்றி புலனாய்வு செய்வதற்காக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பொறுப்பு மிகவும் சிக்கலானதும் மிகவும் பொறுப்பு வாய்ந்ததுமான விசாரணையாக அமைந்தது. இந்த விசாரணை எமது குழுவின் அங்கத்துவ உறுப்பினர்களின் விடயத்துறைசார்ந்த அறிவு பற்றியதாக மாத்திரமன்றி மனச்சாட்சி பற்றிய விசாரணையாகவும் அமைந்தது.

மத்திய வங்கியின் முறிகள் கொடுக்கல் வாங்கல் என்பது பொதுவாக வேறோர் அரச தொழில்முயற்சியில் இடம்பெற்ற சாதாரணமான நிதிக் கொடுக்கல் வாங்கலன்றி அரச திறைசேரிக்கு நேரடியாக பொறுப்புக் கூறுகின்ற வங்கிகளின் வங்கியான இலங்கை மத்திய வங்கி தொடர்பாகத் தோன்றிய ஒரு சிக்கலாகும். அத்துடன் அக்கொடுக்கல் வாங்கல் ஊடாக அரசாங்கத்திற்கு நேர்ந்த அல்லது நேரக்கூடிய நட்டமானது வெறுமனே நிதிரீதியான பெறுமதியை கடந்து செல்கின்ற நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டின் வழியுரிமை பற்றிய பிரச்சினையொன்றாகும். அத்துடன் எமது குழுவின் வரையறைகளை விஞ்சுகின்ற அரசியல் உரையாடலொன்றும் இந்த முறிகளின் செயற்பாட்டினூடாக நாட்டில் ஊடகங்கள் வாயிலாக தோன்றியது. எனவே பல்வேறு அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவம் செய்கின்ற குழுவின் அங்கத்தவர்கள் அனைவரும் பொதுத் தேவையொன்றினைச் சூழ்ந்து அதாவது, மத்தியவங்கி முறிகள் மோசடியின் ஊழல் பேர்வழிகளை வெளிப்படுத்தி சட்டத்தின்முன் கொண்டுவந்து மக்களின் பொதுப்பணத்தை மோசடி செய்தமைக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பாராளுமன்றத்திற்கு முறையான அறிக்கையொன்றினை சமர்ப்பித்தனர். அது சிக்கலானதும் பல்வேறு சிரமங்களைக் கொண்டதுமான சவாலாக அமைந்தது. எனினும் அது பெறுமதிமிக்க அரசியல் அனுபவமாக அமைந்தது.

மக்களின் இறைமை அதிகாரத்தை செயற்படுத்துவதற்கான அதிகாரத்தை மக்கள் பாராளுமன்றத்துக்கு ஒப்படைத்துள்ளனர். பாராளுமன்றத்துக்குரிய அந்த மக்கள் அதிகாரத்தை நிதி நிர்வாகத்தை முன்னிட்டு, அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவின் மூலம் நாம் செயற்படுத்திக்கொண்டிருக்கிறோம். மேற்படி முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பான விசாரணை மக்கள் அதிகாரத்தின் விசாரணையாகும். எனவே நாம் நிறைவேற்றியுள்ளது தனி ஆள் ஒருவரின் தேவைப்பாடொன்றை நிறைவு செய்வதல்ல பொதுமக்களின் அபிலாஷையை செயற்படுத்துவதாகும். எனவே நீண்ட வாத விவாதங்களின் முடிவில் வரி செலுத்தும் மக்களுக்கு நியாயமான முறையில் இவ்விசாரணையை நிறைவு செய்து இன்றைய தினத்தில் பாராளுமன்றத்தின் முன் சமர்ப்பிக்கின்றோம். தனி ஆட்களின் அபிலாஷைகளுக்கோ அவர்களின் தனியாள் அதிகாரத்தின் அளவுக்கல்ல, பொதுமக்களின் இறைமை அதிகாரத்துக்கு நியாயம் வழங்குவதற்கு மாத்திரம் நாம் கடப்பாடுள்ளவர்கள் என்பதை கருத்திற்கொண்டு இந்தவிசாரணை என்னால் நடாத்தப்பட்டது. இக்கடின முயற்சியின் இறுதியில் வெற்றிகரமான பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு எனக்கு இயலுமாகிறது. இது பாராளுமன்றத்தின் ஊடாக ஊழல் எதிர்ப்புப் போராட்டத்தை வெற்றிகொண்ட வரலாற்று

நிகழ்வாகும். இது இலங்கையில் ஊழலுக்கு எதிரான அனைத்து சக்திகளுக்கும் வலுவூட்டும் என்பதில் சந்தேகமில்லை.

நிதி நிர்வாகம் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு உரித்தாகியுள்ள தத்துவத்தை பலவீனமடைய இடமளிக்காதிருப்பது அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களதும் தலையாய கடமையாகும். அரசாங்கத்திற்கு, மத்திய வங்கிக்கு மேற்படி முறிகள் வழங்கலின் மூலமாக ஆகக்குறைந்த செலவினத்திற்கு ஆவன செய்தல் மற்றும் குறைந்தபட்ச இடர்நேர்வின் கீழ் மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் உரிய முறையில் செயற்பட்டுள்ளனரா என்பதை விசாரணை செய்வது எமது முதலாவது பொறுப்பாகக் கருதி செயற்பட்டுள்ளோம். மேலும், கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அவதானிப்புகளையும் முடிவுகளையும் அதற்கான அடிப்படையாகக் கொண்டுள்ளோம்.

இன்று சபையில் சமர்ப்பிக்கப்படுகின்ற இவ்வறிக்கையையும் அனைத்து இணைப்புகளையும் சாட்சிக் குறிப்பீடுகளையும் நன்றாக ஆராயும்படி அனைத்து மக்களிடமும் நான் கேட்டுக்கொள்கின்றேன். அப்போது அந்த மோசடியாளர்களையும் அம்மோசடியாளர்களை பாதுகாக்கின்றவர்களையும் நீங்கள் இனங்காண்பீர்கள். மோசடிமிக்க முறிகள் வழங்கல் தொடர்பான விசாரணை இன்று முடிவடைந்துள்ளது. எனினும் அதன் தாக்கம் அனைத்து அரசாங்க பொறுப்பு முயற்சிகளுக்கும் அரசாங்க நிதி நிர்வாக நிறுவனங்களுக்கும் கிட்டும் விதத்தில் இந்த விசாரணை வெற்றிகரமாக முடிவுறச் செய்தல் எனது பொறுப்பாகும். அதை வெற்றிகரமாக நிறைவேற்றியுள்ளேன் என்பதை எனது மனசாட்சியின்படியும் விடய அறிவின் படியும் நான் நம்புகின்றேன்.

மேற்படி விசாரணை பற்றி தமது தற்றுணிபின் பிரகாரம் கருத்துத் தெரிவித்த அனைவருக்கும், மேற்படி செயற்பாட்டினை பற்றி வெியிலிருந்து பல்வேறு விமர்சனங்களின் மூலமாக எமக்கு ஊக்கமளித்த அனைவருக்கும், துணிவூட்டி இச்செயற்பாட்டினை நிறைவு செய்வதற்கு ஒத்துழைப்பு நல்கிய கணக்காய்வாளர் தமையதிபதி உள்ளிட்ட பணியாட்டொகுதியின் அனைவருக்கும் சபாநாயகர் உட்பட பாராளுமன்ற பணியாட்டொகுதியின் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

சுனில் ஹந்துன்நெத்தி
அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் தவிசாளர்

2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் தயாரிக்கப்பட்ட இறுதி வரைபு அறிக்கை

இந்த அறிக்கை 2015 – 2015 ஆம் ஆண்டினுள் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகளை வழங்குதல் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்டிருந்த விசேட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கியிருந்த விடயங்கள், அந்த அறிக்கை தொடர்பில் மத்திய வங்கி ஆளுநரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பதிலளித்தல்கள், பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் நிதி அமைச்சுக்கும் இலங்கை மத்திய வங்கிக்கும் அனுப்பிவைக்கப்பட்ட எழுத்துமூல வினாக்கொத்துக்கான பதில்கள், நிதி அமைச்சினதும், கொள்கை வகுத்தல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினதும் உத்தியோகத்தர்களிடமிருந்து கிடைத்திருந்த வாய்மொழிகள், இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் கணக்குகள் குழுவின் முன்னிலையில் வரவழைக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட வாய்மொழி மூலமான சான்றுகளிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் என்பன பொழிப்பாக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆவணமாகும்.

1 அறிமுகம்

இலங்கை மத்திய வங்கியினால்2015 பெப்ரவரி 27 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த முப்பது ஆண்டுகள் கொண்ட திறைசேரி முறிகளின் வழங்கலின் போது முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும், அதன் காரணமாக பாரிய நிதிசார் நட்டமொன்று அரசாங்கத்திற்கும் நாட்டிற்கும் ஏற்பட்டுள்ளது என்றும், குறிப்பிட்டு 2015 பெப்ரவரி மாதத்தில் அப்போதைய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் (பேராசிரியர்) ஜீ. எல். பீரிஸ் அவர்கள் உள்ளடங்கலான அநேக உறுப்பினர்களால் கைச்சாத்திடப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த, இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் அவர்கள் அப்பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டுமென அரசாங்கத்திற்கு கூட்டாக ஒன்றிணைந்து அழுத்தம் கொடுக்கும் பிரேரணை, 2015 மே 08 ஆந் திகதி வெளியிடப்பட்ட 14(1) ஆம் இலக்க பாராளுமன்றத்தின் நிகழ்ச்சி நிரலுடன் தொடர்புடைய குறைநிரப்புக்கு கால வரையறையற்ற பிரேரணையொன்றாக உள்ளடக்கப்பட்டது.

அது தொடர்பில் ஆய்ந்தறிந்து அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்காக 2015 மே மாதத்தில் கௌரவ பிரதமர் அவர்களால் சட்டத்தரணி காமினி பிடிபன, சட்டத்தரணி மகேஸ் களுகம்பிடிய மற்றும் சட்டத்தரணி சந்திமால் மெண்டிஸ் ஆகியோர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்த மூவர்கொண்ட குழுவின் அறிக்கை கௌரவ லக்ஸ்மன் கிரிஎல்ல அவர்களால் 2015 மே 19 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த அறிக்கை இவ் அறிக்கையின் **பின்னிணைப்பு 2 இல்** சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்பட்டிருந்த முன்னர் கூறப்பட்ட பிரேரணை தொடர்பில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவின் உப குழுவால் முழுமையான புலனாய்வுக்கு உட்படுத்துதல் மிகச் சிறப்பாக அமையுமென கௌரவ சபாநாயகர் அவர்கள் 2015 மே 20 ஆந் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய, 2015 மே 22 ஆந் திகதி பாராளுமன்றத்தில் கூடிய ஏழாவது பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவும் இது தொடர்பில் முழுமையான விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக குழு உறுப்பினர்களிலிருந்து 13 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள விசேட உப குழுவொன்றை நியமித்திருந்தது.

விசேட உப குழுவின் உறுப்பினர்கள்

கௌரவ டியூ குணசேகர அவர்கள் (தலைவர்)

கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன அவர்கள்

கௌரவ ரோஸி சேனாநாயக்க அவர்கள்

கௌரவ இரான் விக்ரமரத்ன அவர்கள்

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ அவர்கள்

கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள்

கௌரவ அர்ஜுன ரனதுங்க அவர்கள்

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த அவர்கள்

கௌரவ வீரகுமார திஸாநாயக்க அவர்கள்

கௌரவ சுனில் கந்துன்னெத்தி அவர்கள்

கௌரவ எம்.ரீ. ஹசன் அலி அவர்கள்

கௌரவ (பேராசிரியர்) ரஜீவ விஜேசிங்ஹ அவர்கள்

கௌரவ ஈ. சரவணபவன் அவர்கள்

அந்த விசேட உப குழு தனது முதலாவது கூட்டத்தை நடாத்தியிருந்த 2015 மே 22 ஆந் திகதி முதல் 14 கூட்டங்களை நடாத்தியிருந்ததுடன், அவற்றில் 11 கூட்டங்களில் 42 சாட்சியாளர்களிடமிருந்து வாய்மொழி மூலமான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டிருந்தன. அந்த சாட்சியமளித்தோரின் பெயர் பட்டியல் கீழே காட்டப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2015 ஆம் ஆண்டில் சாட்சியங்களைப் பெறுவதற்காக 7 ஆவது பாராளுமன்றத்தின் உப குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள்

அழைக்கப்பட்ட திகதி	பெயர், பதவி மற்றும் நிறுவனம்
26.05.2015	கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க, திறைசேரி செயலாளர் கலாநிதி எம்.எஸ்.டீ. ரணசிரி, பணிப்பாளர் நாயகம் - திறைசேரிகள் திணைக்களம்
29.05.2015	திரு. ரொனல்ட் சீ. பெரேரா, சனாதிபதி சட்டத்தரணி, தலைவர், இலங்கை வங்கி திரு. ஜே.டீ.கே. தர்மபால, பிரதான வாடிக்கையாளர், இலங்கை வங்கி திரு. யூ.எல். முதுகல, பதிற்கடமை அத்தியட்சகர், பொது படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி கலாநிதி எம்.இசட்.எம். அசீம், மேலதிக அத்தியட்சகர், பொது படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
03.06.2015	திரு. எச்.ஏ. கருணாரத்ன, செயலாளர் - நாணயச் சபை மற்றும் உதவி அத்தியட்சகர், இலங்கை மத்திய வங்கி திரு. ஆர்.ஏ. ஜயதிஸ்ஸ, நாணயச் சபை உறுப்பினர், இலங்கை மத்திய வங்கி திருமதி. மனோஹரி ராமநாதன், நாணயச் சபை உறுப்பினர், இலங்கை மத்திய வங்கி திரு. டீ.எம். குணசேகர, பொது முகாமையாளர், இலங்கை வங்கி திரு. ஏ.டீ.பீ. தல்வத்த, பிரதான பங்காளர், ஏர்னஸ்ட் என்ட் யங் கம்பனி திரு. எச்.எம்.ஏ. ஜயசிங்ஹ, பங்காளர், ஏர்னஸ்ட் என்ட் யங் கம்பனி திரு. வை.ஏ.தி. சில்வா, பங்காளர், ஏர்னஸ்ட் என்ட் யங் கம்பனி திரு. டபிள்யூ.டபிள்யூ.டீ. பிரதீப் எல். பெரேரா, சிரேஷ்ட முகாமையாளர், ஏர்னஸ்ட் என்ட் யங் கம்பனி திரு. பீ.ஜீ. திசேரா, முன்னாள் உதவி முகாமையாளர், இலங்கை வங்கி
04.06.2015	திரு. அஸ்வின் த சில்வா, தலைவர், தேசிய சேமிப்பு வங்கி திரு. எஸ்.டீ.என். பெரேரா, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் / பொது முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி திரு. பீ.ஏ. லயனல், திறைசேரி தலைவர், தேசிய சேமிப்பு வங்கி

	திரு. டீ.எல்.பீ. அபேசிங்ஹ, வாடிக்கையாளர், தேசிய சேமிப்பு வங்கி
	திரு. பீ.பி.ஜே. குணசேகர, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் / பொது முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ கம்பனி
	திரு. நிஹால் ஜயமான்ன, சனாதிபதி சட்டத்தரணி, தலைவர் செலான் வங்கி
	திரு. சோமதாச பலிஹவதன, பிரதான வாடிக்கையாளர், செலான் வங்கி
	திரு. என் வசந்த குமார், பொது முகாமையாளர், மக்கள் வங்கி
	திரு. கிலைவ் பொன்சேகா, திறைசேரி தலைவர், மக்கள் வங்கி
	திரு. ஆர்.ஏ.ஏ. ஜயலத், அத்தியட்சகர், ஊழியர் சேமலாப நிதியம்
	திரு. எம்.எஸ்.கே. தர்மவர்தன, மேலதிக அத்தியட்சகர், ஊழியர் சேமலாப நிதியம்
	திரு. ஜே.டீ.எஸ்.ஜே. நாணயக்கார, பிரதி அத்தியட்சகர், ஊழியர் சேமலாப நிதியம்
	திரு. எஸ். பத்மநாதன், உதவி அத்தியட்சகர், ஊழியர் சேமலாப நிதியம்
	திரு. கசுன். பலிசேன, பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர், வ/ப பர்பவுவல் ரிசரீஸ் கம்பனி
	திரு. ஹரீன் நிசாந்த, வர்த்தக முகாமையாளர், வ/ப பர்பவுவல் ரிசரீஸ் கம்பனி
05.06.2015	திரு. பீ.டீ.டபிள்யூ.ஏ சில்வா, பிரதி அத்தியட்சகர், இலங்கை மத்திய வங்கி
	திரு. பி. சமரசிங்ஹ, பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
09.06.2015	திருமதி. சீ.எம்.டீ.என்.கே. செனவிரத்ன, அத்தியட்சகர், பொது படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
	கலாநிதி எம்.இஸட்.எம். அஸீம், பிரதி அத்தியட்சகர், பொது படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
10.06.2015	திரு. டீ.எல்.பீ. அபேசிங்ஹ, நிறைவேற்று உத்தியோகத்தர், அரசாங்க பிணைகள் கொடுக்கல் வாங்கல், தேசிய சேமிப்பு வங்கி
	திரு. டபிள்யூ.எம்.ஆர்.பீ. வீரகோன், சிரேʻட முகாமையாளர் (கொடுக்கல் வாங்கல்), தேசிய சேமிப்பு வங்கியின் நிதி முகாமைத்துவ கம்பனி
	திரு. காவிந்த மெவன் குணவர்தன, சிரேʻட வணிக பெறுமதிகள், ஹொங்கொங் என்ட் சங்காய் வங்கி கோர்பரேஷன்
	திரு. டீ.என்.ஆர். சிறிவர்தன, கம்பனி பதிவாளர்
11.06.2015	திரு. அஜித் நிவாட் கப்ரால், முன்னாள் ஆளுநனர், இலங்கை மத்திய வங்கி
17.06.2015	திரு. ஜே.கே.டீ. தர்மபால, முன்னாள் பிரதான வாடிக்கையார், இலங்கை வங்கி
	திரு. என்.டபிள்யூ.ஜீ.ஆர.டீ. நாணயக்கார, பணிப்பாளர், நிதி ஆராய்ச்சி பிரிவு, இலங்கை மத்திய வங்கி
	திருமதி. எல்.எஸ். பெர்னான்டோ, முகாமையாளர், பொது படுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
	கலாநிதி பீ.என்.வீரசிங்ஹ, பிரதி ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
	திரு. டீ.என்.ஆர்.சிறிவர்தன, கம்பனி பதிவாளர்
	திரு. அர்ஜுன் ஜோசப் எலோசியஸ், பணிப்பாளர், வ/ப இலங்கை வர்த்த சங்கம்
18.06.2015	திரு. அர்ஜுன் மஹேந்திரன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
	எம்.எஸ்.எம்.பீ. பர்னான்டோ, பிரதான முகாமையாளர், பொதுபடுகடன் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி

23.06.2015	திரு. அர்ஜுன் மஹேந்திரன், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
25.06.2015	பாராளுமன்றக் குழுவின் உறுப்பினர்கள் மாத்திரம் கூடினர்
26.06.2015	பாராளுமன்றக் குழுவின் உறுப்பினர்கள் மாத்திரம் கூடினர்

அதன் பின்னர், கணக்குகள் குழு அந்த 11 கூட்டங்களில் முன்வைக்கப்பட்ட அச் சான்றுகள் மற்றும் ஏனைய அநேக ஆவணங்கள் தொடர்பில் கருத்திற்கொண்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளிட்ட ஏனைய உத்தியோகத்தர்களனது உதவியுடனும் பங்களிப்புடனும் அறிக்கையொன்றை வரைந்து குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதுடன், அந்த வரைபு தொடர்பில் இணக்கப்பாட்டுக்கு வராமையாலும் 2015.06.26 ஆந் திகதியிலிருந்து பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தமையாலும் அந்த அறிக்கையினை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடியாது போயிருந்தது.

அதன் பின்னர் 2015.09.01 ஆம் திகதி நடைபெற்ற எட்டாவது பாராளுமன்றத்தில் இவ்விடயம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு, எட்டாவது பாராளுமன்றத்தின் அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவினால் இது தொடர்பில் ஆரம்பிக்கப்பட்ட விசாரணையை மீண்டும் நடத்துதல் வேண்டுமென இணக்கம் காணப்பட்டது.

8 ஆவது பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழு

---

1. கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி அவர்கள் (தலைவர்)
2. கௌரவ ரவூப் ஹகீம் அவர்கள்
3. கௌரவ அனுர பிரயதர்ஷன யாபா அவர்கள்
4. கௌரவ தயாசிறி ஜயசேகர அவர்கள்
5. கௌரவ லக்ஷ்மன் செனவிரத்ன அவர்கள்
6. கௌரவ ரவிந்திர சமரவீர அவர்கள்
7. கௌரவ சுஜீவ சேனசிங்ஹ அவர்கள் (2016.07.07 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்)
8. கௌரவ வசன்த அலுவிகார அவர்கள்
9. கௌரவ லசந்த அலகியவன்ன அவர்கள்
10. கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா அவர்கள்
11. கௌரவ அஜித் பீ. பெரேரா அவர்கள்
12. கௌரவ ரன்ஜன் ராமநாயக அவர்கள்
13. கௌரவ அசோக் அபேசிங்ஹ அவர்கள்
14. கௌரவ அனுர திசாநாயக அவர்கள்
15. கௌரவ சந்தரசிறி கஜதீர அவர்கள்
16. கௌரவ மஹிந்தாநந்த அலுத்கமகே அவர்கள் (2016.05.17 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்)
17. கௌரவ பீமல் ரத்னாயக்க அவர்கள்
18. கௌரவ வீரகுமார திசாநாயக குமார அவர்கள்
19. கௌரவ மாவை சோ. சேனாதிராஜா அவர்கள்
20. கௌரவ அப்துல்லாஹ் மஹ்ரூப் அவர்கள் 2016.04.07 ஆம் திகதி நியமிக்கப்பட்டார்)
21. கௌரவ எஸ். ஸ்ரீதரன் அவர்கள்
22. கௌரவ எம். ஏ. சுமந்திரன் அவர்கள்

23. கௌரவ ஹெக்டர் அப்புஹாமி அவர்கள்
24. கௌரவ வேலு குமார் அவர்கள் (2016.07.05 ஆம் திகதி கேட்டு விலகிக் கொண்டார்)
25. கௌரவ (வைத்தியர்) நலிந்த ஜயசிங்ஹ அவர்கள்
26. கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்கள் (2016.04.07 ஆம் திகதி நியமிக்கப்பட்டார் – 2016.05.17 ஆம் திகதி இராஜினாமா செய்திருந்தார்)
27. கௌரவ ஹர்ஷன ராஜகருணா அவர்கள்
28. கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன் அவர்கள்

அதற்கமைய, 2016.05.06 ஆந் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் 2015 ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் இலங்கை மத்திய வங்கியின் முறிகள் வழங்கல் சம்பந்தமாகவும் அதனுடன் தொடர்புடைய ஏனைய அனைத்து விடயங்களையும் தேடியறிதல் வேண்டுமென்றும், அதன் பின்னர் அது தொடர்பான அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டுமெனவும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதற்கமைய, பாராளுமன்றக் குழுவினால் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் முதன்மையாக இது தொடர்பான விடயங்களை ஆராய்ந்து மற்றும் புலனாய்வு செய்து கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் “அந்தரங்க” விடயங்களையும் உள்ளடக்கிய அறிக்கையொன்று 2016.06.29 ஆந் திகதி கௌரவ சபாநாயகருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கையின் “அந்தரங்க” பகுதி அகற்றப்பட்ட அறிக்கை அன்றைய தினமே பாராளுமன்றக் குழுவுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. கௌரவ சபாநாயகர் அவர்களால் ஆழமாக விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டதன் பின்னர், அதிலுள்ள “அந்தரங்க” பகுதியினையும் உள்ளடக்கிய முழுமையான அறிக்கை பாராளுமன்றக் குழுவுக்கு 2016.09.23 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த முழுமையான அறிக்கை இந்த அறிக்கையுடன் இணைத்து தனியான தொகுதியொன்றாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இக் காலப்பகுதியில் பிரச்சினைக்கு உள்ளான மத்திய வங்கியின் முறிகள் விநியோகம் இடம்பெற்ற காலத்தில் ஆளுநராக பதவிவகித்த திரு. அர்ஜுன் மகேந்திரன் அவர்கள் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்காலம் முடிவடைந்தமையால் மீண்டும் அப்பதவியில் நியமிக்கப்படாதிருந்ததுடன், அவருக்குப் பதிலாக கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி அவர்கள் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதிவிக்கு நியமிக்கப்பட்டார்.

எட்டாவது பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழு இது தொடர்பில் விரிவாக கலந்துரையாடியிருந்ததுடன், தொடர்ந்தும் மத்திய வங்கியின் ஆளுநர் உள்ளிட்ட 23 சாட்சியாளர்களிடமிருந்து வாய்மொழி மூல சாட்சியங்கள் வினவப்பட்டன. எட்டாவது பாராளுமன்றத்தின் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில் வாய்மொழி மூலமாக சாட்சியமளித்த அந்த சாட்சியமளித்தோரின் பெயர் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

அழைக்கப்பட்ட திகதி	**அழைக்கப்பட்ட உத்தியோகத்தரின் பெயர்**
2016-06-08	எம்.ஐ.எம். ரபீக், செயலாளர், தேசிய கொள்கை வகுத்தல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
	யூ.ஜீ. ரத்னசிறி அவர்கள், மேலதிக செயலாளர் -மேற்படி-
	எஸ்.எம். சந்திரபால அவர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர், -மேற்படி-

டபிள்யூ.எம்.ஆர். திசாநாயக, பிரதான கணக்காளர், -மேற்படி-
திருமதி. பீ.ஏ. கான்தி, பிரதான கணக்காய்வு உத்தியோகத்தர், -மேற்படி-
கலாநிதி ஆர்.எம்.எஸ். சமரதுங்க அவர்கள், செயலாளர் நிதி அமைச்சு
எம்.எஸ்.டீ. ரணசிறி, பணிப்பாளர் நாயகம், -மேற்படி-
அர்ஜுன மஹேந்திரன் அவர்கள், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
கலாநிதி பீ,என். வீரசிங்ஹ அவர்கள், பிரதி ஆளுநர், -மேற்படி-
பீ. சமரசிறி அவர்கள், பிரதி ஆளுநர், -மேற்படி-
எஸ். லங்காதிலக அவர்கள், பிரதி ஆளுநர், -மேற்படி-
டி.எச்.பீ. சரத்‘ன்ர அவர்கள், அத்தியட்சகர், பொதுபடுகடன் திணைக்களம், -மேற்படி-

2016-06-29 பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது, கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் மத்திய வங்கி முறிகள் வழங்குதல் தொடர்பில் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விசேட அறிக்கை குறித்து கலந்துரையாடுதல்

2016-07-07 கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க அவர்கள், செயலாளர், திறைசேரி
எம்.ஐ.எம். ரபீக், செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
யூ.ஜி. ரத்னசிறி அவர்கள், மேலதிக செயலாளர், -மேற்படி-
எஸ்.எம். சன்தரபால அவர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர், -மேற்படி-
டபிள்யூ.எம்.ஆர். திசானாயக்க, பிரதான கணக்காளர், -மேற்படி-
திருமதி. பீ.ஏ. கான்தி, பிரதான கணக்காய்வாளர் உத்தியோகத்தர் -மேற்படி-
எம்.எஸ்.டீ. ரணசிறி, பிரதான பணிப்பாளர், -மேற்படி-
இன்தரஜித் குமாரசுவாமி அவர்கள், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
திருமதி. மனோகரி ராமநாதன் அவர்கள், நியமிக்கப்பட்ட நாணயச் சபை உறுப்பினர், -மேற்படி-
பீ.என். வீரசிங்ஹ அவர்கள், பிரதி ஆளுநர், -மேற்படி-
பீ. சமரசிறி அவர்கள், பிரதி ஆளுநர், -மேற்படி-
எஸ். லங்காதிலக, பிரதி ஆளுநர், -மேற்படி-
எஸ்.எஸ். ரத்னாயக்க, உதவி ஆளுநர்
கே.டீ. ரணசிங்ஹ அவர்கள், உதவி ஆளுநர், -மேற்படி-
ஆர்.ஏ.ஏ. ஜயலத் அவர்கள், உதவி ஆளுநர், -மேற்படி-
திரு. பீ.டபிள்யூ.டீ.என்.ஆர். ரொட்ரிகோ, பணிப்பாளர், உள்நாட்டு அலுவல்கள், -மேற்படி-
திருதமதி. சீ.எம்.டீ.என்.கே. செனவிரத்ன அவர்கள், பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பம், -மேற்படி-
டீ.எச்.பீ. சரத்சன்தர அவர்கள், அத்தியட்சகர், பொதுபடுகடன் திணைக்களம், -மேற்படி-
கே.எம்.எம். சிறிவர்தன அவர்கள், அத்தியட்சகர், பொருளாதார ஆய்வுகள், -மேற்படி-
திருமதி. யூ.எல். முதுகல அவர்கள், அத்தியட்சதர், பொதுபடுகடன் திணைக்களம், அத்தியட்சகர், பொதுபடுகடன் திணைக்களம், -மேற்படி-
கலாநிதி. எம்.இஸட்.எம். ஆஸிம் அவர்கள், மேலதி அத்தியட்சகர், புள்ளிவிபரவியல், அத்தியட்சகர், பொதுபடுகடன் திணைக்களம், -மேற்படி-
கே.ஜீ.பீ. சிறிகுமார அவர்கள், பிரதி பணிப்பாளர், சட்டம் மற்றும் முறையீடுகள், அத்தியட்சகர், பொதுபடுகடன் திணைக்களம், -மேற்படி-

2016-08-12 ஷான்த பண்டார அவர்கள், பொது செயலாளர், தேசிய கொள்கைள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு
யூ.ஜீ. ரத்னசிறி அவர்கள், மேலதி செயலாளர், -மேற்படி-
எஸ்.எம். சன்தரபால அவர்கள், பிரதான நிதி உத்தியோகத்தர், -மேற்படி-
டபிள்யூ. எம்.ஆர். திஸாநாயக, பிரதான கணக்காளர், -மேற்படி-
திருமதி. பீ.ஏ.கான்தி, பிரதான கணக்காய்வாளர் உத்தியோகத்தர் -மேற்படி-
இன்திரஜித் குமாரசுவாமி அவர்கள், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
திருமதி. மனோஹரி ராமநாதன் அவர்கள், நியமிக்கப்பட்ட நாணயச் சபை உறுப்பினர், -மேற்படி-
சீ.பீ.ஆர். பெரேரா அவர்கள், நியமிக்கப்பட்ட நாணயச் சபை உறுப்பினர், -மேற்படி-

கே.டீ. ரணசிங்ஹ அவர்கள், உதவி ஆளுநர், -மேற்படி-
ஆர்.ஏ.ஏ. ஜயலத் அவர்கள், உதவி ஆளுநர், -மேற்படி-
கே.எம்.எம். சிறிவர்தன அவர்கள், உதவி ஆளுநர், பணிப்பாளர், பொருளாதார ஆய்வுகள், -மேற்படி-
பீ.டபிள்யூ.என்ஆர். ரொத்ருகு அவர்கள், பணிப்பாளர், உள்நாட்டு அலுவல்கள், மேற்படி-
திருமதி. சீ.எம்.டீ.என்.கே. செனவிரத்ன அவர்கள், பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பம், உதவி ஆளுநர், -மேற்படி-
என்.டபிள்யூ.ஜீ.ஆர்.டீ. நானயக்கார, நிதி ஆய்வாளர், உதவி ஆளுநர், -மேற்படி-
டீ.எச்.பீ. சரத்'ன்ர அவர்கள், அத்தியட்சகர், பொது படுகடன் திணைக்களம், உதவி ஆளுநர், -மேற்படி-
திருமதி. கே.என்.என்.எம். பண்டார அவர்கள், அத்தியட்சகர், ஊழியர் சேமலாப நிதியம், உதவி ஆளுநர், -மேற்படி-
திருமதி. யூ.எல். முதுகல அவர்கள், மேலதிக அத்தியட்சகர், பொது படுகடன் திணைக்களம், உதவி ஆளுநர், -மேற்படி-
கலாநிதி. எம்.இஸட்.எம். அசீம் அவர்கள், மேலதிக பணிப்பாளர், புள்ளிவிபரவியல், உதவி ஆளுநர், -மேற்படி-
கே.ஜீ.பீ. சிறிகுமார அவர்கள், பிரதி பணிப்பாளர், சட்டம் மற்றும் முறைப்பாடுகள், உதவி ஆளுநர், -மேற்படி-
எஸ். ஒபேசேகர அவர்கள், சிரேஷ்ட முகாமையாளர், பொது படுகடன் திணைக்களம், -மேற்படி-
எஸ். பத்மனாபன் அவர்கள், சிரேஷ்ட முகாமையாளர் பொது படுகடன் திணைக்களம், -மேற்படி-
டபிள்யூ.பீ.ஆர். ஹர்'பிரய அவர்கள், சிரே'ட உதவி அத்தியட்சகர், -மேற்படி-

2016-08-23	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது, மத்திய வங்கி முறிகள் தொடர்பில் பொது முயற்சிகள் மீதான குழுவின் அறிக்கையினை தயாரிப்பதற்கான உத்தேச எதிர்கால நடவடிக்கைகள் குறித்து கலந்துதுரையாடுதல்.
2016-09-08	கலாநிதி இன்திரஜித் குமாரசுவாமி அவர்கள், ஆளுநர், இலங்கை மத்திய வங்கி
2016-09-23	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது, பொது முயற்சிகள் மீதான குழுவினால் தயாரிக்கப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையினை கலந்துதுரையாடுதல்.
2016-10-05	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது, -மேற்படி-
2016.10.20	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது - இறுதி வரைவு அறிக்கையை ஆராய்வதற்கும் அங்கீகரிப்பதற்குமாக
2016.10.21	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது - இறுதி வரைவு அறிக்கையை ஆராய்வதற்கும் அங்கீகரிப்பதற்குமாக
2016.10.24	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது - இறுதி வரைவு அறிக்கையை ஆராய்வதற்கும் அங்கீகரிப்பதற்குமாக
2016.10.26	பாராளுமன்றக் குழு மாத்திரம் கூடியது - இறுதி வரைவு அறிக்கையை ஆராய்வதற்கும் அங்கீகரிப்பதற்குமாக

இதற்கு மேலதிகமாக இந்த அறிக்கையினை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட ஆவணங்கள் மற்றும் தொடர்புடைய உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலையில் வரவழைக்கப்பட்டு இந்த பிரச்சினைக்குரிய விடயம் தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் உள்ளடக்கப்பட்ட சொற்பிறழாத அறிக்கைகள் (Verbatim Reports) கீழே குறிப்பிடப்பட்டவாறு பின்னிணைப்புக்களாக இந்த அறிக்கையுடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

1. **<u>பின்னிணைப்பு 01</u>** - இலங்கை மத்திய வங்கியின் பொது படுகடன் திணைக்களத்தினால் 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தில் இடம்பெற்றிருந்த திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் 2016 யூன் 29 ஆந் திகதி விசேட கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட பின்னர் 2016 செப்தெம்பர் 23 வரையான காலத்தில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினாலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினாலும் வெளிப்படுத்தப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் அந்த அறிக்கைக்கு மேற்கொள்ளப்பட்ட நாளதுவரையாக்கப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை மற்றும் நாளதுவரையாக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கையில் உள்ளடங்கிய ஒவ்வொரு பந்தியினதும் துல்லியத்தன்மையை பரிசோதிக்கின்ற அட்டவணை (பக்கம் ……….. முதல் ……………..வரை)
2. **<u>பின்னிணைப்பு 02</u>** – மத்திய வங்கி முறிகள் வழங்கல் தொடர்பில் புலனாய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக கௌரவ பிரதம் அவர்களால் நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை
3. **<u>பின்னிணைப்பு 03</u>** -2016.07.05 ஆந் திகதி மத்திய வங்கி முறிகள் வழங்கல் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவுக்கு மேற்கொள்ளப்பட்ட விளக்கமளித்தல்கள் (Presentation) (பக்கம் ……….. முதல் ……………..வரை)
4. **<u>பின்னிணைப்பு – 04</u>** 2016 யூலை 07 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
5. பின்னிணைப்பு – 05 2016 ஆகஸ்ட் 12 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
6. **<u>பின்னிணைப்பு – 06</u>** 2016 செப்தெம்பர் 08 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
7. **<u>பின்னிணைப்பு – 07</u>** 2008 சனவரி 07 மற்றும் 2008 ஒக்தோபர் 07 ஆகிய திகதிகளில் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை பத்திரம் மற்றும் நாணயச் சபையின் பணிக் குறிப்புக்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
8. **<u>பின்னிணைப்பு – 08</u>** மத்திய வங்கியின் பொதுபடுகடன் முகாமைத்துவ திணைக்களத்தின் செயற்பாட்டு கைநூலிலிருந்து பெயர்த்தெடுக்கப்பட்ட பகுதி (பக்கம் ……….. முதல் ……………..வரை)
9. **<u>பின்னிணைப்பு – 09</u>** 2015 – 2016 ஆம் ஆண்டுகளில் மத்திய வங்கியின் முறிகள் வழங்கல் தொடர்பில் பாராளுமன்றக் குழுவின் அறிக்கையினை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக திடமிடப்பட்டடிருந்த எதிர்கால நடவடிக்கைகள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
10. **<u>பின்னிணைப்பு – 10</u>** 2015 பெப்ரவரி முதல் 2016 மே வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியின் பொது படுகடன் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் விசேட அறிக்கைக்காக மத்திய வங்கியின் ஆளுநரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதில்களிற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கருத்துரைகள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
11. **<u>பின்னிணைப்பு – 11</u>** பாராளுமன்றக் குழுவினால் இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த வினாக்கொத்து மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த பதில்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)

12. **<u>பின்னிணைப்பு – 12</u>** பாராளுமன்றக் குழுவினால் நிதி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த வினாக்கொத்து மற்றும் அதற்காக வழங்கப்பட்டிருந்த பதில்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
13. **<u>பின்னிணைப்பு – 13</u>** 2016.06.08 ஆந் திகதி மத்திய வங்கியின் உத்தியோகத்தர்கள் பாராளுமன்றக் குழுவின் முன்னிலைக்கு வரவழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் வழங்கப்பட்ட வாய்மொழி மூலமான சாட்சியங்கள் (பக்கம் ……….. முதல் ……………..வரை)
14. **<u>பின்னிணைப்பு – 14</u>** 2016.09.23 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்றக் குழு கூட்டத்தின் சொற்பிறழாத அறிக்கை (ஏநசடியவைஅ சுநிழசவ) (பக்கம் ……….. முதல் ……………..வரை)
15. **<u>பின்னிணைப்பு – 15</u>** 2016.10.05 ஆந் திகதி இடம்பெற்ற பாராளுமன்றக் குழு கூட்டத்தின் சொற்பிறழாத அறிக்கை (Verbatim Report) (பக்கம் ……….. முதல் ……………..வரை)
16. **<u>பின்னிணைப்பு – 16</u>** 2015 பெப்ரவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரையான காலத்தில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த திறைசேரி முறிகள் வழங்கல் தொடர்பில் பொது முயற்சிகள் மீதான பாராளுமன்றக் குழுவினால் தயாரிக்கப்பட்டு 2016 செப்தெம்பர் 23 ஆந் திகதி பாராளுமன்றக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முதலாவது வரைபு அறிக்கை (பக்கம் ……….. முதல் ……………..வரை)
17. **<u>பின்னிணைப்பு – 17</u>** 2016 செப்தெம்பர் 25 ஆந் திகதி சன்டே ஒப்சவர் செய்திப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருந்த பர்பவுல் டிரசரீஸ் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள்.
18. **<u>பின்னிணைப்பு – 18</u>** பர்பவுல் டிரசரீஸ் கம்பனி சார்பில் மத்திய வங்கியின் முறிகளைக் கொள்வனவு செய்வதற்காக இலங்கை வங்கியின் தலையீடு தொடர்பில் அர்னஸ்ட் என்ட் யங் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வு அறிக்கை.
19. **<u>இணைப்பு 19 -</u>** 2016.10.20 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)
20. **<u>இணைப்பு 20 -</u>** 2016.10.21 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)
21. **<u>இணைப்பு 21 -</u>** 2016.10.24 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)
22. **<u>இணைப்பு 22 -</u>** 2016.10.26 ஆம் திகதிய குழுவின் சொல்லுக்குச்சொல் அறிக்கை (Verbatim Report)
23. **<u>இணைப்பு 23 -</u>** 2008 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கி நாணயச் சபையின் தீர்மானங்கள் / மத்திய வங்கியின் இணையத்தளத்தில் முறிகளின் அடிப்படைப் பண்புகள் பற்றிய விளக்கமளித்தல்
24. **<u>இணைப்பு 24 -</u>** 2015 பெப்ரவரி 27 விலைக் கேட்பு அறிக்கை
25. **<u>இணைப்பு 25 -</u>** கலாநிதி திரு அசீம் அவர்களின் வாய்மூல சாட்சியம்

2 மாண்புமிகு பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹ அவர்களால் முறிகளின் வெளியீடு தொடர்பில் விசாரணை செய்வதற்கு நியமிக்கப்பட்ட மூவர் அடங்கிய குழுவின் அறிக்கை – (பின்னிணைப்பு – 02)

கொள்கைத் திட்டமிடல் பொருளாதார அலுவல்கள் மற்றும் சிறுவர் மற்றும் இளைஞர் விவகார மற்றும் கலாசார அமைச்சுப் பதவியினை வகிக்கும் மாண்புமிகு அமைச்சரால் இலங்கை மத்திய வங்கியின் அரசப் பொதுப்படுகடன் திணைக்களத்தால் ரூபா 01 பில்லியன் பெறுமதியான முறிகளை வெளியிடுவதற்கான கட்டளையை வழங்குவதற்கு காரணமாக அமைந்த விடயங்கள் மற்றும் நிகழ்வுடன் தொடர்புடைய சம்பவக் கோவை மற்றும் புள்ளிவிபரவியல் பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அறிக்கையிடுவதற்கும் 2012 சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து அந்த பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட திகதி வரை நாட்டின் நிதிக் கேள்வி, முறிகளை வெளியிடல், ஏலமிடல் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து விசாரணை செய்வதற்காக சட்டத்தரணி காமினி பிடபத அவர்களின் தலைமையில் சட்டத்தரணி மஹேஷ் கழுகம்பிடிய, சட்டத்தரணி சந்திமால் மெண்டிஸ்

ஆகியோரின் அங்கத்துவத்துடன் கூடிய மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த மூவர் அடங்கிய குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையானது மாண்புமிகு லக்ஷ்மன் கிரிஎல்ல அவர்களால் 2015.05.19 ஆந் திகதி பாரளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. (பின்னிணைப்பு 2)

மேற்கூறப்பட்ட மூவர் அடங்கிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணையூடாக பின்வரும் விடயங்கள் விசேடமாக அவதானிக்கப்பட்டிருந்தன.

- Perpetual Treasuries கம்பனியின் விலைமனுக் கோரல் ஒழுங்கின் பிரகாரம் இச் சந்தர்ப்பத்தில் அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக்களில் 50% இனை கொள்வனவு செய்தல் அசாதாரண நிலையொன்றானமையால், அது தொடர்பில் அரச அதிகாரத்தினூடாக முழுமையான கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும்,
- இலங்கை வங்கியின் பரிமாற்றல் அறையில் (Dealer Room) இடம்பெறும் செயற்பாடுகள் தொடர்பில் தடயவியல் கணக்காய்வொன்றினை (forensic Audit) மேற்கொள்வதற்கு இலங்கை வங்கியின் பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்,
- இலங்கை மத்திய வங்கியின் அரசப் பொதுபடுகடன் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பிலும் முதலாந்தர விற்குநர்களிடையே இடம்பெறுகின்ற செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பில் உரிய கண்காணிப்பினை மேற்கொள்ள முறையான இயந்திரமொன்று தாமதமின்றி செயற்படுத்தப்பட வேண்டியமை,
- பெரும்பாலான முதலாந்தர விற்குநர்கள் வெளியிட்ட கருத்துக்களின் பிரகாரம் மத்திய வங்கியின் புறத்துண்டுகளுக்குரிய தகவல்களுடன் தொடர்புடைய ஆவணங்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக தமது குழுவினால் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், அவ்வாறான இரகசியத் தன்மைவாய்ந்த தகவல்கள் வெளியாகியுள்ளது. எனும் கூற்றின் உண்மைத்தன்மையை கண்டறிவதற்கும் மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களின் பணிகளை கண்டறிவதற்கும் உரிய அதிகாரமொன்றினால் மொத்தக் கணக்காய்வொன்று மேற்கொள்ள வேண்டியுள்ளமை.

மேற்கூறப்பட்ட செயற்பாட்டினால் நாட்டிற்கு ஏதேனும் நட்டமொன்று ஏற்படுமா என்பதை கண்டறிவதற்கு அரசிற்கு அல்லது பாரளுமன்றத்திற்கு அல்லது மக்களின் முன்னேற்றத்திற்கான ஏனைய அமைப்பொன்றிற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு எதுவித தடையும் இல்லாதிருந்தமை சட்டத்தரணி காமினி பிடபத அவர்களின் தலைமையிலான மூவரடங்கிய குழு தமது அறிக்கை மூலம் அறிவிப்பதுடன், நாட்டின் நிதிக் கட்டுப்பாட்டின் பொறுப்பு மற்றும் பரிசுத்தத்தன்மை தொடர்பில் மக்களால் வைக்கப்பட்டுள்ள எதிர்பார்ப்புக்கள் இலங்கை மத்திய வங்கியால் அவ்வாறே நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை பரிசோதிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களின் இலத்திரனியல் பாதச்சுவடு (Digital Foot Prints) தொடர்பிலும் அவதானித்தல் உசிதமானது என சுட்டிக்காண்பிக்கப்படுகிறது.

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மத்திய வங்கியின் முறிகளின் வெளியீடு தொடர்பில் உரிய அரச அதிகாரமொன்றினால் முழுமையான அவதானிப்பு மேற்கொள்ளப்பட வேண்டுமென மாண்புமிகு பிரதமர் மற்றும் கொள்கைத் திட்டமிடல் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சரால் நியமிக்கப்பட்ட மேற்கூறப்பட்ட மூவரடங்கிய குழுவினால் கண்காணிக்கப்பட்டிருந்தது.

3. இலங்கை மத்திய வங்கியால் திறைசேரி முறிகளை வெளியிடும் செயன்முறையை அறிமுகப்படுத்தல்

இலங்கையின் பொருளாதார மற்றும் விலை உறுதிப்பாட்டினை பேணிச் செல்வதை பிரதான நோக்காகக் கொண்டு தாபிக்கப்பட்டுள்ள இலங்கை மத்திய வங்கி, ஐவரடங்கிய இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் தலைவரான மத்திய வங்கியின் ஆளுநரால் மேவுகை செய்யப்படுகின்றது. (இணைப்பு 1 இன் இணைப்பு VII இனை பார்க்க, பக்கம் 67) மேலும் நாணயச் சட்ட அதிகாரச்சட்டத்தின் 19(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் இலங்கை மத்திய வங்கியின் பிரதான நிறைவேற்று அதிகாரியுமாவார். பொதுத் திறைசேரியின் செயற்பாட்டுத் திணைக்களத்தின் அறிவிப்பின் அடிப்படையில் அரசின் எதிர்வரும் மாதங்களின் நிதித் தேவைப்பாட்டினை பூர்த்தி செய்வதற்காக திறைசேரி பிணையங்கள் (Treassury Securities) அதாவது திறைசேரி உண்டியல்கள் (Treasury Bills) மற்றும் திறைசேரி முறிகள் (Treasury Bonds) வெளியிடல் தொடர்பான பொறுப்பு இலங்கை மத்திய

வங்கிக்குரியதாகும். (பின்னிணைப்பு 1 இன் பின்னிணைப்பு ix – பக்கம் 69 இனை பார்க்க) வருடமொன்றிற்கு குறைந்த காலத்தில் முதிர்வடையும் (Maturity) விதத்தில் திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்படுவதுடன், வருடமொன்றிற்கு மேற்பட்ட காலத்தில் முதிர்வடையும் விதத்தில் திறைசேரியின் முறிகள் வெளியிடப்படுகின்றன. இம் முறியொன்றின் முகப் பெறுமதி (face Value) ரூபா 100 பெறுமதியுடையனவாகும். இதன் போது மத்திய வங்கியால் அரசிற்கு நிதி வழங்கல் இடம்பெறுவதுடன், நிதிச்சட்ட அதிகாரச்சட்டத்தின் 106(1) ஆம் பிரிவின் (பின்னிணைப்பு 1 இன் பின்னிணைப்பு x இணைப் பார்க்க, பக்கம் 70) பிரகாரம் இலங்கை மத்திய வங்கி அரசின் பிரதிநிதியாக செயற்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப் பிணையங்களைக் கொள்வனவு செய்வதற்கு தகுதி வாய்ந்த 16 நிறுவனங்கள் 2015 ஆம் ஆண்டின் இறுதியளவில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் அவற்றுள் ஒரு நிறுவனம் தங்கியுள்ளது. (பின்னிணைப்பு 1 இன் பின்னிணைப்பு vi இணை பார்க்க, பக்கம் 65) அந் நிறுவனங்களிடையே அரசு மற்றும் தனியார் நிறுவனங்களும் உள்ளன. மேலும் தனியார் நிறுவனங்களும் உள்ளன. மேலும், ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் முதலாந்தர சந்தையில் திறைசேரிப் பிணையங்களைக் கொள்வனவு செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3.1 இலங்கை மத்திய வங்கியின் முறிகளை வெளியிடுவதற்காக பின்பற்றப்படும் நடைமுறைகள்

இலங்கை மத்திய வங்கியால் 2015 பெப்ரவரி 27 ஆந் திகதி வரை முறிகளை வெளியிடுவதற்காக 2 நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

3.1.1 முதலாவது முறைமை (ஏல முறைமை)

திறைசேரி முறிகளை வெளியிடல் தொடர்பில வெளியிடப்பட்ட அறிவித்தலொன்றின் பிரகாரம் மேற்குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட முதலாந்தர விற்குநர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோரி அதன் பிரகாரம் மேல் குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட முதலாந்தர விற்குநர்களிடம் விலைமனுக்களைக் கோரி அதன் பிரகாரம் முறிகளை ஏலமிடல் (auction) மூலம் தேவையான நிதித் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதாகும்.

3.1.2 இரண்டாவது முறைமை (நேரடி முறைமை ஃ பிரத்தியேக வெயியீட்டு முறைமை)

நேரடியாகவே முதலாந்தர விற்குநருக்கு பிணையங்களை வழங்குதலே பிரத்தியேக வெளியீட்டு முறையாகும். இவ் இரண்டாவது முறையில் இடம்பெறுவது மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தால் வெளியிடப்படுகின்ற எடையிடப்பட்ட சராசரி விளைவு வீதத்தின் (Weighted Average Yield Rate) முதல் நிலை விற்குநர்களுக்கு உண்டியல்களைக் கொள்வனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டதாகும்.

இதன் போது இந்த எடையிடப்பட்ட சராசரி விளைவு வீதத்தினை கணிப்பிடல் 02 முறைகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. அதின் ஒரு முறைமையானது மிகவும் கிட்டிய கடந்தக் காலப்பகுதியினுள் மேற்கொண்ட முறிகளின் ஏலத்தின் போது சமனான முதிர்வுத் திகதியுடைய (Maturity Period) முறிகளுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விளைவு வீதத்தில் திடமற்ற சாதாரணப் பெறுமதியை விளைவு வீதமாக கொள்ளலாகும். மற்றைய முமைமையானது இரண்டாம் நிலைச் சந்தையில் (Secondary Market) நிலவும் சாதாரண முதிர்வுக் காலமுடைய முறிகளின் விளைவு வீதத்தினை அடிப்படையாகக் கொண்டு மீண்டும் விளைவு வீதத்தினைக் கணிப்பிடலாகும்.

நேரடி வழங்கல் முறைமை ஏலத் திகதியைத் தவிர மற்ற அனைத்து நாட்களும் திறந்திருப்பதுடன், முறிகளைக் கொள்வனவு செய்ய விருப்பமுடைய முதல்நிலை விற்குநர்களுக்கு அரசப் பொதுப்படுகடன் திணைக்களத்தால் முன்னர் தீர்மானிக்கப்பட்ட விளைவு வீதத்தின் கீழ் விற்பனைக்குள்ள முறிகளைக் கொள்வனவு செய்ய விண்ணப்பிக்க முடியும். திறைசேரி முறிகளின் வெளியீட்டின் போது பின்பற்றப்படும் நடைமுறை அரசப் பொதுப்படுகடன் திணைக்களத்தின் செயற்பாட்டுக் கையேட்டில் (Operations Manual of Public Debt Department) குறிப்பிடப்பட்டிருந்தது.

3.2 முறிகளை வழங்குதலும் நிதிச் சந்தை வட்டி வீதத்தின் தாக்கமும்

திறைசேரி முறிகளின் வட்டி வீதத்திற்கு (Coupon Rate / Interst Rate) பல்வேறு முதிர்வுக் காலங்களுக்காக வழங்கப்படுகின்றது. அவ்வாறு வழங்கப்படும் முறிகளின் முகப்பெறுமதியின் பிரகாரம் வட்டி வீதத்தின் அடிப்படையில் அரையாண்டிற்கொருமுறை அரசினால் வட்டி செலுத்தப்படும். (இணைப்பு 1 இன் இணைப்பு XI இனைப் பார்க்க - பக்கம் 71) முறிகளின் ஏலத்தின் போது விற்குநர்களால் மத்திய வங்கியால் வெளியிடப்படுகின்ற வட்டி வீதத்தின அடிப்படையில் பல்வேறு விலைகளின் கீழ் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படுகின்றன. அவ் விலைமனுக்களை அதிக விலைக்கு (Premium) அதாவது முகப்பெறுமதியிலும் உயர்வான விலைக்கு, சமனான விலைக்கு (at Par) அதாவது முகப்பெறுமதிக்கு சமனான விலைக்கு மற்றும் குறைந்த விலைக்கு (Discount) அதாவது முகப்பெறுமதியிலும் குறைவான விலைக்குமாக சமர்ப்பிக்கப்படுகின்றது. இதன் போது அவர்களால் ஆகக் கூடிய விலைக்கு கேள்வி கோரப்பட்டால் முறியின் விளைவு வீதம் வட்டி வீதத்தினை விடக் குறைவான பெறுமதியினை அடைவதுடன், சமனான விலைக்கு கோரினால் வட்டி வீதத்திற்கு சமனான பெறுமானமொன்றும், குறைவான விலைக்கு கோரினால் வட்டி வீதத்தை விட உயர்வான பெறுமதியையும் அடையும். அதன் பிரகாரம் வட்டி வீதத்தை விட உயர்வாக உள்ள விளைவு வீதமொன்று நிலவும் சந்தர்ப்பத்தில் முறிகள் முகப்பெறுமதியை விடக் குறைவான விலைக்கு வெளியிடப்படுகின்றமையும், வட்டி வீதம் மற்றும் விளைவு வீதம் சமனாக உள்ள போது முறிகள் முகப்பெறுமதிக்கு வழங்கப்படுகின்றமையும் வட்டி வீதத்தினை விட குறைந்த மட்டத்தில் காணப்படும் சந்தர்ப்பங்களில் முகப் பெறுமதியை விட கூடிய விலைக்கு வழங்கப்படுகின்றமையையும் காண முடியும். அதன் பிரகாரம் வட்டி வீதத்தினை விடக் குறைவான விளைவு வீதத்திற்கு முறிகளை வழங்கியமையூடாக கூடிய விலையொன்று கிடைப்பதுடன், அதனால் அரசுக்கு மேலதிக நிதி நலனொன்றும் கிடைக்கும். அவ்வாறே வட்டி வீதத்தினை விட கூடிய விளைவு வீதத்திற்கு அதாவது கழிவு வீதத்திற்கு முறிகளை வழங்கியமையால் அரசுக்கு நிதி ரீதியான நட்டமொன்று ஏற்படும் வட்டி வீதத்திற்குச் சமனான விளைவு வீதத்திற்கு முறிகளை வழங்கினால் அரசிற்கு மேலதிக நலனொன்றோ நட்டமொன்றோ ஏற்படாது

<u>மேலே கூறப்பட்ட 3.2 ஆம் பந்திக்கு கௌரவ கலாநிதி ஹர்ஷ த சில்வா, அஜித் பீ. பெரேரா, அஷோக் அபேசிங்க, சுஜீவ சேனசிங்க, ஹெக்டர் அப்புஹாமி, வசந்த அலுவிஹாரே, ஹர்ஷண ராஜகருணா ஆகிய கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் இணக்கம் தெரிவிக்கவில்லை என்பதோடு, மேற்படி பந்தியை பின்வருமாறு திருத்துதல் வேண்டுமென அவர்கள் இணக்கம் தெரிவித்தனர்.</u>

"வட்டி வீதத்திற்கு சமமான விளைவு வீதத்திற்கு முறிகள் வழங்கப்படுமெனில் அரசாங்கத்திற்கு மேலதிக நிதிசார் இழப்பு நேரிடும்". என்ற விடயத்துடன் இணங்கவில்லை.

ஒட்டுமொத்தமாக கழிவு விலையில் முறி வழங்கப்படுவதன் ஊடாக அரசாங்கத்திற்கு இழப்பு/நட்டம் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஏற்படலாம் என்ற கூற்றை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கான காரணம், ஓர் ஆண்டுக்குக் குறைந்த முறியெனில் (அதாவது திறைசேரி உண்டியல்) ஒருபோதும் முகப்புப் பெறுமதிக்கு விற்பனை செய்ய முடியாது. ஓர் ஆண்டுக்கு மேற்பட்ட

முறிக்கு வட்டி அல்லது கூப்பன் இணைக்கப்பட்டிருப்பின் அதனை நூறு ரூபா முகப்புப் பெறுமதிக்கு விற்பனை செய்ய முடியுமாயிருப்பது ஒரேயொரு சந்தர்ப்பத்தில் மட்டுமேயாகும். அச்சந்தர்ப்பம் யாதெனில், முறியின் ஊடாகக் கிடைக்கின்ற வட்டி சந்தையில் அதே காலவீச்சிடைக்கு இரண்டாந்தரச் சந்தையில் கிடைக்கின்ற வட்டிக்கு சமமாயிருப்பின் மட்டுமேயாகும். இரண்டாந்தரச் சந்தையில் மேற்படி முறிக்கு சமமான முன்னர் எஞ்சிய முறிகள் இருப்பின், அந்த முறிகளுக்கு இரண்டாந்தரச் சந்தையில் கிடைக்கின்ற விளைவு வீதம் இம்முறியின் வட்டியை விட அதிகமாயிருப்பின், அப்போது முறியை கழிவுக்கு மாத்திரமே விற்பனை செய்ய முடியும். முகப்புப் பெறுமதி நூறுக்கு குறைவானதா அல்லது அதிகமானதா என்பது தீர்மானிக்கப்படுவது மேற்படி முறிக்கு ஏற்புடையதான வட்டி வீதம் மற்றும் சந்தையில் அதற்குச் சமமான முறிகளுக்கு உள்ள விளைவு வீதத்தின் அடிப்படையிலாகும்.

4. திறைசேரி முறி வழங்கல் தொடர்பாக மத்திய வங்கி பின்பற்றிய கொள்கைகள், வழிமுறைகள் மற்றும் சட்டரீதியான பின்புலம்

4.1 முறிகளை வழங்குதல் ஏலவிற்பனை மூலமாகவா அல்லது நேரடி முறையின் மூலமாகவா என்ற கொள்கைத் தீர்மானத்தை எடுத்தல் தொடர்பாக மத்திய வங்கியினால் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட ஆவணங்கள்

இலங்கை மத்திய வங்கியினால் முறிகளை வழங்குதல் 1997 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையின் பணிப்பாளர் சபைக் குறிப்பு இலக்கம் MB/PD/05/18/97 இன் (இணைப்பு - 1 இன் இணைப்பு XII ஐப் பார்க்கவும் - பக்கம் 72) பிரகாரம் 1997 மார்ச் மாதம் முதல் திறைசேரி முறி ஏலவிற்பனையின் மூலம் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் சந்தையின் தேவையான அளவு நிதியில்லாத சந்தர்ப்பங்களின் போது அல்லது வட்டி விகிதம் வரையறையின்றி உயர்வடைந்து செல்லும் சந்தர்ப்பத்தின் போது ஏலத்தின் மூலம் வழங்குவதற்கு முடியாதுள்ளபோது நிதியினை வழங்குவதற்காக ஊழியர் சேமலாப நிதியம் பயன்படுத்தப்பட வேண்டியிருந்தமையும் அந்தக் குறிப்பில் காண்பிக்கப்பட்டமை 2015 - 2016 ஆம் ஆண்டுகளில் முறிகளை வழங்கல் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மூலம் (இணைப்பு -1) சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

4.1.1 பின்னர் நாணயச்சபைக் குறிப்பு இலக்கம் MB/PD/1/26/2008 (2008.01.07) (இணைப்பு - 7) மூலம் 2008 ஆம் ஆண்டின் போது நேரடி முறையின் மூலம் நிதியத்தின் தேவையினை அடைந்து கொள்வதற்கு[1] தீர்மானிக்கப்பட்டிருந்தமையும் பின்னர் நாணயச் சபை குறிப்பு இலக்கம் MB/PD/25/20/2008 (2008.10.07) (இணைப்பு -7) இன் மூலமும் நாணயச் சபையினால் இரண்டாம் சந்தையில் காணப்படுகின்ற வட்டி விகிதாரசாரத்தை விட 0.05 சதவீத அளவில் வட்டி விகிதாசாரத்துடன் முறிகளை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு வழங்குவதன் ஊடாக சந்தையின் திரவத்தன்மை ஏற்படுத்துவதற்காக மேலும் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.[2]

4.1.2 MB/PD/25/20/2008 (2008.10.07) நாணயச் சபை தீர்மானத்தில் Other Captive Sources என்ற கருத்தை உள்ளடக்கியது எவ்வாறானது என செயற்குழுவினால் மத்திய வங்கி உத்தியோகத்தரிடம் விசாரணை செய்யப்பட்டிருந்ததுடன், ஊழியர் சேமலாப நிதியம் மாத்திரமன்றி உரிய காலத்தில் நாட்டின் நிதித் தேவையினை பூர்த்தி செய்யக்கூடிய ஏனைய மூலத்தையும் (Other Captive Sources) கவனத்திற் கொள்ள வேண்டியிருந்தமை தீர்மானிக்கப்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. [3]

---

[1] 3 மாத காலத்திற்கு

[2] நாணயச் சபை பத்திர இலக்கம் MB / P D / 01/ 26/ 2008 இல் " the monetary board approval is sought for the proposed rate structure to be used for direct placements of treasury bonds and rupee loans in respect of captive investors such as EPF, NSB and ETF during January - April 2008" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

நாணயச் சபை பத்திர இலக்கம் MB / P D / 01/ 26/ 2008 மற்றும் 2008.05.02 ஆம் திகதிய " the monetary board approval is sought for the proposed rate structure to be used for direct placements of treasury bonds and rupee loans in respect of captive investors such as EPF, NSB and ETF during January - April 2008" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது

உள்நாட்டு படுகடன் திணைக்களத்தின் பணிப்பாளரினால் 2016 அக்டோபர் மாதம் 24 ஆம் திகதி நடாத்தப்பட்ட குழுக் கூட்டத்திற்கு தொலைநகல் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட கடிதம் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருப்பது, மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச உரிமையைக் கொண்ட நிறுவனங்களுக்கு நேரடி முறையில் திறைசேரி முறிகளை வெளியிடுவதற்கு மற்றும் செலுத்தப்படுகின்ற வட்டி வீதத்துக்கு நாணயச் சபையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது 2008 மே மாதம் முதல் டிசம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு என்றாகும். அதற்கு 2008 டிசம்பர் மாதத்தின் பின்னர் கால நீடிப்புச் செய்யப்படவில்லை என்று மேற்படி கடிதம் மூலம் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(இணைப்பு - 23 - 2016 ஒக்டோபர் மாதம் 24 ஆம் திகதிய மத்திய வங்கியின் உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவத் திணைக்களத்தின் அத்தியட்சகர் ஒருவர் கையொப்பமிட்டுள்ள கடிதம்.)

[3] "Except for the EPF, All other captive sources need to come to the auction through a primary dealer" எனக் குறிப்பிடப்படுவதுடன், முதனிலை கொள்வனவாளர்களுக்கு அவர்களின் கொடுக்கல் வாங்கல்களை நேரடி முறையின் ஊடாக அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாக குறிப்பிடப்படவில்லை.

4.2 இலங்கை மத்திய வங்கியினால் முறிகளை வழங்குவதற்கான கொள்கை அடிப்படையிலான தீர்மானங்களை அமுல்படுத்தல் தொடர்பாக மத்திய வங்கியிள் உள்நாட்டுக் கடன் முகாமைத்துவம் திணைக்களத்தின் செயற் கைநூலின் பாவனை - [4]

இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுக் கடன் முகாமைத்துவ திணைக்களத்தின் மூலம் செயற் கைநூலில் முறிகள் விநியோகித்தல் தொடர்பான கொள்கை ரீதியான தீர்மானங்களை அமுல்படுத்துவதற்காக பரிசீலனை செய்யப்பட்டமையும் அது இறுதித் தடவையாக 2013 யூலை 31 ஆந் திகதியே நாளதுவரையாக்கப்பட்டமையும் மத்திய வங்கி உத்தியோகத்தரால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது.[5] இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்படுகின்ற மத்திய வங்கியினர் செயற்பாடுகளுக்குரிய கொள்கை ரீதியான தீர்மானத்தில் உள்நாட்டுக் கடன் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அத்திணைக்களத்தினால் இந்த செயற்கைநூலைத் திருத்துதலோ அல்லது நாளதுவரையாக்கலோ செய்யப்படாதிருந்தமையும் இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தரால் மேலும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை மத்திய வங்கியின் மூலம் முறிகள் விநியோகிக்கும் போது பின்பற்றப்பட வேண்டியதாக நேரடி முறைமை ஏலவிற்பனை முறை என்ற கொள்கை ரீதியினை தீர்மானம் தொடர்பாக பயன்படுத்தப்பட்ட மேற்கூறப்பட்ட செயற்கைநூலில் உரித்தாக்கப்பட்ட பகுதி இந்த அறிக்கையின் இணைப்பு 8 ஆகக் காண்பிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 2008 ஒக்தோபர் 07 ஆந் திகதிய நாணயச் சபை குறிப்பின் பிரகாரம் செயற்கைநூல் இதுவரை திருத்தப்படாதிருந்தமை செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது இலங்கை மத்திய வங்கி உததியோகத்தரால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அது நாணயச் சபை தீர்மான செயற்கைநூலிற்குரிய பிரிவின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதாகவே கருதப்படும் என மத்திய வங்கி அதிபதியால் செயற்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த செயற் கைநூலின் 8 ஆவது பக்கத்தின் B(i) இல் குறிப்பிடப்பட்ட முறிகளை விநியோகிக்கும் போது நேரடி முறைமை மற்றும் ஏலவிற்பனை முறை பின்பற்றப்பட வேண்டிய முறை தொடர்பாக செயற்குழுவினால் இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தரிடம் விசாரணை செய்யப்பட்டிருந்ததுடன் மத்திய வங்கி உத்தியோகத்தரின் படி அது “as much as possible through auction” என்ற ஏலவிற்பனை திட்டத்தின் ஊடாக எவ்வளவு அளவில் முறிகள் விநியோகிக்கப்பட வேண்டியது என தீர்மானிக்கப்பட்டிருந்தமையும், அது கிரயம் ஆபத்து என்ற விடயங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றமை சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக மேலும் விடயங்களைக் காண்பித்து இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர் மத்திய வங்கியின் உள்நாட்டுக் கடன் முகாமைத்துவ திணைக்களத்தில் கடன் பெற்றுக்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டத்தின் மத்தியகால கடன் முகாமைத்துவ தந்திரோபாயத்தில்

[4] உள்நாட்டுப் படுகடன் முகாமைத்துவத் திணைக்களத்தின் தொழிற்பாட்டுக் கைநூலின் 8 ஆம் பக்கத்தின் B1 இல் குறிப்பிடப்பட்டள்ள முறிகள் வழங்கல் முறை வருமாறு.

“Front office has to make arrangements to meet financial needs as much as possible through auctions. The balance fund requirements of the government as indicated in the approved borrowings programme may be arranged through private placement with PDS” இந்த நிலைப்பாடுக்கு நாணயச் சபையின் அங்கீகாரம் கிடைத்திருப்பதற்கான சாட்சிகள் முன்வைக்கப்படவில்லை.

[5] எனினும் அவ்வாறு காலத்திற்கு ஏற்றவாறு இற்றைப்படுத்தல் இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

(Medium Term Debt management Strategy) குறிப்பிடப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் கிரயம் மற்றும் அபாயம் எவ்வாறானது என நிர்ணயிக்கப்படுவதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் செயற்கைநூலின் 3 ஆவது பக்கத்தில் நிதி வழங்கப்படுகின்ற முறைகளாக

A. Auctions

B. Private Placements

C. Rupee Loans

எனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அதன் மூலம் முதலாவதாக ஏலவிற்பனை முறையும் இரண்டாவது தனியார் விநியோக முறையும் மூன்றாவதாக ரூபாய்க் கடனுமாக பின்பற்றப்பட வேண்டியமை ஒழுங்கு முறையில் இல்லாதிருந்ததாக மத்திய வங்கி உத்தியோகத்தரால் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது.

மேலும் செயற் கைநூலின் முதலாவது பக்கத்தில் குறிப்பிடப்பட்ட *"The front office of the PDD is mainly responsible for mobilizing required funds for the government at the lowest possible cost with a reasonable degree of risk through implementation of domestic borrowing programme approved by the Monetary Board"* என்பவற்றைத் தவிர்த்து காண்பிக்கப்படும் அரசாங்கத்தின் நிதித் தேவையின் ஆகக்குறைந்த கிரயத்தின் கீழ் வழங்கப்பட வேண்டியிருந்தமையைக் காண்பித்திருந்ததாக அந்த உத்தியோகத்தர் சுட்டிக்காட்டியிருந்தார். அதன் போது அரசாங்கத்திற்கும் மத்திய வங்கியின் செயற்பாட்டிற்கும் பாகமற்ற முறையில் நிதித் தேவைகள் வழங்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்தது. [6]

---

[6] நாணயச் சபையின் முறையியல் மற்றும் தொழிற்பாட்டுக் கைநூலுக்கு அமைய ஏலவிற்பனை முறை மூலம் முடிந்தளவுக்கு நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதும் எஞ்சியதை தனிப்பட்ட வழங்கல் முறை ஊடாக பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் அச்சந்தர்ப்பத்திலிருந்து விடயங்களுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சரியான முறையாகக் கருதப்பட்டிருப்பது தனிப்பட்ட வழங்கல் முறை என்பதும், இந்த விசாரணைக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்துள்ள அறிக்கை மூலம் தனிப்பட்ட வழங்கல் முறை அங்கீகரிக்கப்பட்ட முறை என்பதும் விபரிக்கப்பட்டிருப்பதும் தெரிய வருகின்றது.

நாணயச் சபையின் பத்திரங்கள் இரண்டுக்கு அமைய MB/PD/01/26/2008 மற்றும் MB/PD/11/16/2008 அவசர சந்தர்ப்பங்களில் 3 மாத காலப்பகுதிக்கு நேரடி முறைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதிச் சபை பத்திரத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது EPF, ETF, NSB உரிமையாளர்களின் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் பணவீக்கமும் கவனத்தில் கொள்ளப்பட்டாகும். இதன் போது விசேடமாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயம் மேற்படி நேரடி வழங்கலை (CAPITIVE SOURCE) அரசாங்கம் அல்லது அரசாங்கத்தினால் நிருவகிக்கப்படுகின்ற நிறுவனங்களான EPF, ETF, NSB போன்ற நிறுவனங்களுக்குப் பெற்றுக் கொடுப்பதாகும். மேற்படி நேரடி வழங்கல் முதனிலை கொள்வனவாளர்களுக்கு வழங்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதா என்பது எந்தவொரு ஆவணத்திலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டில்லை. அதற்கமைய 2008 முதல் 2015 வரையான காலப்பகுதிக்குள் தனிப்பட்ட கொள்வனவாளர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆராய்தல் வேண்டும்.

4.3 2014 சனவரி மாதம் முதல் 2016 மே மாதம் வரை அரசாங்கத்தின் நிதித் தேவைகள் ஏலவிற்பனை முறை மற்றும் நேரடி முறை என்பவற்றை பயன்படுத்தி முறிகள் விநியோகித்தன் மூலம் பூர்த்தி செய்யப்பட்ட விதம் தொடர்பான காலப்பகுப்பாய்வொன்று 2015 - 2106 மத்திய வங்கி தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் கிழே குறிப்பிடப்படுகின்ற பிரகாரம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

வருடம் மற்றும் மாதம்	முறி வழங்கப்பட்ட முறை மற்றும் பெறுமதி			விநியோகிக்கப்பட்ட பெறுமதி சதவீதமாக	
	ஏல விற்பனை முறை	நேரடி முறை	மொத்தம்	ஏல விற்பனை முறை	நேரடி முறை
	ரூபா. மில்லியன்	ரூபா. மில்லியன்	ரூபா. மில்லியன்	%	%
2014 சனவரி	5.500	32.718	38.218	14	86
2014 பெப்ரவரி	3.050	80.088	83.138	4	96
2014 மார்ச்	5.000	130.117	135.117	4	96
2014 ஏப்ரல்	-	120.373	120.373	0	100
2014 மே	5.950	62.745	68.695	9	91
2014 யூன்	-	126.210	126.210	0	100
2014 யூலை	5.300	109.483	114.783	5	95
2014 ஆகஸ்ட்	-	44.230	44.230	0	100
2014 செப்தெம்பர்	2.950	72.458	75.408	4	96
2014 ஒக்தோபர்	-	22.617	22.617	0	100
2014 நவம்பர்	-	13.788	13.788	0	100
2014 திசெம்பர்	4.000	18.148	22.148	18	82
2015 சனவரி	-	69.923	69.923	0	100
2015 பெப்ரவரி	10.058	23.524	33.582	30	70
2015 மார்ச்	171.659	14.144	185.803	92	8
2015 ஏப்ரல்	44.306	-	44.306	100	0
2015 மே	35.730	-	35.730	100	0
2015 யூன்	82.900	-	82.900	100	0
2015 யூலை	99.575	-	99.575	100	0
2015 ஆகஸ்ட்	100.578	-	100.578	100	0
2015 செப்தெம்பர்	57.576	-	57.576	100	0
2015 ஒக்தோபர்	55.811	-	55.811	100	0
2015 நவம்பர்	20.594	-	20.594	100	0
2015 திசெம்பர்	29.545	-	29.545	100	0
2016 சனவரி	61.119	-	61.119	100	0
2016 பெப்ரவரி	38.959	-	38.959	100	0
2016 மார்ச்	135.667	-	135.667	100	0
2016 ஏப்ரல்	30.44	-	30.440	100	0
2016 மே	114.335	-	114.335	100	0

மேற்கூறப்பட்ட அட்டவணையின் பிரகாரம் 2014 சனவரி மாதம் முதல், நேரடி முறையைத் தற்காலிகக் கைவிடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டு முதலாவதாக அமுல்படுத்தப்பட்ட 2015 ஏப்ரல் மாதம் வரையான 15 மாத காலத்தில் நேரடி முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்ட மாதமும், ஏலவிற்பனை முறை மாத்திரம் பயன்படுத்தப்பட்ட மாதமும், இந்த இரண்டு முறைகளும் பயன்படுத்தப்பட்ட மாதமும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் அந்த 15 மாத காலத்தில் விநியோகிக்கப்பட்ட ஒட்டுமொத்த முறிகளில் 80 சதவீதத்தை விட அதிகமாக நேரடி முறை பயன்படுத்தப்பட்டு வழங்கப்பட்டிருந்தமை மேலும் அவதானிக்கப்படுகின்றது.

4.4 *மத்திய வங்கி பிணையங்கள் வழங்கல் சம்பந்தமாக நாணய விதிச் சட்டத்தில்* (Monetary Law Act) *உள்ளடங்கிய ஏற்பாடுகள்*

நாணய விதிச் சட்டத்தின் (Monetary Law Act) ஏற்பாடுகளுக்கிணங்க (பின்னிணைப்பு I இன் பின்னிணைப்பு v i i) முறிகளை வழங்கல் சம்பந்தமாக தீர்மானம் மேற்கொள்வதற்கான அதிகாரம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையிடமே கையளிக்கப்பட்டுள்ளதோடு நாணயச் சபையானது நிலவுகின்ற அரசாங்கம் மற்றும் நிதி அமைச்சரால் முன்மொழியப்படுகின்ற அரசாங்கத்தின் நிதிக் கொள்கையின் அடிப்படையிலேயே செயலாற்றுகின்றதென நிதி அமைச்சின் செயலாளருடனும் மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களிடமும் குழு மேற்கொண்ட விசாரணைகளின்போது சுட்டிக்காட்டப்பட்டது.

அரசாங்கத்தினால் நாட்டில் கடைப்பிடிக்க முன்மொழிந்துள்ள நிதிக் கொள்கை அறிவிக்கப்பட்ட பின்னர் அதனடிப்படையில் மிகவும் சரியான பொருத்தமான வழிமுறையைப் பின்பற்றி நாட்டின் நிதித் தேவையை ஈடேற்றிக்கொள்ள நாணயச் சபை செயலாற்றுவதாக அறிவிக்கப்பட்டது. நிதிக்கொள்கை எழுத்திலோ அல்லது வாய்மொழியிலோ நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட இயலுமென்பது குழுவினால் நீண்டநேரம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது மத்திய வங்கி உத்தியோகத்தர்களால் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்டதோடு எவ்வாறாயினும் அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட நிதிக் கொள்கை சம்பந்தமான இறுதி அங்கீகாரத்தை வழங்குவதற்கான அதிகாரம் மத்திய வங்கியின் நாணயச் சபையிடமே கையளிக்கப்பட்டுள்ளதென சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த பிரச்சினைக்குரிய கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக நாணயச் சபையினால் தீர்மானம் எடுக்கப்படவில்லை என்பதோடு 2016 மார்ச் 02 ஆந் திகதி நாணயச் சபைக்கு முன்னர் அமுலாக்கப்பட்டிருந்த தீர்மானத்தை அறிவித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குழுவுக்கு வெிப்பட்டது.

4.5 *மத்திய வங்கியின் நாணயச் சபை*

நாணய விதிச் சட்டத்தின் 8.1 பிரிவின் பிரகாரம் மத்திய வங்கியின் நாணயச் சபையின் தலைமை மத்திய வங்கியின் ஆளுநரினால் வகிக்கப்பட வேண்டும் என்பதுடன் நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் அரசியலமைப்புச் சபையின் உடன்பாட்டுடன் நிதி அமைச்சரினால் விதந்துரைக்கப்பட்டு கௌரவ சனாதிபதியினால் நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள் மத்திய வங்கியின் நாணயச் சபையில் அங்கம் வகிப்பார்கள்.

நாணயவிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, நாட்டின் நாணயக் கொள்கையை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு அறிவிக்கப்படுவது மத்திய வங்கியின் நாணயச் சபையின் அங்கத்தவரும் நிதியமைச்சின் செயலாளருமானவரின் மூலமாயிருப்பினும் சர்ச்சைக்குரிய

முறிகள் தொடர்பான சம்பவத்துக்குரிய காலகட்டத்தில் மத்திய வங்கி நிதி அமைச்சின் கீழ் செயற்படவில்லை என்பதுடன், கௌரவ பிரதம அமைச்சரின் கீழிருந்த கொள்கை திட்டமிடல், பொருளாதார அலுவல்கள், சிறுவர் மற்றும் இளைஞர் விவகார, கலாசார அமைச்சின் கீழ் செயற்பட்டதனால் மத்திய வங்கியின் முறிகள் வழங்கப்படும் முறைமை தொடர்பான அரசாங்கத்தின் கொள்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு அறிவிக்கப்பட்ட முறை தொடர்பாக குழு விரிவான ஆய்வுக்கு உட்படுத்தியது.

4.6 *இலங்கை மத்திய வங்கி பிணையங்களை வழங்குவதன் மூலம் நாட்டின் நிதித் தேவையை நிறைவு செய்துகொள்ளுமம் செயற்பாட்டில் நிதி அமைச்சின் தலையீடு*

4.6.1 *நிதிப் பாய்ச்சல் குழு* (Cash Flow Committee(

இந்நிதிப் பாய்ச்சல் குழு திறைசேரியின் செயலாளரின் தலைமையில் கூடுவதுடன் சகல பிரதிச் செயலாளர்கள், திறைசேரியின் அனைத்து திணைக்களங்களினது பிரதானிகள், திறைசேரி தொழிற்பாடட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்கள் சிலரும் இவ்விடயம் தொடர்பான அறிவுள்ள மத்திய வங்கியுடன் கொடுக்கல் வாங்கலில் டுபடும் சிலரும் இக்குழுவில் கலந்துகொள்வதாக நிதி அமைச்சின் செயலாளர் இக்குழுவுக்கு தெிவுபடுத்தினார். இக்குழுவில் ஒரு மாதத்தினுள் அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானமும் செலவும் பற்றி கலந்துரையாடப்படுவதாகவும் வருமானம் - செலவுக்கு இடைப்பட்ட பற்றாக்குறைத் தொகையை நிலவுகின்ற கடன் எல்லைகளுக்கு உட்பட்டவாறு மத்திய வங்கியினால் பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடுவதாகவும் நிதி அமைச்சின் செயலாளர் மேலும் எடுத்துக்காட்டினார்.

4.6.2 மத்திய வங்கியினால் நாட்டிற்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்காக கடன் தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் முறை பற்றி நிதி அமைச்சினால் பின்னாய்வு செய்யப்படுகின்றதா என குழு வினவியபோது இதுவரை அவ்வாறு பின்னாய்வு செய்வதற்கான தேவை ற்படுவில்லை எனவும் அவ்வாறு பின்னாய்வொன்று நடைபெறுமாயின் மத்திய வங்கியின் உரிய முறிகளுடன் தொடர்புடைய நாணய விதிச் சட்டத்தின் ற்பாடுகளின் கீழே அது சாத்தியமாகும் எனவும் நிதி அமைச்சின் செயலாளரினால் எடுத்துக்காட்டப்பட்டதுடன் மத்திய வங்கியின் மேற்படி சர்ச்சைக்குரிய முறிகள் வழங்கல் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் வழங்கப்படும் அறிக்கையின் விதப்புரைகளின் பேரில் இது தொடர்பாக பின்னாய்வொன்றை மேற்கொள்வது தொடர்பாக தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் எடுத்துக்காட்டப்பட்டது.[7]

[7] நாணயச் சபையின் முறையியல் மற்றும் தொழிற்பாட்டுக் கைநூலுக்கு அமைய லவிற்பனை முறை மூலம் முடிந்தளவுக்கு நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் எஞ்சியதை தனிப்பட்ட வழங்கல் முறை ஊடாக பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சரியான முறையாகக் கருதப்பட்டிருப்பது தனிப்பட்ட வழங்கல் முறையாகும் என்றும், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மூலம் தனிப்பட்ட வழங்கல் முறை அங்கீகரிக்கப்பட்ட விதிமுறையாகக் கொள்ளப்பட்டு விபரிக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

5. 2015 பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதி முறிகள் வழங்கல்

5.1.1 *மத்திய வங்கியின் உள்நாட்டு படுகடன் முகாமைத்துவ குழுவும் அதன் கடமைகளும்*

நிதிஅமைச்சின் பிரதிநிதியொருவர் உட்பட 5 அங்கத்தவர்களைக்கொண்ட இந்தக் குழுவின் பொறுப்பானது உள்நாட்டு நிதிச் சந்தையிலிருந்து பெற்றுக்கொள்ளவதாக எதிர்பார்த்திருந்த கடன் பெறுதலை செலவு மற்றும் இடர் குறைவாகவுள்ள விதத்தில் அதற்குத் தேவயைான விதப்புரைகளை முன்வைப்பதாகும்.[8]

5.1.2. 2015 *மார்ச் மாதத்திற்கான நாட்டின் நிதித் தேவையை பூர்த்திச் செய்வதற்கான மத்திய வங்கியின் பொதுப் படுகடன் முகாமைத்துவ குழுவின் விதப்புரைகள்*

2015 மார்ச் மாதத்திற்காக திறைசேரி உண்டியல்களையும் முறிகளையும் வழங்குவதன் முலம் □ட்டிக்கொள்ள வேண்டிய அரசாங்கத்தின் மொத்த நிதித் தேவை ரூபா 261.683 பில்லியனாகும் எனவும் அதில் ரூபா 89.683 பில்லியனை திறைசேரி உண்டியல்கள் மூலமாகவும் ரூபா 172 பில்லியனை திறைசேரி முறிகள் மூலமாகவும் பெற்றுக்கொள்ளவும் அந்த ரூபா 172 பில்லியனில் ரூபா 1 பில்லியனை திறைசேரி முறிகளின் ஆரம்ப □ல விற்பனையிலும் மிகுதியை நேரடி முறைகளிலும் பெற்றுக்கொள்ள 2015 பெப்ருவரி 27 ஆம் திகதியன்று நடைபெற்ற பொதுப் படுகடன் முகாமைத்துவ குழுவினால் தீர்மானிக்கப்பட்டு விதந்துரைக்கப்பட்டதாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையின் மூலமாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 2015 பெப்ருவரி 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் முறையே இணையத்தளத்திலும் பகிரங்க பத்திரிகைகளிலும் வெியான அறிவித்தல்களின் பிரகாரம் 16 முதனிலை வணிகர்களுக்கு 30 ஆண்டுகளில் முதிர்ச்சியடையும் ரூபா 1 பில்லியன் திறைசேரி முறிகளை 12.5% வட்டியின் கீழ் வழங்க விலைமனு கோரப்பட்டது. இது பற்றிய விலைக் கேள்வித் தகவல் அறிக்கை (இணைப்பு 1 இல் இணைப்பு xxiii □ பார்க்கவும்)

[8] 5.1.1. மத்திய வங்கியின் உள்நாட்டுக் கடன் முகாமைத்துவக் குழு மற்றும் அதன் செயற்பணி

அனைத்து முறி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் □லவிற்பனையின் பின்னர் முன் அலுவலகத்தினால் கேள்விப்பத்திர குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக அறிக்கை தயாரிக்கப்படும் என்பதோடு, கேள்விப் பத்திரக் குழுவின் மூலம் குறைந்தபட்ச செலவு மற்றும் இடர்நேர்வின் அடிப்படையில் எவ்வளவு முறிகள் கொள்வனவு செய்யப்படும் என்பது தீர்மானிக்கப்படும்.

5.2. 2015 பெப்ருவரி 27 ஆம் திகதி முறிகள் வழங்கல் இடம்பெற்ற அண்மித்த காலத்தினுள் சந்தைப் போக்கு

இந்த முறிகள் வழங்கப்பட்ட கிழமைக்கு முந்திய கிழமையில் இரண்டாம்நிலைச் சந்தையில் 30 வருடகால முறிக்காக 9.48% சராசரி விளைவு வீதம் காணப்பட்டது. (இணைப்பு 1 இல் இணைப்பு x x காண்க – பக்கம் 108)[9]

5.3 *மத்திய வங்கி உத்தியோகத்தர்களினால் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முன் இந்த முறி வழங்கல் சம்பந்தமாக வழங்கப்பட்ட வாய்மூல சாட்சியங்களின் படி 2015 பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி மத்திய வங்கி முறி வழங்கல் இடம்பெற்ற விதம் பற்றி விளக்கிய விதம் பின்வருமாறு சுருக்கமாக காட்டப்பட்டுள்ளது. - (மேற்கோள் – வாய்மூல சாட்சிகள் – இணைப்பு)*[10]

- ✓ முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் அன்றைய தினம் சுமார் மு.ப 10.45 மணிக்கு படுகடன் முகாமைத்துவ திணைக்களத்திற்கு வருகைதந்து ஏலவிற்பனையில் எவ்வளவு கேள்வி கிடைத்துள்ளது, என்றவாறான விபரங்களை வினவியதென்பது,

---

[9] மேற்படி 9.48% வட்டி வீதமானது, நேரடி முறை ஊடாக மத்திய வங்கி தீர்மானித்துள்ள வட்டி வீதத்தின் அடிப்படையில் சந்தையில் சுயாதீனமாக தீர்மானிக்கப்பட்ட வட்டி வீதமல்ல என்பதும் தெளிவானது.

[10] 2015 பெப்ருவரி 27 ஆம் திகதி காலையில் சந்தை தொழிற்பாட்டுக் குழுவினால் அதுவரை காணப்பட்ட 3 நாள் விதி அதாவது 3 நாட்களுக்கு மேல் தேனுமொரு வங்கி மத்திய வங்கியில் வைப்புச் செய்யும் பட்சத்தில் வட்டி வீதம் 6.5% முதல் 5% வரை குறைக்கப்பட்டிருந்தது. இந்தத் தீர்மானத்தின் மூலம் மேற்படி குறைப்பு நீக்கப்பட்டது. மீண்டும் சராசரிப் பெறுமதியான 6.5% இற்கு வந்தது.

- ✓ அன்றைய தினம் முறிகளின் ஏலவிற்பனை மு.ப 11.00 மணிக்கு நிறைவுபெற வேண்டியிருந்ததெனினும் முதனிலை வாடிக்கையாளரொருவரின் வேண்டுகோளுக்கிணங்க மு.ப 11.05 மணி வரை ஏலவிற்பனை நீடிக்கப்பட்டதென்பது,[11], [12]

[11] அவ்வாறு மு.ப. 11.00 இன் பின்னர் விலைகோரலை முன்வைத்திருப்பது ஒரு விண்ணப்பதாரர் மாத்திரமாகும் என்பதுடன், அது ரூபா 100 மில்லியன் ஆகும் என்றும் மு.ப. 11.04.26 இற்கு விலைகோரலை முன்வைத்திருப்பது எச்எ□பீசீ ஆகும் என்பதும் தெரியவருகின்றது.

[12] மத்திய வங்கியினால் இந்த பிரச்சினைக்குரிய □லவிற்பனை தொடர்பாக அதற்கு முன்னரான தினமொன்றில் முதனிலை கொடுக்கல் வாங்கல் செய்வோர் தொலைபேசி மூலம் தொடர்புகொள்ளப்பட்டு சுமார் ரூபா10 பில்லியனை கொள்வனவு செய்வதற்கான விருப்பம், விருப்பமின்மை பற்றி வினவப்பட்டதாக சாட்சிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. பர்பேர்சுவல் டிரஷரீ□ கம்பனியின் பிரதிநிதிக்கும் மேற்படி தொலைபேசி அழைப்பு கிடைத்தாக தெரிவிக்கின்றார். மேலும் மத்திய வங்கி அலுவலர்களும் இதனை உறுதி செய்தனர்.

- ✓ பர்பேர்சுவல் டிரஷரீ□ கம்பனி ரூபா 3 பில்லியனை 12.5% உம் ரூபா 5 பில்லியனை 12.75% உம் ரூபா 3 பில்லியனை 13% இற்குமான 2045 முதலீடுகளுக்கு முறி □லத்தில் விலைகேட்பு செய்யுமாறு இலங்கை வங்கிக்கு 2015, பெப்ரவரி 27 ஆம் திகதி மு.ப 10.48 மணிக்கு மின்னஞ்சல் மூலம் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேற்படி விலை கேட்பு இலங்கை வங்கியினால் முறையே 10.57.22, 10.57.41 மற்றும் 10.57.57 ஆகிய நேரங்களில் மத்திய வங்கிக்கு கிடைத்துள்ளது. அது விலைகேட்பு நேரங்கள் காட்டப்படும் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. மு.ப 11.06 மணிக்கு HSBC நிறுவனத்தினால் விலை கேட்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

- ✓ மேற்படி ஏலவிற்பனையின் போது முறிகளுக்கு நிலவிய கேள்வியினை கருத்திற்கொண்ட பின்னர் அரச கடன் முகாமைத்துவ பிரதான நிருவாக திணைக்கள அலுவலகத்தினால் (front office) தயாரிக்கப்பட்ட 07 மாற்று முறைகள் உள்ளிட்ட அறிக்கையில் காணப்பட்ட ரூபா 2.6 பில்லியனுக்கான முறிகள் வழங்கப்பட வேண்டுமெனும் விதப்புரையை ஏல விற்பனை குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டதென்பது,
- ✓ முன்னாள் மத்திய வங்கி ஆளுனர் மீண்டும் 12.30 மணிக்கு 02 பிரதி ஆளுனர்கள் இருவருடன்[13] அரச கடன் முகாமைத்துவ திணைக்களத்திற்கு வருகைதந்து முறி ஏலவிற்பனை சம்பந்தமாக விடயங்களை வினவியதென்பது,[14]

---

[13] கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் திரு. ஆனந்த சில்வா ஆகிய இருவருடன்

[14] ஆரம்ப வரைபு அறிக்கையில் (fact report) இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் விலைமனு கோரல் குழுவின் உறுப்பினர்களாக குழுவின் தவிசாளர், பிரதி ஆளுநர் திரு பீ சமரசிறி, பொதுப் படுகடன் திணைக்களத்தின் உதவி அத்தியட்சகர் திரு எ□.எ□ அதிகாரி, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் உதவி ஆளுநர் திரு சீ.பீ.□ கருணாதிலக, அரச கடன் திணைக்களத்தின் அத்தியட்சகர் திருமதி சீ.எம்.டீ.என்.கே செனவிரத்ன, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி குணரத்னவுடன் மேலதிக அத்தியட்சகர் இருவரும் இருந்துள்ளார்கள் என்பது வெளிக்கொணரப்பட்டது. மத்திய வங்கியின் ஆளுநர் விலை மனு கோரல் குழுவின் அங்கத்தவர் அல்ல என்பதும் தெரிய வந்துள்ளது.

இதன் போது ரூபா 01 பில்லியனிலிருந்து ரூபா 10 பில்லியன் வரை நிதி பெறுவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மேற்குறிப்பிட்ட உத்தியோகத்தர்களினால் தொழில் சார் தீர்மானத்துக்கமைய ஒரு குழுவாக மேற்கொள்ளப்பட்டதொரு தீர்மானம் என்பதை தான் □ற்றுக் கொள்வதாக விலைமனு கோரல் குழுவின் தவிசாளர் திரு. பீ குமாரசிறியினால் தெரிவிக்கப்பட்டது.

எவ்வாறாயினும் பொதுப் படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகர் திருமதி செனவிரத்ன அளித்த சாட்சி தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும். "இதன் போது குழுவினால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் யாதெனில் திருமதி செனவிரத்னவினால் இதற்கு முன்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குழுவின் முன் முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் தமக்கு "Do it" எனப் பணித்ததாக குறிப்பிடவில்லை எனவும் மற்றும் "Why don't you go for ten?" என கருத்துத் தெரிவித்ததாக மாத்திரம் கூறியதாகவும் கூறுகிறார். கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலமும் மத்திய வங்கி ஆளுநரினால் திருமதி செயவிரத்னவிடம் ரூபா 10 பில்லியனுக்கு □ன் செல்வதில்லை என "Why don't you go for ten?" கேட்டதாகவே தவிர, வேறு எதுவித சாட்சியும் முன்வைக்கவில்லை என எடுத்துக்காட்டப்பட்டது.

இங்கு திருமதி செனவிரத்ன முன்னைய குழுக் கூட்டங்களின்போது இதுபற்றி கூற முடியாமற் போனமை பற்றி மன்னிப்புக் கோருவதாகவும் கூறினார்.

மேலும், கலாநிதி □.இ□ட்.எம்.அசீம் பிரதி படுகடன் அத்தியட்சகரினால் கூறப்பட்டதும் இத்தீர்மானம் கேள்விப்பத்திர குழுவின் தீர்மானம் என்பதாகும்.

"கலாநிதி அசீமின் சாட்சியங்களின் மூலம், மத்திய வங்கியின் சிரேஷ்ட முகாமைத்துவமானது படிப்படியாக நேரடி வழங்கல் முறையிலிருந்து நீங்கி, மிகவும் விரிவானதொரு சந்தையுடன் கூடிய □லவிற்பனை முறைக்கு செல்வதற்கு 2015 பெப்ரவரி 27 ஆம் திகதிக்கு முந்திய தினங்களில் கலந்துரையாடிக்கொண்டிருந்தமை தெிவாகின்றது. கலந்துரையாடலின்போது Full Scale Public Auctionக்கு செல்வதற்கே முன்மொழியப்பட்டது. □லவிற்பனைத் தினத்திற்கு முந்திய தினத்திலும் இவ்விடயம் கலந்துரையாடப்பட்டதோடு, கலாநிதி அசீம் மற்றும் □னையவர்களுக்கும் இது தொடர்பில் தீர்மானம் மேற்கொள்வதற்கு நேரிடும் என்பதும் அறிவிக்கப்பட்டிருந்தது. கலாநிதி அசீம் தொடர்ந்தும் சாட்சியமளிக்கையில், சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 1 பில்லியனை விட 20 மடங்கு விலைக்கேட்புகள் கிடைந்திருந்தமையால் Public Auction ஊடாக தேவையான நிதியத்தை திரட்டுவதற்கு சிறந்ததொரு சந்தர்ப்பமாகும் ("Ideal opportunity") எனக் கூறியிருந்தார். ஆதலால், முழுத் தொகையையும், அதாவது, ரூபா 10 பில்லியனுக்கு மேற்பட்ட தொகையை அன்றைய தினம் Public Auction இல் இருந்து பெறுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்ததென்பது (இணைப்பு 25 □ பார்க்க)

அதன் பினன்னர் இத்தீர்மானத்தை மத்திய வங்கி ஆளுநருக்கு கேள்விப் பத்திரக் குழுவின் மூலம் அறிவிக்கப்பட்டதாக சாட்சிகள் மூலம் வெியாகியது.

- ✓ இச்சந்தர்ப்பத்தில் முதனிலை சந்தை வாடிக்கையாளர்களின் கேட்புவிலை உள்ளிட்ட விபரங்கள் உள்ளடங்கிய பட்டியல் முன்னாள் ஆளுனரினால் பரிசீலிக்கப்பட்டதென்பது.
- ✓ முன்னாள் ஆளுனர் அப்பட்டியலில் ரூபா பில்லியன் 20 குறிப்பிடப்பட்டிருந்த இடத்தினை கைநீட்டி சுட்டிக்காட்டி ரூபா 20 பில்லியனையும் ஏன் எடுக்கக்கூடாதென வினவியதென்பது
- ✓ ரூபா 20 பில்லியன் வரை கேள்வி உள்ளதென உத்தியோகத்தர்கள் அறிவித்தவுடனேயே அந்த ரூபா 20 பில்லியனையும் எடுக்குமாறு முன்னாள் ஆளுநர் உத்தியோகத்தர்களுக்கு முன்மொழிந்ததென்பது,

  (2016.08.12 ஆம் திகதி நடைபெற்ற குழுவின் போது தனக்கு அப்பணத்தொகையை எடுக்குமாறு பொதுப் படுகடன் முகாமைத்துவ திணைக்களத்திற்கு மத்திய வங்கி ஆளுநர் வருகைத்தந்து “ D o i t “ என பணிப்புரை வழங்கியதாக தெரிவிக்கப்பட்டது. ஆயினும் இதற்கு முன்னர் வழங்கப்பட்ட சாட்சியின் போது “why don’t You go for 10” என மத்திய வங்கியின் ஆளுநரால் முன்மொழியப்பட்டதாக பொதுப் படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகர் சாட்சியமளித்துள்ளார்.)

- ✓ ரூபா 20 பில்லியப் பெற்றுக்கொள்ளும் பட்சத்தில் சந்தையில் ஏற்படுகின்ற பாதகமான தாக்கங்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களால் முன்னாள் ஆளுநருக்குச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென்பது.
- ✓ அப்போது முன்னாள் ஆளுநர் 2014 செப்தெம்பர் மாதம் வழங்கப்பட்ட 30 வருடகால முறியில் நிறை ஏற்றப்பட்ட விகிதத்தினை ஆராய்ந்தார் என்பது.
- ✓ அவ்விகிதமானது 11.75 என உத்தியோகத்தர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதென்பதும் அப்போது முன்னாள் ஆளுநர் அந்நிதிச் சந்தை விகிதங்கள் காணப்பட்ட மட்டத்தின் பிரகாரம் செயற்படாதிருப்பதற்கான காரணங்களை விசாரித்தார் என்பதும்.
- ✓ பின்னர், ரூபா10 பில்லியனைப் பெற்றுக்கொள்ளுமாறு மேற்கூறப்பட்ட பட்டியலில் ரூபா 10 பில்லியன் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தினை கையினால் குறிப்பிட்டுக்காட்டி முன்னாள் ஆளுநரால் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன என்பது.
- ✓ அதன்படி மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக ரூபா 10 பில்லியனைப் பெற்றுக்கொள்வதற்காக புறம்பானதொரு அறிக்கை கடன் முகாமைத்துவ திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டதென்பது.
- ✓ மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கமைவாக ரூபா10 பில்லியனைப் பெற்றுக்கொள்வதற்காக பொதுப் படுகடன் முகாமைத்துவ திணைக்களத்தின் அத்தியட்சகரால் குறிப்பொன்று இடப்பட்டு அடுத்த அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதென்பது.(Governor instructed to the place price up

to Rs.10 billion taking into consideration of additional fund requirements of the Government)[15]

- ✓ மேற்படி ரூபா 10 பில்லியனுக்கான விதப்புரை கேள்விப்பத்திர குழுவிற்குக் கொண்டு செல்லப்பட்டதாகவும் முன்னாள் ஆளுநர் ரூபா 10 பில்லியனை பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியதாகவும் கேள்விப்பத்திர குழு அங்கத்தவர்களுக்கு கடன் அத்தியட்சகரால் தெரிவிக்கப்பட்டுள்ளதென்பது.

(மத்திய வங்கியின் கேள்விப்பத்திர சபை)

(மத்திய வங்கிக்கான கேள்விப்பத்திர சபையின் செயற்பொறுப்பானது பொதுப் படுகடன் முகாமைத்துவத் திணைக்களத்தினால் பிணைமுறிகள் வழங்கப்படுதல் தொடர்பாக முன்வைக்கப்படுகின்ற விதப்புரைகள் நடைமுறைபடுத்தப்படுதல் சம்பந்தமாக தீர்மானங்கள் மேற்கொள்வதாகும். 2015 பெப்ருவரி 27 ஆம் திகதி கேள்விப்பத்திரக் குழுவைப் பிரதிநிதித்துவம் செய்த அங்கத்தவர்கள் கேள்விப்பத்திரக் குழவின் தலைவர், பிரதி ஆளுநர் திரு. பீ. சமரசிறி, பொதுப் படுகடன் திணைக்களத்தின் உதவி ஆளுநர் திரு. சீ.பீ.ஏ. கருணாதிலக்க, பொதுப் படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகர் திருமதி சீ.எம்.டீ.என்.கே. செனெவிரத்ன, பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி குணரத்ன மற்றும் மேலதிக இரு மேற்பார்வையாளர்கள் ஆவார்கள்)

- ✓ ரூபா10 பில்லியனைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கியமைக்கான காரணம் யாதென கேள்விப்பத்திரக் குழுவின் தலைவர் முன்னாள் ஆளுநரிடம் தொலைபேசி மூலம் விசாரித்தார் என்பது.
- ✓ அதற்காக முன்னாள் ஆளுநர் 2 காரணங்களைச் சமர்ப்பித்தார் என்பது.
    1. அரசாங்கத்திற்குப் பெரும் தொகை பணம் தேவைப்படுகின்றதென்பது.
    2. 5% ஆக காணப்பட்ட வட்டி வீதம் (Special Standing Deposit Facility Rate) அடுத்த வரம் நீக்கப்படும் என்றும் அதன்போது வட்டி வீதம் அதிகரிக்கும் என்றும் (2014 செத்தெம்பர் மாதம் முறிகளை வழங்கும்போது இருந்த நிலைக்கு வட்டி வீதம் வரும் என்றும்) சுட்டிக்காட்டப்பட்டதென்பது.

(எவ்வாறாயினும் பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முறிகளை வழங்க முன்னர் பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி கூடிய மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வட்டி வீதங்கள் அடுத்த மாதம் நாணயச் சபை கூடும் வரை வட்டி வீதங்களை இருந்த மட்டத்தில் மாற்றமதில்லாமல் பேணுவதாக தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக 2015 பெப்ரவரி மாதம் 23 ஆம் திகதி நாணயச் சபைப் பத்திரத்தின் 2வது விடயத்தை மேற்கோள் காட்டி குழு மூலம் சுட்டிக்காட்டப்பட்டது.)

-Item No.02 of the Board Paper dated 23 February 2015 –

“Given the rising trend of the market interest rates and rising growth of private sector credit and decided to maintain the policy interest rates at current level until the next month’s monetary policy review”

[15] மேலதிக நிதியங்களின் தேவைக்காக

(மத்திய வங்கியின் நாணயச் சபை அவ்வாறான தீர்மானமொன்றை எடுத்திருக்கும்போது முன்னாள் மத்திய வங்கி ஆளுநரினால் வட்டி வீதங்களை மாற்றுவதற்காக தீர்மானித்துள்ளதை அவதானிக்க முடிந்தது.)

- ✓ பெப்ரவரி 27 ஆம் திகதி காலை வேளையில் சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவுக்கு (Market Operation Committee) முன்னாள் ஆளுநர் வந்து 5% ஆக இருந்த வட்டி வீதத்தை (Special Standing Deposit Facility Rate) 6.5% ஆக அதிகரிக்க ஆலோசனை வழங்கியதென்பதும் ஆளுநர் அந்தக் குழுவின் உறுப்பினர் அல்ல என்பது
- ✓ அதே தினம் சந்தைத் தொழிற்பாட்டுக் குழு சுற்றுநிருபமொன்றை வெியிட்டு அந்த வட்டி வீதம் தொடர்பாக பணச் சந்தையில் அறிவூட்டப்பட்டதென்பது.
- ✓ முன்னாள் மத்திய வங்கி ஆளுநரினால் பெப்ரவரி 27 ஆந் திகதியன்றே அதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டதென்பது.
- ✓ அந்த வட்டி வீதங்களை மாற்ற எடுக்கப்பட்ட தீர்மானம் 03 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டதென்பது.
- ✓ [16]முன்னாள் மத்திய வங்கி ஆளுநரினால் எடுக்கப்பட்ட அந்தத் தீர்மானம் 2015 மார்ச் 06 ஆம் திகதி நடைபெற்ற நாணயச் சபைக் கூட்டத்தில்[17] மேலிட அங்கீகாரத்திற்காக (Ratification) உட்படுத்தப்பட்டதென்பது.

[16] சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவின் தலைவர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவின் பங்கேட்புடன்

[17] சந்தைத் தொழிற்பாட்டுக் குழுவில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்

5.4 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி மத்திய வங்கி முறிகளுக்கான விலைக்கேட்பு தொடர்பான தகவல் பத்திரத்திற்கமைவாக (டீனை யுஉஉநிவயஉெந ைகெழசஅயவழைெ ளாநநவ) தயாரிக்கப்பட்ட அட்டவணை

வாடிக்கையாளர் (Dealer)	முறிகளின் முகப்புப் பெறுமதி ரூபா	ஏலவிற்பனையில் பெறப்பட்ட தொகை ரூபா	நிறையேற்றப்பட்ட சராசரி விளைவு வீதம் (WAYR)
Bank of Ceylon	8,000,000	9,546,736	9.3510
Acuity Securities Ltd	50,000,000	56,005,000	9.9063
First Capital Treasuries Ltd.	100,000,000	110,954,800	10.0278
Bank of Ceylon	500,000,000	546,966,000	10.1970
Entrust Securities PLC	50,000,000	52,253,650	10.2339
NSB Fund Management Company Ltd.	100,000,000	104,507,300	10.2959
EPF	500,000,000	522,536,500	10.4652
மொத்தம்	1,308,000,000	1,402,769,986	

உள்நாட்டுக் கடன் முகாமைத்துவ குழுவினால் முதனிலை லவிற்பனை மூலமாக 1 பில்லியன் ரூபா முறிகளை மாத்திரம் கொள்வனவுசெய்ய பரிந்துரைத்திருக்கையில் அந்த அளவினைப்போல் பத்து மடங்கிற்கு மேலாக அதாவது 10.058 பில்லியன் வரை கேட்பு விலையினை ற்றுக்கொள்ள 2015.02.27 ஆந் திகதி நடைபெற்ற திறைசேரி முறிகள் கேள்விச் சபை (பின்னிணைப்பு I இன் பின்னிணைப்பு x x i v ப் பார்க்க – பக்கம் 112) யினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததாக கணக்காயவாளர் தலைமை அதிபதி அறிக்கை மூலமாக சுட்டிக்காட்டப்படுகின்றது. அன்றைய தினம் நடைபெற்ற லவிற்பனையில் 9.3510 தொடக்கம் 11.7270 வரை நிறையிடப்பட்ட விளைவு விகிதத்திற்கு விலைமட்டங்களை சமர்ப்பித்திருந்த முதனிலை வாடிக்கையாளர்கள் 14 பேருக்கு 30 வருடங்களில் முதிர்ச்சியடைகின்ற திறைசேரி முறிகளை வழங்குவதன் மூலமாக (பின்னிணைப்பு I இன் பின்னிணைப்பு X X V ப் பார்க்க – பக்கம் 114) ரூபா 10.058 பில்லியனை ட்டிக்கொள்ள எதிர்பார்த்த போதிலும் கழிவு விகிதத்திற்கு (குறைந்த விலைக்கு) வழங்கியமையால் ரூபா 9.658 பில்லியனை மாத்திரம் ட்டிக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இங்கு வெியாகிய மற்றுமொரு முக்கியமான விடயம் யாதெனில் மேலே குறிப்பிட்டதன் பிரகாரம் பெற்றுக்கொள்ள இயலாமல்போன ரூபா 0.371 பில்லியன் (ரூபா 10.058 – 9.687 பில்லியன்) பணத்தொகையை வேறு குறுங்கால தோற்றுவாய் மூலமாக பெற்றுக்கொள்ள நேர்த்துள்ளதென கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை மேலும் சுட்டிக்காட்டுகின்றது.

5.5 பேர்பெச்சுவல் டிரெசரீஸ் (Perpetual Treasuries) கம்பெனியால் 2015 பெப்ருவரி 27 ஆந் திகதி முறிகள் வழங்கலுக்கான கேட்பு விலை முன்வைக்கப்படுதல்

மேலே காட்டப்பட்டவாறு முதனிலை லவிற்பனை ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் மேலே குறிப்பிட்ட முதனிலை வாடிக்கையாளர்கள் 7 பேர் நீங்கலாக அன்றைய தினத்திற்கு கிடைத்திருந்த கூட்டுத்தொகை ரூபா 20.708 பில்லியனாக அமைந்த அனைத்து விலை முன்வைத்தல்களில் நூற்றுக்கு 75 வீதமான அளவுக்கான விலைமட்டங்களை முன்வைத்திருந்த Perpetual Treasuries கம்பெனி உள்ளிட்ட வேறு

வாடிக்கையாளர்களுக்கு முறிகளை கொள்வனவு செய்ய வாய்ப்பு இருக்கவில்லையென மேற்படி அட்டவணை மூலமாக தெிவாகின்றது. அன்றைய தினம் □லவிற்பனையின் மூலம் வழங்க உத்தேசிக்கப்பட்டிருந்த ரூபா 1 பில்லியன் தொகையை ரூபா 10.058 பில்லியனாக அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக, மேற் குறிப்பிட்டுள்ள முதனிலை வணிகர்கள் 07 பேரிடையே இடம்பெறாத Perpetual Treasuries கம்பனிக்கு அன்றைய தினம் வழங்கப்பட்ட மொத்த முறிகளின் பெறுமதியில் 50% □ அதாவது, ரூபா 05 பில்லியனைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு கிடைத்தமை விசேட அம்சமாக இருந்ததெனவும், (இணைப்பு 1இல் இணைப்பு X X V □ப் பார்க்கவும் – பக்கம் 114) இங்கு குறித்த ரூபா 05 பில்லியனில் ரூபா 02 பில்லியனை நேரடியாகவும், ரூபா 03 பில்லியனை □னைய முதனிலை வணிகரான இலங்கை வங்கி ஊடாக மறைமுகமாகவும் பெற்றுக்கொள்ள குறித்த கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததெனவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்படுகிறது.

5.6 2015 பெப்புருவரி 27ஆம் திகதிய முறிகளின் ஏலவிற்பனையின்போது நிதிச் சந்தையில் இலங்கை வங்கியின் நடத்தைப்போக்கு –

அன்றைய தின முறிகள் □லவிற்பனையின்போது பர்பெர்ச்சுவல் ட்ரெஷரீ□ கம்பனியின் வேண்டுகோளுக்கமைய குறித்த கம்பனி சார்பாக, ரூபா 13 பில்லியன் வரை 12.50% சதவீதம், 12.7 5% சதவீதம் மற்றும் 13 % சதவீத அடிப்படையில் மூன்று விலைகேட்புகள் இலங்கை வங்கியினால் முன்வைக்கப்பட்டன. ஒரு முதனிலை வணிகர் சார்பாக மற்றுமொரு முதனிலை வணிகர் மத்திய வங்கி முறிகளுக்கென விலைகேட்பினைச் செய்த முதலாவது சந்தர்ப்பம் இதுவென்பது குழுவின் விசாரணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த கொடுக்கல் வாங்கல் பற்றி தான் அறிந்திருக்கவில்லையெனவும், இந்த கொடுக்கல் வாங்கலில் பிரதானமாக சம்பந்தப்பட்டுள்ள இலங்கை வங்கியினுடைய மத்திய வங்கியின் முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல் பிரிவின் பிரதம வணிகரிடம் (Chief Dealer) இது பற்றி வினவியதையடுத்து வழங்கியுள்ள எழுத்திலான தெளிவுப்படுத்தல்கள் தொடர்பாக தான் திருப்தியடையாததால், இந்த கொடுக்கல் வாங்கல் தொடர்பாக விசாரணை செய்வதற்கு அர்ன□ட் அன் யங்க் நிறுவனத்திடம் ஒப்படைத்ததாக இலங்கை வங்கியின் தலைவரினால் குழுவின் முன் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, அர்ன□ட் அன் யங்க் நிறுவனத்தினால் இலங்கை வங்கி இந்த கொடுக்கல் வாங்கலில் சம்பந்தப்பட்டுள்ளமை தொடர்பாக விசாரணை செய்து சமர்ப்பித்துள்ள அறிக்கை இவ்வறிக்கையில் 18ஆவது இணைப்பாக தரப்பட்டுள்ளது.

5.7 2015 பெப்புருவரி 27 முறிகள் ஏலவிற்பனையின்போது கேள்விக் குழுவின் செயற்பாடு

[18] உள்நாட்டு படுகடன் முகாமைத்துவக் குழுவினால் முதனிலை லவிற்பனையின்போது ரூபா 1 பில்லியனுக்கான முறிகளை மட்டுமே வழங்க சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2015 பெப்புருவரி மாதம் 27ஆம் திகதி நடைபெற்ற லவிற்பனையின் பின்னர், மு.ப12.30 மணி தொடக்கம் மு.ப 13.10 மணி வரை நடாத்தப்பட்ட 2/ 2015 ஆம் இலக்க திறைசேரி முறிகள் கேள்விப்பத்திரக் குழுவினால் (Treasury Bond Tender committee) அந்த அளவினைப் போன்று பத்து மடங்கிற்கும் அதிகமான அளவினை அதாவது, ரூபா 10.058 பில்லியன் வரையான விலைகேட்பினை ற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 1 - xxiv) இங்கு அவதானிக்கப்பட்ட முக்கியமான விடயம் யாதெனில், மேற்படி முடிவினை எடுத்திருப்பது லவிற்பனை இடம்பெற்ற பின்னராகும். இது மேற்குறிப்பிட்ட 5.1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டு படுகடன் முகாமைத்துவ குழுவினால் ரூபா 12,550 பில்லியன் தொகையை நேரடி முறையின் மூலம் பெற்றுக் கொள்வதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கு முற்றும் முரணானதாகும்.

[18] அன்றைய தினம் படுகடன் குழுவின் தீர்மானம் யாதெனில், ரூபா 1 பில்லியனை லவிற்பனையில் பெற்றுக்கொண்டு எஞ்சிய ரூபா 172 பில்லியனை நேரடி முறையின் மூலம் பெற்றுக்கொள்வதாகும்

இங்கு அவதானிக்கப்பட்ட முக்கியமான முரண்பாடானது, ரூபா 1 பில்லியனை ல விற்பனையில் கோரி லவிற்பனை முடிவடைந்ததன் பின்னர் ரூபா 10.058 பில்லியனை பெற்றுக்கொள்வதற்கு கேள்விப்பத்திர குழு தீர்மானித்ததென்பதாகும். மேலும் அதே தினத்தில் ரூபா 10.058 பில்லியனை பெற்றுக்கொண்டதன் பின்னர் படுகடன் திணைக்களம் கூடி ரூபா 1 பில்லியனை ல விற்பனையில் பெற்றுக்கொள்வதற்கும் எஞ்சிய தொகையை நேரடி முறையின் மூலம் பெற்றுக்கொள்வதற்குமான ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை உறுதிப்படுத்தலாகும்.

6. 2015 பெப்ரவரி 27 ஆம் திகதியன்று முறிகள் வழங்கக் கூடிய 03 மாற்று வழிமுறைகளும் அவற்றின் சாதக பாதகங்கள் தொடர்பான ஆய்வொன்றும் 2015 – 2016 மத்திய வங்கி முறிகள் வழங்கல் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சிறப்புப் கணக்காய்வு அறிக்கையின் மூலம் வெளியிடப்படுகின்றது.[19]

6.1 முறிகள் வழங்கல் ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்குமானால் மதிப்பிடப்பட்ட இழப்பு

)i) 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி முறிகள் விநியோகம் எதிர்பார்க்கப்பட்டவாறு ரூபா 1 பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்குமானால் மேற்படி பெறுமதியை உள்வாங்கும் வகையில் பெறப்பட்டிருந்த விலைக்கேட்பு முறியொன்றின் லவிற்பனை விலைப் பெறுமதி ரூபா 104,5073/- வரை மாத்திரம் முறிகள் வழங்கப்பட்டிருக்குமானால் ரூபா 1,403 மில்லியன் தொகையை பெற்றிருக்க முடியும்.

[19] இப்பிரச்சினையைப் பற்றி ஆராய்கின்றபோது கலாநிதி அசீம் சத்தியப்பிரமாண செய்து வழங்கிய சாட்சி மிக முக்கியமானதாகும். (அடிக்குறிப்பு 14 பார்க்கவும்)

அவ்வாறு மேற்படி பெறுமதிக்கு முறிகள் வழங்கல் மட்டுப்படுத்தப்படாத காரணத்தினால் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு அரசாங்கத்துக்கு ரூபா 889,358.050/- மதிப்பிடப்பட்ட இழப்பீடு ற்பட்டுள்ளது.[20],[21]

வாடிக்கையாளர்	கேட்புவிலை ரூபா	முறியின் முகப்புப் பெறுமதி)அரசாங்க பொறுப்பு(ரூபா	செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா	இழப்பு ரூபா
ஊழியர் சேம நிதியம்	**104.507**	**500,000,000.00**	**1,402,769,986.00**	**-**
Entrust Securities PLC	103.116	50,000,000.00	1,454,327,886.00	695,750.00
மக்கள் வங்கி	102.207	100,000,000.00	1,556,535,086.00	2,300,100.00
NSB Fund Management Co. Ltd	102.207	100,000,000.00	1,658,742,286.00	2,300,100.00
ஊழியர் சேம நிதியம்	102.207	1,000,000,000.00	2,680,814,286.00	23,001,000.00
Natwealth Securities Ltd	102.207	50,000,000.00	2,731,917,786.00	1,150,150.00
NSB Fund Management Co. Ltd	101.758	100,000,000.00	2,833,675,786.00	2,749,300.00
Natwealth Securities Ltd	99.999	50,000,000.00	2,883,675,286.00	2,254,150.00
ஊழியர் சேம நிதியம்	99.999	500,000,000.00	3,383,670,286.00	22,541,500.00

[20] இந்த பிரதிகூலமானது நேரடி முறையியல் சரியான முறையியல் என்ற வகையில் பாவிக்கப்படவேண்டிய பின்னணியிலேயே கணிப்பிடப்பட்டுள்ளது. எனினும் 1997 இற்கு பின்னர் முறிகள் அறிமுகஞ் செய்யப்பட்ட பின்னர் லவிற்பனை முறை ஒரு விதியென்ற வகையிலும் நேரடி முறைமை அவசரமான சந்தர்ப்பங்களில் விதிவிலக்கென்ற வகையிலும் பாவிக்கப்பட இயலுமென்பதே அனைத்துவிதமான ஆவணங்களையும் கையேடுகளையும் பரிசீலனை செய்கையில் புலனாகின்றது. மேலும் 2008 இன் பின்னர் அத்தகைய நாணயச்சபை அனுமதி கிடைத்தமைக்கான எவ்விதமான சான்றும் எமக்கு கிடைக்கவில்லை. மேலும் நேரடி முறையிலை பாவிக்கையில் விசேடமாக அரசாங்க நிதியங்களை பாவிக்க வேண்டுமென்ற தெிவான குறிப்பீடொன்று மேற்படி நாணயச்சபை பத்திரங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. மேலும் அங்கு அந்நிதியங்கள் பாதுகாக்கப்படத்தக்கவகையில் ஒருசில நிபந்தனைகள் அப்பத்திரங்களில் உள்ளன. 2008 சனவரி 07 NB/PD/01/26/2008 நாணயச்சபை பத்திரத்திற்கிணங்க நேரடி முறையியலை பாவிக்கையில் தோன்றக்கூடிய ந்து பாதக நிலைமைகள் “possible implications” என இடர்நேர்வு நிலைமைகள் அங்கு காட்டப்பட்டுள்ளன. அதாவது நேரடி முறையியல் நாட்டில் நிலவுகின்ற உறுதியற்ற நிலைமை மற்றும் அத்தியாவசியமான சந்தர்ப்பத்தில் மாத்திரம் நாணயச்சபையின் அனுமதியுடன் பாவிக்கக்கூடிய விதிவிலக்காகுமென்பது மிகவும் தெிவாகின்றது. அவ்வாறாயின் பிரதிகூலத்தைக் கணிப்பிடுகையில் நேரடி முறையியலை பாவிக்கக்கூடிய அல்லது பாவிக்க வேண்டுமென ஊகிக்க வேண்டியது சரியானதல்ல. பிரதிகூலத்தை கணிப்பிடுகின்ற அடிப்படையாக நேரடி முறையியலை உரிய முறையியலாக கருதுவது சரியானதல்ல.

[21] 2016.10.20 ஆம் திகதி இவ்வறிக்கையில் 3.2 இன் கீழ் முறிகள் விற்பனையின்போது அரசாங்கத்துக்கு ற்பட்ட நட்டத்தை கணிப்பீடு செய்யும் கோட்பாட்டின் பின்னர் உட்படுத்தப்பட்ட திருத்தத்துக்கு அச்சந்தர்ப்பத்தில் குழுவில் அனைவரினது இணக்கப்பாடு கிடைக்காவிடினும் 2016.10.21 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முன்வைக்கப்பட்ட கோட்பாட்டு ரீதியான குறைகளைக் கொண்டிருந்ததனால் அங்கத்தினர் குழுவினால் முன்வைக்கப்பட்ட கோட்பாட்டுக்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதி இணக்கம் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், இந்த முறிகள் லவிற்பனை ரூபா 1 பில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருக்குமேயாயின் அரசாங்கத்துக்கு ற்பட்ட நட்டமாவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முதல் கணிப்பீட்டின் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட அனுமானிக்கப்பட்ட நட்டமாகும். இதற்கான காரணம் 2015 பெப்ருவரி 27 ஆத் திகதி காலை 3 நாள் விதி மாற்றப்பட்டதனால் ஒட்டுமொத்த சந்தை வட்டி வீதம் 1 ½ % இனால் அதிகரித்தது. இச்சம்பவம் எம்மால் இந்த அனுமானத்துக்கு உட்படுத்தப்பட வில்லை. எனவே உண்மையிலேயே நேரடி முறையின் மூலம் இத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு செலுத்தவேண்டிய வட்டி வீதம் எவ்வளவென்பதை எடுத்துக்கூறுவதற்கான சாத்தியப்பாடும் இல்லை. (லவிற்பனை நடாத்தப்பட்ட வாரத்துக்கு முந்திய நாட்களில் நேரடி முறையின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது ரூபா 3 பில்லியன் என சாட்சியங்களினால் வெளிவந்திருந்தது.)

Perpetual Tresuries Ltd	97.878	250,000,000.00	3,628,365,286.00	16,573,250.00
Perpetual Tresuries Ltd	95.8394	250,000,000.00	3,867,963,786.00	21,669,750.00
Seylan Bank PLC	95.8074	1,250,000,000.00	5,065,556,286.00	108,748,750.00
Wealth Trust Securities Ltd	93.879	50,000,000.00	5,112,495,786.00	5,314,150.00
Perpetual Tresuries Ltd	93.879	500,000,000.00	5,581,890,786.00	53,141,500.00
Perpetual Tresuries Ltd	91.9928	1,000,000,000.00	6,501,818,786.00	125,145,000.00
Wealth Trust Securities Ltd	90.177	50,000,000.00	6,546,907,286.00	7,165,150.00
The Hongkong and Shanghai Banking Corporation Ltd	90.177	100,000,000.00	6,637,084,286.00	14,330,300.00
Pan Asia Banking Corporation PLC	90.177	250,000,000.00	6,862,526,786.00	35,825,750.00
Capital Alliance Ltd	90.1769	100,000,000.00	6,952,703,686.00	14,330,400.00
இலங்கை வங்கி	90.1699	3,000,000,000.00	9,657,800,686.00	430,122,000.00
மொத்தம்				**889,358,050.00**

6.2 இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் முகாமைத்துவக் குழுவின் விதந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 2.608 பில்லியனை தாண்டியமையின் காரணமாக ஏற்பட்ட இழப்பு

உள்நாட்டு பொதுப் படுகடன் திணைக்களத்தினால் கேள்விப் பத்திரக் குழுவுக்கு வழங்கப்பட்ட மாற்று முறைகளைக் காட்டுகின்ற பத்திரத்தில் (Option Sheet) விதந்துரைக்கப்பட்டிருந்த ரூபா 2,608 மில்லியன் முறிகளை (முறியின் விலைக்கேட்பு பெறுமதி ரூபா 102.20720 ஆகின்றவாறு) வழங்குவதற்கான இயலுமை காணப்பட்டது. அவ்வாறு செய்யாது ரூபா 10.058 பில்லியன் வரை முறிகள் வழங்கப்பட்டமையின் காரணமாக அரசாங்கத்திற்கு பின்வரும் அட்டவணையில் கணிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளவாறு ரூபா 688,538,600 ஆன மதிப்பிடப்பட்ட இழப்பு □றப்பட்டிருந்தது. [22]

வாடிக்கையாளர்	கேட்புவிலை ரூபா	முறியின் முகப்புப் பெறுமதி (அரசாங்க பொறுப்பு) ரூபா	செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா	இழப்பு ரூபா
Natwealth Securities Ltd	**102.21**	**50,000,000.00**	**2,731,917,786.00**	-
NSB Fund Management Co. Ltd	101.76	100,000,000.00	2,833,675,786.00	449,000.00
Natwealth Securities Ltd	100.00	50,000,000.00	2,883,675,286.00	1,104,000.00
ஊழியர் சேம நிதியம்	100.00	500,000,000.00	3,383,670,286.00	11,040,000.00
Perpetual Tresuries Ltd	97.88	250,000,000.00	3,628,365,286.00	10,822,500.00
Perpetual Tresuries Ltd	95.84	250,000,000.00	3,867,963,786.00	15,919,000.00
Seylan Bank PLC	95.81	1,250,000,000.00	5,065,556,286.00	79,995,000.00
Wealth Trust Securities Ltd	93.88	50,000,000.00	5,112,495,786.00	4,164,000.00
Perpetual Tresuries Ltd	93.88	500,000,000.00	5,581,890,786.00	41,640,000.00
Perpetual Tresuries Ltd	91.99	1,000,000,000.00	6,501,818,786.00	102,142,000.00
Wealth Trust Securities Ltd	90.18	50,000,000.00	6,546,907,286.00	6,015,000.00
The Hongkong and Shanghai Banking Corporation Ltd	90.18	100,000,000.00	6,637,084,286.00	12,030,000.00
Pan Asia Banking Corporation PLC	90.18	250,000,000.00	6,862,526,786.00	30,075,000.00
Capital Alliance Ltd	90.18	100,000,000.00	6,952,703,686.00	12,030,100.00
இலங்கை வங்கி	90.17	3,000,000,000.00	9,657,800,686.00	361,113,000.00
மொத்தம்				**688,538,600.00**

[22] எவ்வாறாயினும், இந்த முறிகள் □லவிற்பனை ரூபா 26 பில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருக்குமேயாயின் அரசாங்கத்துக்கு □றப்பட்ட நட்டமாவது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் முதல் கணிப்பீட்டின் கீழ் கணிப்பீடு செய்யப்பட்ட அனுமானிக்கப்பட்ட நட்டமாகும். மேலே அடிக்குறிப்பு 20, 21 இல் காட்டப்பட்ட விடயங்கள் இந்தக் கணிப்பீட்டுக்கும் □ற்புடையதாகும்.

6.3 ரூபா 20 பில்லியன் பெற்றுக்கொள்வதற்கான மத்திய வங்கி ஆளுநரின் யோசனையை நடைமுறைப்படுத்தியிருந்தால் ஏற்பட்டிருக்கக் கூடிய மதிப்பிடப்பட்ட இழப்பு

முறிகள் வழங்கல் ரூபா ஒரு பில்லியனுக்கு மட்டுப்படுத்தப்படாமல் மத்திய வங்கி ஆளுநர் முன்மொழிந்த ரூபா 20 பில்லியன்களுக்கான முறிகள் வழங்கப்பட்டிருக்குமானால் பின்வரும் அட்டவணையில் கணக்கிடப்பட்டுள்ளவாறு ரூபா 2,730,059,050 இழப்பு அரசாங்கத்துக்கு □ற்பட்டிருக்கக் கூடும்.[23]

[23] ரூபா 20 பில்லியன் பெறவில்லை என்பதால் இது ஒரு கற்பனையான கருத்தாகும்.

வாடிக்கையாளர்	கேட்புவிலை ரூபா	முறியின் முகப்புப் பெறுமதி)அரசாங்க பொறுப்பு(ரூபா	செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா	இழப்பு ரூபா
ஊழியர் சேம நிதியம்	**104.5073**	**500,000,000**	**1,402,769,986**	**-**
Entrust Securities PLC	103.1158	50,000,000	1,454,327,886	695,750
மக்கள் வங்கி	102.2072	100,000,000	1,556,535,086	2,300,100
NSB Fund Management Co. Ltd	102.2072	100,000,000	1,658,742,286	2,300,100
ஊழியர் சேம நிதியம்	102.2072	1,000,000,000	2,680,814,286	23,001,000
Natwealth Securities Ltd	102.207	50,000,000	2,731,917,786	1,150,150
NSB Fund Management Co. Ltd	101.758	100,000,000	2,833,675,786	2,749,300
Natwealth Securities Ltd	99.999	50,000,000	2,883,675,286	2,254,150
ஊழியர் சேம நிதியம்	99.999	500,000,000	3,383,670,286	22,541,500
Perpetual Tresuries Ltd	97.878	250,000,000	3,628,365,286	16,573,250
Perpetual Tresuries Ltd	95.8394	250,000,000	3,867,963,786	21,669,750
Seylan Bank PLC	95.8074	1,250,000,000	5,065,556,286	108,748,750
Wealth Trust Securities Ltd	93.879	50,000,000	5,112,495,786	5,314,150
Perpetual Tresuries Ltd	93.879	500,000,000	5,581,890,786	53,141,500
Perpetual Tresuries Ltd	91.9928	1,000,000,000	6,501,818,786	125,145,000
Wealth Trust Securities Ltd	90.177	50,000,000	6,546,907,286	7,165,150
The Hongkong and Shanghai Banking Corporation Ltd	90.177	100,000,000	6,637,084,286	14,330,300
Pan Asia Banking Corporation PLC	90.177	250,000,000	6,862,526,786	35,825,750
Capital Alliance Ltd	90.1769	100,000,000	6,952,703,686	14,330,400
இலங்கை வங்கி	90.1699	3,000,000,000	9,657,800,686	430,122,000
Pan Asia Banking Corporation PLC	88.428	150,000,000	9,790,442,686	24,118,950
இலங்கை வங்கி	88.4074	5,000,000,000	14,210,812,686	804,995,000
இலங்கை வங்கி	86.769	5,000,000,000	18,549,262,686	886,915,000
Commercial Bank of Ceylon PLC	86.7428	50,000,000	18,592,634,086	8,882,250
Pan Asia Banking Corporation PLC	86.7425	100,000,000	18,679,376,586	17,764,800
Acuity Securities Ltd	86.74	100,000,000	18,766,116,586	17,767,300
Commercial Bank of Ceylon PLC	86.0851	50,000,000	18,809,159,136	9,211,100
Union Bank of Colombo PLC	76.4803	50,000,000	18,847,399,286	14,013,500
Union Bank of Colombo PLC	74.2125	50,000,000	18,884,505,536	15,147,400
Seylan Bank PLC	62.6216	100,000,000	18,947,127,136	41,885,700
மொத்தம்				**2,730,059,050**

மேற்குறிப்பிட்ட மதிப்பிடப்பட்ட இழப்பு அன்றைய தினத்துக்கு உடனடியாக □ற்பட்டிருக்கக் கூடிய நிலைமை மட்டுமே என்பதோடு அதன் மூலம் □ற்படக்கூடிய நீண்ட கால தாக்கத்தையும் பார்க்குமிடத்து மேற்படி மாற்று இழப்புகள் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதென்பதையும் நிராகரிக்க முடியாதென்பது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் மேலும் சுட்டிக்காட்டப்படுகிறது.

7. 2016 *மார்ச் 10 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெற்ற முறிகள் ஏலவிற்பனைகள் இரண்டு நிராகரிக்கப்பட்டமை*

2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடைபெற்ற இரண்டு, முறிகள் □லவிற்பனைகளின் போது எதிர்பார்க்கப்பட்ட விளைவு வீதங்களை விடவும் அதிக வீதங்களை குறிப்பிட்டு விலைகேட்புகள் முன்வைக்கப்பட்டதால் நிராகரிக்கப்பட்டிருந்ததாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (இணைப்பு 1 இன் இணைப்பு xxxi)

8. 2016 *மார்ச் 29ஆந் திகதி மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட திறைசேரி முறிகள் வழங்கல்*

2016 மார்ச் 29ஆந் திகதி ரூபா 10 பில்லியன் வீதம் பல்வேறு முதிர்ச்சிக் காலங்களைக் கொண்டதாக முதிர்ச்சியடையும் 04 முறிகளுக்கான அதாவது, 40 ரூபா பில்லியன் பெறுமதியான முறிகள் வழங்கலுக்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்படுகின்றது.

8.1 *இக்கொடுக்கல் வாங்கலின்போதும் பேர்ப்பச்சுவல் ரெஷரீஸ் கம்பனியினால் 35% முதல் 44% வரையிலான முறிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் பின்வரும் விடயங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன.*

இதன்போது ரூபா 40 பில்லியன் வரையறைக்குள் கோரப்பட்டுள்ளதுடன், இந்த விலையில் மேலும், மேலதிக ரூபா 37.732 பில்லியன் (முகப் பெறுமதி) அதாவது, ரூபா 77.732 பில்லியன் பெறுமதியான முகப் பெறுமதி வரையில் முறிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு விலைகள் கோரப்பட்ட பெறுமதியை விஞ்சியதாக வழங்கப்பட்ட முறிகளில் 60%□ பேர்ப்பச்சுவல் ரெஷரீ□ கம்பனி தனதாக்கிக் கொண்டுள்ளது. குறிப்பிட்ட நிறுவனமானது குறைந்த விளைவு வீதத்தின் கீழ், முதலாவது முறியில் 0.5% □ மாத்திரம் உரித்தாக்கிக் கொள்வதுடன், உயர் விளைவு வீதங்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள □னைய 3 முறிகளில் 35% முதல் 44% வரையிலான அளவினை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றது. அதாவது கழிவு வீதம் அதிகரிக்கையில் அதிகளவான முறிகளைப் பெற்றுக்கொண்டுள்ளது.[24], [25]

[24] மேற்படி கொடுக்கல் வாங்கல் தொடர்பான □லவிற்பனை நடைபெறும் சந்தர்ப்பத்திலோ அல்லது கேள்விப்பத்திர குழு முடிவெடுக்கும் சந்தர்ப்பத்திலோ முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்□ஜூன் ம□நேந்திரன் அல்லது பிரதி ஆளுநர்களான கலாநிதி நந்தலால் வீரசிங்கவிடம் மற்றும் ஆனந்த சில்வாவிடம் வினவியதாகவோ அல்லது தலையீடு செய்தமை பற்றியோ எத்தகைய சாட்சியும் இக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. இது விசேடமாக கருதப்பட வேண்டிய விடயமாகும்.

[25] குழுவின் அவதானிப்பின் பிரகாரம், மேற்படி முறிகள் வழங்கலின்போது மேற்கொள்ளவேண்டியிருந்தது, அரசாங்கம் அதிக வட்டி செலுத்த வேண்டிய முறிகளை குறைவான அளவிலும் குறைந்த வட்டி செலுத்த வேண்டிய முறிகளை அதிக அளவிலும் பெற்றுக்கொள்வதாகும்.

இந்த முறிகளின் □லவிற்பனைக்கு முன்னர் இடம்பெற்ற இரண்டு □லவிற்பனைகளும் நிராகரிக்கப்பட்டுவதற்கு அடிப்படையாக அமைந்த, உயர் விளைவு வீதங்கள் முன்வைக்கப்படுதலானது இந்த □லவிற்பனையிலும் அவதானிக்கப்பட்ட போதிலும், 14.0742 போன்ற உயர் விளைவு வீதத்தில் இந்த முறி வழங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 4 முறிகள் மூலமும் ரூபா 77.73 பில்லியன் முகப் பெறுமதி கிடைக்கும் வகையில் முறிகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதிலும், □லவிற்பனையிலிருந்து ரூபா 59.325 பில்லியன் மாத்திரமே □ட்டப்பட்டுள்ளதுடன், ரூபா18.407 பில்லியனை □னைய குறுகிய கால கடன் தோற்றுவாய்கள் மூலம் பூர்த்தி செய்து கொள்ள வேண்டி □ற்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தீர்மானத்தின் பாதகமான தாக்கமே இவ்வாறு □ற்படுவதற்கு காரணமாக அமைந்துள்ளமை புலனாகியுள்ளது.

2015 பெப்ரவரி மாதம் 27ஆந் திகதிய முறிகளின் □லவிற்பனையிலிருந்து பெற்றுக்கொள்வதற்காக விலைகள் கோரப்பட்ட ரூபா1 பில்லியனை விஞ்சி, ரூபா 10.058 பில்லியன் வரையில் விலைக்கேட்பு □ற்றுக்கொள்ளப்படுதல் மற்றும் 2016 மார்ச் 29ஆந் திகதி ரூபா 40 பில்லியனை பெற்றுக்கொள்வதற்காக விலைகள் கோரப்பட்டு, ரூபா 77.73 பில்லியன் வரையில் விலைக்கேட்பு □ற்றுக்கொள்ளப்படுதல் போன்றனவாக, உத்தேச எல்லைகளைத் தாண்டி பாரியளவில் முறிகள் வழங்கப்பட்டமையால், இக்குறிப்பிட்ட எல்லைகளைத் தாண்டிய பகுதிகளை உரித்தாக்கிக் கொள்ளும் வாய்ப்பு பெரும்பாலும் பேர்ப்பச்சுவல் ரெஷரீ□ கம்பனிக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

முதனிலை வாடிக்கையாளர்களால் விலைமனு சமர்ப்பிக்கப்பட்டு இவை வெற்றியளிக்காத சந்தர்ப்பங்கள் மற்றும் ஏனைய முதனிலை வாடிக்கையாளர்களின் கேள்விப் பத்திரங்கள் வெற்றியளிக்காத சந்தர்ப்பங்களுடன் ஒப்பிடும் போது பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனத்தின் விலைமனு நிராகரிக்கப்பட்டமை ஒப்பீட்டளவில் கீழ் மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டுள்ளது.

2016 செப்தெம்பர் 25 திகதி சன்டே ஒப்சேவர் பத்திரிகையில் பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனத்தினால் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட இந்நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுக்கு அமைவாக (இணைப்பு - 18) 2014 / 2015 மற்றும் 2015/ 2016 ஆண்டுக்கான இந்நிறுவனத்தின் அறிவித்த முலதனம் ரூபா 3 10.3 மில்லியனாக காணப்பட்ட போது இவ்வாண்டுக்கான வரிக்குப் பிந்திய இலாபம் முறையே ரூபா 0.9 59 பில்லியன் மற்றும் ரூபா 5.124 பில்லியன் என்ற வகையில் பெருமளவு எண்ணிக்கையில் காணப்பட்டமையானது மேற்கூறப்பட்ட கணக்காய்வு ஊடாக கண்டறியப்பட்ட விடயங்கள் காரணமாக ஏற்பட்டதொன்று என புறக்கணிக்க முடியாது.

பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனத்தின் 2015 பெப்ருவரி 27 ஆந் திகதிய கொடுக்கல் வாங்கலின் நிதிச் சந்தை நடத்தை பற்றி கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் கீழ் கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

(i) பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனம் ஏல விற்பனை நிறைவடைவதற்கு மிக அண்மித்த காலத்தில் அதாவது 08 நிமிடங்களில் மொத்த விலைக்கேட்புத் தொகையான ரூபா 20.7 08 பில்லியனில் ரூபா 13 .60 பில்லியன் விலைக்கேட்பை சமர்ப்பித்திருந்தது.

(ii) மேற்படி ரூபா 13 .60 பில்லியன் பெறுமதியில் ரூபா 13 .00 பில்லியன் பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனத்தின் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

ஆயினும் அவ்வாறு செய்ததாக விடயங்கள் புலப்படவில்லை. ஆகையால் இத்திகதியில் முறிகள் வழங்கல் தொடர்பான விபரமான விசாரணையொன்று தேவையென்பதை குழு அவதானிக்கின்றது.

(iii) ரூபா 01 பில்லியன் பெறுமதியான திறைசேரி முறிக்காக விலைக் கேட்பு கோரப்பட்டிருந்த நிலையில் ரூபா 10.058 பில்லியன் வரை விலைக் கேட்பு ஏ ற்றுக்கொள்ளப்பட்டமை.

(iv) பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனத்தின் சார்பில் இலங்கை வங்கி ரூபா 13 பில்லியன் பெறுமதியான முறிக்காக விலைக் கேட்பு சமர்ப்பித்திருந்தமை மற்றும் இவ்வாறு முதனிலை வாடிக்கையாளரொருவருக்காக வேறு முதனிலை வாடிக்கையாளர் ஒருவர் விலைக் கேட்பு சமர்ப்பித்த முதல் சந்தர்ப்பமாக அமைந்தமை.

(v) ரூபா 1 பில்லியன் விலைக் கேட்பு கோரப்பட்டிருந்த வேளையில், பேர்பெச்சுவல் டிரஷரீ நிறுவனத்தினால் ரூபா 2 பில்லியன் நேரடியாகவும் ரூபா 13 பில்லியன் இலங்கை வங்கியின் ஊடாகவும் மொத்தமாக ரூபா 15 பில்லியன் விலைக் கேட்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை மற்றும் இவ்வாறு விலைக் கேட்பு கோரப்பட்டிருந்த பெறுமதியை போன்று 15 மடங்கான முறிகள் தொகைக்கு விலைக் கேட்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை வழமைக்கு நேர்மாறான நிலைமையாகும்.[26]

[26] பர்பெசுவல் டிரெசரீ□ கம்பனி மேற்படி அதிக லாபத்தை பெற்றிருப்பது முதனிலை சந்தையிலிருந்து அவர்கள் பெற்றுக்கொண்ட மேற்படி முறிகளை இரண்டாம்நிலைச் சந்தையில் விற்பதன் மூலமாகும். இத்தகைய அதிக வட்டியைக் கொண்டுள்ள முறிகளை இரண்டாம்நிலை சந்தையில் பர்பெசுவல் டிரெசரீ□ நிறுவனத்திடமிருந்து கொள்வனவு செய்திருப்பது அரசாங்கத்திற்குச் சொந்தமான ஊழியர் சேம நிதியம் போன்ற நிதிகளா என்பதை ஆராய்ந்து பார்ப்பதற்காகவும் அத்தகைய கொடுக்கல் வாங்கலில் அவர்கள் □டுபடுவதற்கான காரணங்களை ஆராய்வதற்காகவும் விரிவான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது குழுவின் கருத்தாகும். மேலும் ஊழியர் சேம நிதியத்துக்கு முதனிலை சந்தையில் முறிகளை கொள்வனவு செய்ய இயலுமாயுள்ள போதிலும் இரண்டாம்நிலை சந்தையில் அதிக வட்டி வீதத்திற்கு கொள்வனவு செய்தமைக்கான காரணங்களைப் பற்றிய ஆராய்தல் வேண்டும்.

8.2 2016 மார்ச் 29 திகதி நடைபெற்ற முறிகள் வழங்கல் காரணமாக இடம்பெற்ற கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் சுட்டிக்காட்டப்படும் ரூபா 784இ898இ755 மதிப்பிடப்பட்ட இழப்பு

இம்முறிகள் வழங்கலில் எதிர்ப்பார்க்கப்பட்ட பெறுமதியான ரூபா 4 0 பில்லியனுக்கு பதிலாக ரூபா 7 7 .7 3 2 பில்லியன் வரையில் ஏ ற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் இவ்வாறு செய்யாமல் முறிகள் வழங்கலில் முகப் பெறுமதியான ரூபா 4 0 மில்லியனுக்கு வரையறுக்கப்பட்டிருப்பின் கீழ் காணப்படும் அட்டவணையில் கணிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 784,898,755 மதிப்பிடப்பட்ட இழப்பை தவிர்த்திருக்கலாம் என்பது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.[27]

வாடிக்கையாளர்	கேட்புவிலை ரூபா	முறியின் முகப்புப் பெறுமதி (அரசாங்க பொறுப்பு) ரூபா	செலுத்த வேண்டிய திரண்ட பெறுமதி ரூபா	இழப்பு ரூபா
	84.3512	800,000,000	**8,733,875,000**	-
மொத்தம்				-
மக்கள் வங்கி	**75.57580**	**120,000,000**	7,886,053,130	-
Natwealth Securities Ltd	75.4451	100,000,000	7,961,498,230	130,700
மக்கள் வங்கி	75.4451	120,000,000	8,052,032,350	156,840
மக்கள் வங்கி	75.3147	120,000,000	8,142,409,990	313,320
Perpetual Tresuries Ltd	75.2279	50,000,000	8,180,023,940	173,950
மக்கள் வங்கி	75.2279	160,000,000	8,300,388,580	556,640
Perpetual Tresuries Ltd	75.2279	200,000,000	8,450,844,380	695,800
மக்கள் வங்கி	75.1845	120,000,000	8,541,065,780	469,560
மக்கள் வங்கி	75.0547	120,000,000	8,631,131,420	625,320
மக்கள் வங்கி	74.9253	120,000,000	8,721,041,780	780,600
Seylan Bank PLC	74.8393	100,000,000	8,795,881,080	736,500
Perpetual Tresuries Ltd	74.7961	50,000,000	8,833,279,130	389,850
Perpetual Tresuries Ltd	74.7961	100,000,000	8,908,075,230	779,700
Wealth Trust Securities Ltd	74.7961	100,000,000	8,982,871,330	779,700
மக்கள் வங்கி	74.7961	120,000,000	9,072,626,650	935,640
Perpetual Tresuries Ltd	74.7961	250,000,000	9,259,616,900	1,949,250
Seylan Bank PLC	74.7959	160,000,000	9,379,290,340	1,247,840

[27] கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் 2014 சனவரி மாதம் தொடக்கம் 2016 மே மாதம் வரை முறிகள் லவிற்பனையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட 25 கொள்வனவுகள் பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு அந்த லவிற்பனைகள் 25 இல் 23 தொடர்பாக இக்குழுவினால் எதுவித சாட்சி விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும், 2016.03 .29 ஆம் திகதிய முறிகள் தொடர்பாகவும் விபரமான சாட்சி விசாரணை மேற்கொள்ளப்படவில்லை. விபரமான விசாரணையானது 2015 பெப்ருவரி 27 ஆம் திகதிய முறிகள் வழங்கல் தொடர்பாக மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளது. எஞ்சிய 23 லவிற்பனைகள் தொடர்பாகவும் எதுவித சாட்சிகளும் விசாரிக்காதமையானது இவ்விசாரணையின்போது சரியான தீர்மானமொன்றை மேற்கொள்வதில் சிரமம் ற்படுத்தியுள்ளது. எனவே எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுகின்ற விசாரணையொன்றில் அது தொடர்பாக 2008 தொடக்கம் 2016 வரையிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சகல முறிகள் லவிற்பனை முறைகள் மற்றும் நேரடி முறை பின்னபற்றப்படுதல் என்பன தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. குறிப்பாக அச்சாட்சிகளை விசாரிக்கும்போது சட்டக் கண்காய்வொன்று (Forensic Audit) மேற்கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமானதெனத் தெரிகின்றது. அடிக் குறிப்பு இலக்கம் 20 மற்றும் 21 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இதற்கும் ற்புடையதாகும்.

Capital Alliance Ltd	74.7959	200,000,000	9,528,882,140	1,559,800
Perpetual Tresuries Ltd	74.3678	50,000,000	9,566,066,040	604,000
மக்கள் வங்கி	74.3678	200,000,000	9,714,801,640	2,416,000
Perpetual Tresuries Ltd	74.3678	250,000,000	9,900,721,140	3,020,000
Perpetual Tresuries Ltd	73.943	50,000,000	9,937,692,640	816,400
Perpetual Tresuries Ltd	73.943	500,000,000	10,307,407,640	8,164,000
இலங்கை வங்கி	73.9345	250,000,000	10,492,243,890	4,103,250
Capital Alliance Ltd	73.732	100,000,000	10,565,975,890	1,843,800
Wealth Trust Securities Ltd	73.7319	100,000,000	10,639,707,790	1,843,900
Perpetual Tresuries Ltd	73.5216	50,000,000	10,676,468,590	1,027,100
மக்கள் வங்கி	73.5216	250,000,000	10,860,272,590	5,135,500
Perpetual Tresuries Ltd	73.5216	750,000,000	11,411,684,590	15,406,500
Perpetual Tresuries Ltd	73.1036	50,000,000	11,448,236,390	1,236,100
Seylan Bank PLC	73.1036	180,000,000	11,579,822,870	4,449,960
Perpetual Tresuries Ltd	73.1036	750,000,000	12,128,099,870	18,541,500
Seylan Bank PLC	72.6891	100,000,000	12,200,788,970	2,886,700
Capital Alliance Ltd	72.6891	100,000,000	12,273,478,070	2,886,700
Wealth Trust Securities Ltd	72.68902	100,000,000	12,346,167,090	2,886,780
Perpetual Tresuries Ltd	72.689	50,000,000	12,382,511,590	1,443,400
First Capital Treasuries Ltd	72.689	100,000,000	12,455,200,590	2,886,800
Perpetual Tresuries Ltd	72.689	750,000,000	13,000,368,090	21,651,000
இலங்கை வங்கி	72.656	180,000,000	13,131,148,890	5,255,640
Perpetual Tresuries Ltd	72.483	2,000,000,000	14,580,808,890	61,856,000
Seylan Bank PLC	72.2778	100,000,000	14,653,086,690	3,298,000
Perpetual Tresuries Ltd	72.2777	50,000,000	14,689,225,540	1,649,050
மக்கள் வங்கி	72.2777	160,000,000	14,804,869,860	5,276,960
Perpetual Tresuries Ltd	72.2777	2,000,000,000	16,250,423,860	65,962,000
மொத்தம்				**258,828,050**
Capital Alliance Ltd	**75.91150**	**200,000,000**	8,012,848,545.00	
மக்கள் வங்கி	75.821	60,000,000	8,058,341,145	54,300
மக்கள் வங்கி	75.6858	60,000,000	8,103,752,625	135,420
Perpetual Tresuries Ltd	75.6858	500,000,000	8,482,181,625	1,128,500
Perpetual Tresuries Ltd	75.2376	750,000,000	9,046,463,625	5,054,250
Perpetual Tresuries Ltd	74.7933	100,000,000	9,121,256,925	1,118,200
Capital Alliance Ltd	74.7933	200,000,000	9,270,843,525	2,236,400
Perpetual Tresuries Ltd	74.7933	750,000,000	9,831,793,275	8,386,500
Perpetual Tresuries Ltd	74.134	500,000,000	10,202,463,275	8,887,500
Perpetual Tresuries Ltd	74.0904	500,000,000	10,572,915,275	9,105,500
Perpetual Tresuries Ltd	74.0468	500,000,000	10,943,149,275	9,323,500
Perpetual Tresuries Ltd	74.0032	500,000,000	11,313,165,275	9,541,500
Perpetual Tresuries Ltd	73.9597	500,000,000	11,682,963,775	9,759,000
Perpetual Tresuries Ltd	73.9162	2,000,000,000	13,161,287,775	39,906,000
மொத்தம்				**104,636,570**
Perpetual Tresuries Ltd	**73.71470**	**1,000,000,000.00**	8,185,426,680.00	-
Seylan Bank PLC	73.7146	50,000,000	8,222,283,980	50
Wealth Trust Securities Ltd	73.4701	100,000,000	8,295,754,080	244,600
Perpetual Tresuries Ltd	73.2268	25,000,000	8,314,060,780	121,975
Wealth Trust Securities Ltd	73.2268	50,000,000	8,350,674,180	243,950
Wealth Trust Securities Ltd	73.2268	100,000,000	8,423,900,980	487,900
Perpetual Tresuries Ltd	73.2268	1,000,000,000	9,156,168,980	4,879,000

Seylan Bank PLC	73.2267	20,000,000	9,170,814,320	97,600
Capital Alliance Ltd	72.9849	100,000,000	9,243,799,220	729,800
Wealth Trust Securities Ltd	72.9848	150,000,000	9,353,276,420	1,094,850
Wealth Trust Securities Ltd	72.9848	500,000,000	9,718,200,420	3,649,500
Wealth Trust Securities Ltd	72.9848	600,000,000	10,156,109,220	4,379,400
Perpetual Tresuries Ltd	72.7441	25,000,000	10,174,295,245	242,650
மக்கள் வங்கி	72.7441	40,000,000	10,203,392,885	388,240
Wealth Trust Securities Ltd	72.7441	100,000,000	10,276,136,985	970,600
Perpetual Tresuries Ltd	72.7441	1,000,000,000	11,003,577,985	9,706,000
NSB Fund Management Co. Ltd	72.744	10,000,000	11,010,852,385	97,070
NSB Fund Management Co. Ltd	72.2665	10,000,000	11,018,079,035	144,820
Perpetual Tresuries Ltd	72.2665	25,000,000	11,036,145,660	362,050
Seylan Bank PLC	72.2665	40,000,000	11,065,052,260	579,280
Wealth Trust Securities Ltd	72.2665	100,000,000	11,137,318,760	1,448,200
Perpetual Tresuries Ltd	72.2665	1,000,000,000	11,859,983,760	14,482,000
Wealth Trust Securities Ltd	72.0296	250,000,000	12,040,057,760	4,212,750
NSB Fund Management Co. Ltd	71.794	10,000,000	12,047,237,160	192,070
மக்கள் வங்கி	71.794	60,000,000	12,090,313,560	1,152,420
Seylan Bank PLC	71.794	100,000,000	12,162,107,560	1,920,700
Capital Alliance Ltd	71.794	100,000,000	12,233,901,560	1,920,700
Wealth Trust Securities Ltd	71.794	550,000,000	12,628,768,560	10,563,850
Wealth Trust Securities Ltd	71.794	550,000,000	13,023,635,560	10,563,850
Seylan Bank PLC	71.3266	60,000,000	13,066,431,520	1,432,860
Wealth Trust Securities Ltd	71.3265	100,000,000	13,137,758,020	2,388,200
Perpetual Tresuries Ltd	71.0946	1,000,000,000	13,848,704,020	26,201,000
Perpetual Tresuries Ltd	71.0484	1,000,000,000	14,559,188,020	26,663,000
Perpetual Tresuries Ltd	71.0022	1,000,000,000	15,269,210,020	27,125,000
Perpetual Tresuries Ltd	70.9561	1,000,000,000	15,978,771,020	27,586,000
Perpetual Tresuries Ltd	70.9561	1,000,000,000	16,688,332,020	27,586,000
மக்கள் வங்கி	70.864	80,000,000	16,745,023,220	2,280,560
Wealth Trust Securities Ltd	70.86395	100,000,000	16,815,887,170	2,850,750
Wealth Trust Securities Ltd	70.63451	500,000,000	17,169,059,720	15,400,950
Wealth Trust Securities Ltd	70.63451	500,000,000	17,522,232,270	15,400,950
Capital Alliance Ltd	70.6345	100,000,000	17,592,866,770	3,080,200
Seylan Bank PLC	70.4065	15,000,000	17,603,427,745	496,230
Seylan Bank PLC	70.4065	80,000,000	17,659,752,945	2,646,560
Pan Asia Banking Corporation PLC	70.4063	5,000,000,000	21,180,067,945	165,420,000
மொத்தம்				**421,434,135**
முழு மொத்தம்				**784,898,755**

[28]

[28] எவ்வாறாயினும், மேற்படி முறிகள் □லவிற்பனை ரூபா 40 பில்லியனுக்கு வரையறுக்கப்பட்டதாக இருந்திருப்பின் அரசாங்கற்கு நேருடும் இழப்பானது, கணக்காய்வாளர் தலைமையதிபதியின் ஆரம்ப கணிப்பீடுகளின் கீழ் கணிப்பிடப்பட்ட கருதுகோள் அடிப்படையிலானதொரு இழப்பாகும். மேலே அடிக் குறிப்பு இலக்கம் 20, 21 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் இக்கணிப்பீட்டுக்கும் □ற்புடையதாகும்.

9. 2015 – 2016 *காலத்தினுள் மத்திய வங்கியின் முறிகள் வழங்கல் காரணமாக இந்நாட்டு நிதிச் சந்தையில் ஏற்பட்ட தாக்கங்கள் மற்றும் அனுகூலங்கள் – பிரதிகூலங்கள் பற்றி கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் விடயங்கள் தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது*

9.1 *ஊழியர் சேம நிதியத்திற்கு நேர்ந்துள்ள நிதிசார் பிரதிகூலம்*

மேற்படி முறிகள் வழங்கலின் மேலுமொரு விசேட விடயம் என்னவெனில், இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழுள்ள மற்றும் முதனிலை லவிற்பனையில் முறிகள் கொள்வனவு சேய்யும் தகுதியுள்ள நிறுவனமொன்றாக ஊழியர் சேம நிதியம் கூடிய விளைவு வீதமுள்ள முதனிலைச் சந்தையிலிருந்து ஒப்பீட்டு ரீதியாக குறைவான அளவு முறிகளை பெற்றுக்கொண்டுள்ளதோடு குறைந்த விளைவு வீதத்துடன் கூடியதாக இரண்டாம்நிலைச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்துள்ளதன் காரணமாக, பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த நிதிசார் அனுகூலம் இழக்கப்பட்டுள்ளதென்பதாகும்.[29]

அவர்களுக்குத் தேவையான எஞ்சிய முறிகளை நேரடியாகவே முதனிலைச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்ய விண்ணப்பிக்காமலே, இரண்டாம்நிலைச் சந்தையிலிருந்து கொள்வனவு செய்தமை கேள்விக்குறியதெனவும் கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை

மூலம் சுட்டிக்காட்டப்படுகின்றது. மத்திய வங்கியின் நாணயச் சபையின் பொறுப்பில் உள்ள நிறுவனமொன்றான ஊழியர் சேமலாப நிதியம் இவ்வாறு செயற்படுவது தொடர்பாக மத்திய வங்கி கவனம் செலுத்தாமை சிக்கலான நிலைமையாகும் என்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

9.2 *வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்திய வங்கி முறிகளைக் கொள்வனவு செய்ய முன்வருவார்கள் எனும் எதிர்பார்ப்பு நிறைவேறாமை*

2015 பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதி 30 வருடங்களில் காலம் பூர்த்தியடைகின்ற முறிகளுக்கே திட்டமிடப்பட்டிருந்ததாகவும் அவ்வாறான நீண்டகால முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முன்வருவார்கள் என்று மத்திய வங்கி எதிர்பார்த்த போதிலும் அவ்வாறு முன்வருவது இடம்பெற்றிருக்கவில்லை என்பது குழுவின் விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

---

[29] ஊழியர் சேமலாப நிதியத்தின் பணத்தை முதனிலை வணிகர்களுக்கு தவறான அனுகூலங்களைப் பெற்றுக்கொடுக்கும் பொருட்டு பயன்படுத்தப்பட்ட நிலைமை கடந்த 06 ஆண்டுகளினுள் அவதானிக்கப்பட்டுள்ளது. இந்த நிலைமை மேலும் தொடர்வதாகத் தெரிகிறது. ஆகவே, ஊழியர் சேமலாப நிதியத்திற்குச் சொந்தமான பணத்தை மிகவும் பயனுறுதியாக முதலீடு செய்யக் கூடிய வகையிலான விசேட ற்பாடுகளை வகுத்தமைக்க வேண்டும். நாட்டிலுள்ள தொழிலாளர்கள் அவர்களின் எதிர் காலத்திற்காக நாட்டின் சட்டத்திற்கு அமைவாக சேமிக்கும் பணத்தையே ஊழியர் சேமலாப நிதியம் கொண்டுள்ளது. அவற்றை பயனுறுதியாக முதலீடு செய்யும் வழிமுறைகள் மற்றும் அதன் பாதுகாப்பு பற்றியும் வலுவான சட்ட ற்பாடுகளைத் தயாரிக்க வேண்டியுள்ளது. இச்செயற்பாடு 2010 தொடக்கம் 2013 வரையான காலத்தில் பங்குச் சந்தையில் இதேபோன்ற நிகழ்வு தொடர்பாக குழு சில உறுப்பினர்கள் அப்போது நேரடியாக குற்றம் சாட்டினார்கள் என்றும், அதனையும் விசாரிக்க வேண்டும் என்பதும் குழுவின் கருத்தாகும்.

9.3 உயர் வட்டி வீதம் தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக நிதிச் சந்தையில் ஏற்பட்ட தாக்கம்

2015 பெப்ருவரி மாதம் 27 ஆம் திகதிக்கு நிலையான வட்டி வீதத்தைத் தீர்மானிப்பதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட முன்னைய வாரம் நிலவிய இரண்டாம் நிலைச் சந்தை சராசரி விளைவு விகிதம் 9.48 ஆகும்.[30] அவ்வாறான நிலையில் குறித்த □லத்திற்கு 12.5% ஆன நிலையான வட்டி வீதம் பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. மேலும் □லத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் அதாவது 2015 பெப்ருவரி 25 ஆம் திகதிக்கு முன்னரான இறுதி வாரத்தில் இரண்டாம் நிலைச் சந்தைச் சராசரி விளைவு விகிதம் 10.03 மாத்திரமாகும். அதற்கமைய 2015 பெப்ருவரி 27 ஆம் திகதிக்கு □லத்திற்கான நிலையான வட்டி வீதமாக 12.5 சதவீதம் தீர்மானிக்கப்பட்ட முறை வெளிப்படுத்தப்படவில்லை. மேலும் உயர் வட்டி வீதத்தின் கீழ் 30 வருட காலமான நீண்டகாலத்திற்கு அரசாங்கம் தாங்கிக்கொள்ள வேண்டிய மேலதிக செலவினமும் அரசாங்கத்திற்கு □ற்படுகின்ற பாதமான நிலைமையாகக் கருப்படல் வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதன் போது அவதானிக்கப்பட்ட விசேட அம்சமாக இருப்பது 30 வருடகாலமாக உள்ள நீண்டகால முறிகளின் வட்டி வீதத்தில் இடம்பெறுகின்ற சிறிய அதிகரிப்பினாலும் அரசாங்கத்திற்கு பாரியளவான நிதிசார் பாதிப்பு □ற்பட முடியும் என்பதாகும்.

9.4 எல விற்பனை முறைக்கு மாறியதன் காரணமாக நிதிச் சந்தையில் முதனிலை வாடிக்கையாளருக்கு கூடுதல் நன்மைபயக்கும் நிலைமையை பெற்றுக் கொள்ள முடியுமாதல்[31]

முதனிலைச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள், □ல விற்பனை முறைக்கு மாற்றப்பட்டதன் காரணமாக விளைவு விகிதமானது வட்டி வீதத்திலும் பார்க்க அதிகப் பெறுமதியைக் கொண்டிருப்பதனால் அரசாங்கத்திற்கு மேலதிக செலவினத்தை தாங்கிக்கொள்ள வேண்டி □ற்படுவதாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மூலம் விரிவாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கழிவுடனான பெறுமதிக்கு முறிகள் முதனிலை வணிகர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் அவற்றின் இரண்டாம் நிலைச் சந்தை விலை உயர் மட்டத்தில் காணப்படுவதன் காரணமாக முதனிலை வணிகர்களுக்கு இந்த முறிகளை இரண்டாம் நிலைச் சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் இலாபத்தைப் பெற்றுக்கொள்ள பெறுவதற்கான ஆற்றல் கிடைப்பதாகவும் இந்நிலையின் கீழ் அரசிற்கு பெறக்கூடியதாகவிருந்த அனுகூலமான நிலை முதனிலை கொள்வனவாளர்களுக்கு இடம்பெயர்வதாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவதானிக்கின்றார்.[3 2]

---

[30] மேற்படி □லவிற்பனை சம்பந்தமாக 2015.12.25 ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலில் 12.5% ஆன வட்டி வீதம் குறிப்பிடப்பட்டிருப்பது □தேனும் ஆய்வுக்கான சமன்பாட்டுக்கு அமையவாகும் என்று மத்திய வங்கி அலுவலர்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தெரிவித்திருந்ததுடன், மேலும் மேற்படி பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்ட 2015.02.25 ஆம் திகதி மத்திய வங்கியினால் 30 வருட முறிகளுக்கான விளைவு வீதம் 10.14% ஆகும். அது பற்றி விசேட கவனம் செலுத்த வேண்டும்.

[31] எனும் குழுவின் கருத்து பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதி சமர்ப்பித்த வாதம் தொடர்பாக.

[32] எவ்வாறாயினும் மேலே விபரிக்கப்பட்டுள்ளவாறு கையேட்டின் B1 அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கைமுறைக்கு அமைய □லவிற்பனை விதியாகும் என்பது குழுவினால் அவதானிக்கப்படுகின்றது.

9.5 *முறி வழங்கலின் போது ஏல விற்பனை முறைக்கு நகர்வதால் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களினால் சாதகமான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளுதல் நலிவடைந்ததென்பது,*

2015 பெப்ரவரி 27 ஆம் திகதி இடம்பெற்ற நடைமுறை மாற்றங்களையடுத்து திறைசேறி முறி வழங்கலின் போது முதனிலை வாடிக்கையாளார்களாகவிருந்த ஊழியர் சேமலாப நிதியம், தேசிய சேமிப்பு வங்கி நிதியத்தின் முகாமைத்துவ கம்பனி, மக்கள் வங்கி, இலங்கை வங்கி போன்ற அரச நிறுவனங்கள் முறி ஏலவிற்பனைகளின் போது சாதகமான பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளுதல் நலிவடைந்திருந்ததாக கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டுகின்றார்.

9.6 *உயர்ந்த வட்டிவீதம் தீர்மானக்கப்படுமிடத்து முறி ஏலவிற்பனை நிராகரிக்கப்படுதல்*

உயர்ந்த வட்டிவீதத்துடன் விலைகேட்பு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததால் அவ்வாறான ஏலவிற்பனைகள் முழுமையாக இரத்துசெய்யப்பட்ட 5 சந்தர்ப்பங்கள் 2015 -2016 வரையிலான காலத்திற்குள் அறிக்கையிடப்பட்டுள்ளதாகவும் முதனிலை வாடிக்கையாளர்களினால் மத்திய வங்கி எதிர்பார்க்கும் விலைகளைவிட மிகவும் உயர்ந்த விலைகளுக்கும் விலைகள் சமர்ப்பிப்பதற்கான போக்கும் ஏற்பட்டிருந்ததாகவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி சுட்டிக்காட்டுகின்றார்.

10. 2015 – 2016 *மத்திய வங்கி முறிகள் வழங்கல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையின் விதப்புரைகள்*

(i) இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற கொள்கைத் தீர்மானங்களின்போதும், நடைமுறையிலுள்ள முறையியல்களை மாற்றங்களுக்கு உள்ளாக்கும்போதும் அவற்றின் மூலம் நாட்டின் பொருளாதாரத்தின் மீது □ற்படுத்தப்படுகின்ற சாதகமான மற்றும் பாதகமான தாக்கங்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் நோக்கங்களுக்கு அதன் மூலம் □ற்படுத்தப்படுகின்ற தாக்கங்கள் என்பவற்றை நீண்டகாலம் மற்றும் குறுகிய காலம் என்ற அடிப்படையில் கருத்திற்கொண்டு உரிய முடிவுகளை எட்ட வேண்டும் என்பதோடு அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை தொடர்பாக □ற்றுக்கொள்ளப்படக்கூடிய சாட்சிகள் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சமர்ப்பிக்கக்கூடிய வகையில் பேணிச் செல்லப்படுதல்.

(ii) இரண்டாம் நிலை சந்தையினையும் ஒழுங்குபடுத்துவதற்குப் போதுமான தரவுகள் இலங்கை மத்திய வங்கியிடம் இல்லாததொரு நிலையில் நிதிச் சந்தையை நெறிப்படுத்துகின்றதும் ஒழுங்குபடுத்துகின்றதுமான பணியானது மிகவும் பயனுள்ள வகையில் நிறைவேற்றப்படுவதை குற்றுயிராக்கும் விடயங்களைத் தடுப்பதற்குத் தேவையான சகல தரவுகளையும் மத்திய வங்கி கொண்டிருத்தல்.

(iii) மத்திய வங்கியினால் வழங்கப்படுகின்ற முறிகள் முதிர்ச்சியடைந்து பணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக தம்மிடம் சமர்ப்பிக்கப்படும் சந்தர்ப்பம் வரை அம்முறிகளுக்கான உரித்து மற்றும் கொடுக்கல் வாங்கல் இடம்பெறும் விதம் என்பன பற்றிய தகவல்கள் இலங்கை மத்திய வங்கியினால் பேணப்பட்டு வருதல்.

(iv) ஒரு நாட்டினது மத்திய வங்கி மீதான நம்பிக்கையானது அதன் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களின் திட்பநுட்பத்தின் மீது தங்கியுள்ளதோடு அந்த நம்பிக்கையினை உள்நாட்டு ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் களங்கமின்றி பேணப்பட வேண்டும். எனவே உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்படுகின்ற தீர்மானங்களின் நேர்மைத் தன்மையானது தாமதமின்றி □ற்றுக்கொள்ளச் செய்விக்கும் வகையில் சிற்சில வரையறைகளுக்கு உட்பட்டதாக அல்லது வெளிப்படைத்தன்மையுடன் செயற்படுதல்.

(v) சட்ட நிலைமைகளினதும் கணக்கீட்டு நியமங்களுக்குமான பல்வேறுபட்ட பொருள்கோடல்களும் விதிவிலக்குகளும் இருக்க முடிந்தாலும் அவற்றுக்கே வரையறுக்கப்படாமல் இலங்கை மத்திய வங்கியின் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு தாக்கம் □ற்படுத்தக்கூடிய மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியுடன் தொடர்புபட்ட நிறுவனங்களுக்கும் இடையில் அக்கறை முரண்பாடுகள் காணப்படுமாயின் நல்லெண்ணத்தை முதலாகக் கொண்டு பொருத்தமான வெளிக்கொணரலுடன் தமது பணிகளை நிறைவேற்றுவதற்கு மத்திய வங்கியின் உயர்மட்ட முகாமைத்துவம் செயலாற்றுதல்.

(vi) இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுகின்ற பெரும்பாலான தீர்மானங்கள் ஒட்டுமொத்த பொருளாதாரத்திற்கும் நீண்டகால ரீதியில் தாக்கம் □ற்படுத்துவதோடு அத்தகைய மிகவும் முக்கியமான, சிக்கலான, மற்றும் கூருணர்வுமிக்க தீர்மானங்களை மேற்கொள்ளும்போது சரியான அடிப்படையில் மேற்படி தீர்மானங்கள் எடுக்கப்படுகின்றனவா என்பது சுயாதீனத் தரப்பொன்றின் சோதனைக்கும் மேற்பார்வைக்கும் உள்ளாவது முக்கியமாக அமைவதானது அத்தீர்மானங்களின் மூலம் உருவாகின்ற சாதகமான மற்றும் பாதகமான பெறுபேறுகளுக்கு முழுச் சமூகமும் முகம்கொடுக்க நேரிடுகின்றமையினாலாகும். இதற்கமைய இத்தகைய சிக்கலான தீர்மானங்களை முறைசார்ந்த மதிப்பீடொன்றின்றி மிகவும் எளிமையாகவும் உடனடியாகவும் மேற்கொண்டு அதன் மூலம் □தேனும் பாதகமான பெறுபேறுகள் □ற்பட்டுளளதா என்பதை பரிசோதிப்பதற்கு தேவையான தகவல்களை அதற்கான அதிகார ஆணையுள்ள நிறுவனமானறுக்கு வழங்குவதற்கு தடை □ற்படுகின்ற விதத்தில் நாணய விதிச் சட்டத்தின் 45 வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இரகசியத்தன்மையை பாதுகாக்கின்ற □ற்பாடுகளை பிரயோகிக்க முடியாதவாறு அந்த பிரிவை பொருத்தமானவாறு திருத்துதல் வேண்டும்.

)vii(இந்த அறிக்கையை தயாரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் பெற்றுகொடுக்கப்பட்ட தகவல்களில் உள்ளடங்கியிருந்த இரகசிய மற்றும் கூருணர்வுடைய தகவல்களை சரியான விதத்தில் இனங்காட்டுமாறு மத்திய வங்கி ஆளுநரிடம் எழுத்து மூலம் வேண்டப்பட்டதோடு, (இணைப்பு 1 இல் - இணைப்புxxxiv □ பார்க்க) அதற்கு வழங்கிய பதிலின்படி (இணைப்பு 1 இல் இணைப்பு iii □ பார்க்க) வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தையும் இரகசிய தகவல்களாக கருத நேரிட்டுள்ளது. ஆதலால் அரச கணக்காய்வின் மூலம் அத்தகைய தகவல்களிலிருந்து இனங்காணப்பட்ட தகவல்களை இவ்வறிக்கையில் அவ்வாறே உட்புகுத்தாது அந்தத் தகவல்கள் பாராளுமன்றத்தின் கௌரவ சபாநாயகருக்கு பெற்றுக்கொடுக்கப்படும் என்பதைக் குறிப்பிட வேண்டியுள்ளது.

)viii(முதனிலை வணிகர்களுக்கு மத்தியில் முறிகளுக்கு □ற்புடையதாக நடைபெறுகின்ற இடைக் கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்குமுறைப்படுத்துவதற்கான உரிய முறையியலொன்றை வழிகாட்டல்கள் மூலம் அறிமுக்கபடுத்துதல் வேண்டும்.

)ix(முறிகள் லவிற்பனையுடன் தொடர்புடையதாக வெியிடப்படுகின்ற ல விற்பனைகளின் இறுதித் திகதி மற்றும் நேரத்தை சில சந்தர்ப்பங்களில் நீடித்தல் அங்கீகரிக்கப்பட்டிருந்ததோடு, அத்தகைய நீடிப்புகள் தவிர்க்க முடியாத நியாயப்படுத்தக்கூடிய விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்படுல் வேண்டும்.

)x(ஊழியர் சேமலாப நிதியம் பதிவு செய்யப்பட்ட முதனிலை வாடிக்கையாளரல்லாத போதிலும் முதனிலைக் கொடுக்கல் வாங்கல்களைப் போன்று முதனிலைச் சந்தையிலிருந்து முறிகளைக் கொள்வனவு செய்வதற்கான இயலுமை வழங்கப்பட்டுள்ளது. எனினும், ஊழியர் சேமலாப நிதியம் முதனிலைச் சந்தையிலிருந்து முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு மாற்று வழிமுறையாக வேறு முதனிலை வணிகர்களிடம் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து முறிகளைக் கொள்வனவு செய்கின்ற போக்கு காணப்படுவது அவதானிக்கப்படுகிறது. தற்போது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் காணப்படுகின்ற சேமலாப நிதியத்தை அந்த மேற்பார்வையிலிருந்து நீக்கி சுதந்திரமாகச் செயற்படக்கூடிய முதனிலை வாடிக்கையாளராக ஆக்குதல்.

)xi(தற்போது எதிர்வரும் மாதத்தின் தேவைப்பாட்டை இலங்கை மத்திய வங்கி பொதுத் திறைசேரியிலிருந்து பெற்றுக்கொள்வதோடு குறைந்தபட்சம் அதனை எதிர்வரும் மூன்று மாதங்களுக்கு நீடித்தல்

)xii(மேலே உள்ளவாறு பொதுத் திறைசேரி பெற்றுக்கொள்ளும் நிதித் தேவையை பெறுகின்ற விதத்தை முன்கூடியே தீர்மானித்தல்.

(xiii) இலங்கை மத்திய வங்கி முதனிலை வணிகர்கள் தொடர்பில் போதுமான மேற்பார்வையுடன் இருத்தல் வேண்டும். அதாவது, கடந்த காலத்தில் முதனிலை வணிகர் ஒருவர் வங்குரோத்து அடையும்போது அரசாங்கமும், குறித்த வணிகருடன் கொடுக்கல் வாங்கலில் ஈ டுபட்ட முதலீட்டாளர்களும் சிரமத்திற்கு உள்ளாகியிருந்தனர். இலங்கை மத்திய வங்கி இவ்வாறான நிலைமைகளைத் தடுக்கக் கூடிய விதத்தில் அவர்களின் நிதிசார் பலம் உள்ளிட்ட ஏ ற்புடைய நடத்தைகள் தொடர்பில் போதுமான மேற்பார்வையை மேற்கொள்ள வேண்டும்.

(xiv) இலங்கை மத்திய வங்கியினால் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்களின் இரகசியத் தன்மையைப் பாதுகாக்க வேண்டிய ஆவணங்களை வெளிப்படுத்துமாறு பொதுத் திறைசேரியின் செயலாளரிடம் வினவப்பட்டது. அதற்குப் பதிலளித்த பொதுத் திறைசேரியின் பிரதிநிதிச் செயலாளர், திறைசேரி முறி வழங்கலுக்கு ஏ ற்புடையதான திறைசேரியின் பணிகள் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளினுள் அரசாங்கத்தின் கடன் தேவை மாதாந்த அடிப்படையில் இலங்கை மத்திய வங்கிக்குத் தெரியப்படுத்துவதற்கு உட்படுவதாகத் தெரிவித்தார். எவ்வாறாயினும், இலங்கை மத்திய வங்கி தொடர்பான மேற்பார்வைப் பணிகளுக்குப் பொறுப்பான பிரதான நிறுவனம் என்ற வகையில் பொதுத் திறைசேரியின் பணிகள் மேலே குறிப்பிட்டுள்ள எளிமையான ஒன்றாக இருப்பதையிட்டு கணக்காய்வின்போது உடன்பட முடியாதென்பது.

10.1 2015 – 2016 மத்திய வங்கி திறைசேரி முறி வழங்கல் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் தயாரிக்கப்பட்ட விசேட கணக்காய்வு அறிக்கையின் முடிவுகள்

(i) கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட தடுக்க முடியுமாகவிருந்த ரூபா 8 8 9 ,3 58 ,050 மதிப்பிடப்பட்ட இழப்பு மற்றும் அதன் 5.2.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள தடுக்க முடியுமாகவிருந்த ரூபா 7 8 4 ,8 9 8 ,7 55 மதிப்பிடப்பட்ட இழப்பு என்றவாறு 2015 பெப்புருவரி 27 மற்றும் 2016 மார்ச்சு 29 ஆம் திகதி நடைபெற்ற திறைசேரி முறி தொடர்பான இரண்டு ஏ லத்திலும் தடுக்க முடியுமாகவிருந்த ரூபா 1,67 4 ,256,8 05 மதிப்பிடப்பட்ட இழப்பினை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் அதிகாரிகள் பொறுப்புக் கூற வேண்டுமென முடிவுசெய்யப்படுகிறது.

மேலும், நேரடி திறைசேரி முறிகள் வழங்கலை தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்ட 2015 பெப்புருவரி 27 ஆம் திகதி தொடக்கம் 2016 மே மாதம் வரை மேற்கொள்ளப்பட்டுள்ள திறைசேரி முறிகள் வழங்கலுக்கு ஏ ற்புடையதாக மதிப்பிடப்பட்ட இலாபம் அல்லது இழப்பை கணிக்குமிடத்து மேலே குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிடப்பட்ட இழப்பு தொடர்ந்தும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதை தவிர்க்க முடியாதென முடிவுசெய்யப்படுகிறது.

(ii) இந்த அறிக்கையைத் தயாரிக்கும்போது கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வெளிப்படுத்தப்பட்ட தகவல்கள் மற்றும் மேற்படி பந்திகளினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின்படி மத்திய வங்கி ஆளுநர் தனது பணியின்போது, மத்திய வங்கி ஆளுநர் ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற தொழில்சார் நுண்மதியுடன் (professional Due Care) செயலாற்றுயுள்ளமை உறுதிசெய்யப்படவில்லை என முடிவுசெய்யப்படுகின்றது.

(iii) இந்த அறிக்கையை தயாரிக்கின்றபோது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குரிய அதிகாரங்கள் மற்றும் விடய வரையறையினுள் செயலாற்றியுள்ளமை வலியுறுத்தப்படுகின்றது. அதற்கு அப்பால் குற்றவியல் அல்லது கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் முடிவுசெய்ய முடியாத அளவிலான சட்ட விரோத நடவடிக்கைகள் நடைபெற்றுள்ளதா என்பது இங்கு விசாரணைக்கு உள்ளாக்கப்படவில்லை என்பதால் அத்தகைய விசாரணையொன்று தேவையென உணரப்படுமெனில் அதற்கென விசேடமாக உள்ள நிறுவனங்களின் உதவியை பெற்றுக்கொள்ளல் பொருத்தமாகும் என முடிவுசெய்யப்படுகின்றது.[3 3]

[33] மேற்படி முடிவு பற்றி பின்வரும் விடயங்கள் குழுவினால் அவதானிக்கப்படுகிறது. மேற்படி கணக்காய்வு தொடர்பான அலுவல்களின்போது கணக்காய்வாளர் தலைமையதிபதி திணைக்களத்திற்கு இருந்த விடயப்பரப்பு வரையறுக்கப்பட்டிருந்தமை தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, அவை பின்வருமாறு.

3. <u>விடயப்பரப்பு வரையறுக்கப்பட்டுள்ளமை</u> (கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் வெளிப்படுத்தப்பட்டுள்ள தகவல்களின்படி அவரது விசேட கணக்காய்வு அறிக்கைக்கு செய்யப்பட்ட இற்றைப்படுத்தல்கள் உள்ளடங்கிய அறிக்கையில் உள்ளவாறு) இவ்வறிக்கையின் மூலம் எழுப்பப்பட்டுள்ள அவதானிப்புகளின் ஊடாக முடிவுகளுக்கு வருகின்றபோது தனது விடயப்பரப்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள மட்டுப்பாடுகளுக்கு உள்ளாகியிருந்ததென்பது வலியுறுத்தப்படுகிறது.

3.1 விடயத்துடன் தொடர்புடைய செயற்பாட்டுக்கு ற்புடையதாக மத்திய வங்கி குறிப்பிட்ட தொழிற்பாட்டுக் கைநூலில் காட்டப்பட்டுள்ள நடைமுறைகளின்படி செயலாற்றியதாகக் கூறிய போதிலும், அது அதன் நாயணச் சபையினால் அல்லது வேறு மேலாண்மை அதகாரம் கொண்ட நிறுவனமொன்றினால் அங்கீகரிக்கப்பட்ட முழுமொத்த கைநூல் அல்லவென எனக்கு அறிவிக்கப்பட்டிருந்தமை

3.2 விடயத்துடன் தொடர்புடைய செயற்பாடு பற்றிய விசாரணையொன்றை நடத்துகின்ற பணி கண்காய்வாளர் தலைமையதிபதிக்கு ஒப்படைக்கப்பட்ட திகதிக்கும் குறிப்பிட்ட சம்பவம் நடைபெற்ற திகதிகும் இடையே குறிப்பிடத்தக்கதொரு கால வீச்சடை காணப்படுகின்றமை

3.3 குறித்த விடயத்துடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக பரந்தளவு விடய அறிவுடன் கூடிய நிதியியல் மற்றும் பொருளியல் நிபுணர்களின் உதவியைப் பெறுவதற்கு போதியளவு காலம் இல்லாதிருந்தமை மற்றும் இந்த அறிக்கையின் முதலாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இரகசியத்தன்மை பற்றிய சிக்கலான நிலைமையின் காரணமாக அத்தகைய உதவியைப் பெறுதல் பிரச்சினைக்குரியதாக இருந்தமை.

3.4 மேலே 3.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபுணர்கள் இலங்கை மத்திய வங்கியில் இருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களின் உதவியை பக்கச்சார்பற்ற விதத்தில் பெற்றுக்கொள்ளல் பிரச்சினைக்குரியதாக காணப்பட்டமை.

3.5 குறிப்பிட்ட விடயத்துடன் தொடர்புடைய மிக முக்கியமான இரண்டாம்நிலைச் சந்தை பற்றிய தகவல்களை அந்த மூன்றாம் தரப்பினரிடமிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது உறுதி செய்துகொள்வதற்கான மேலாண்மை அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இல்லாதுள்ளமை.

3.6 இலங்கை மத்திய வங்கியினால் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள முதனிலை வாடிக்கையாளர்கள் மீது போதியளவு அழுத்தத்தை மேற்கொள்ளக்கூடிய இயலுமை காணப்பட்டதா என்பதை வெிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தமை.

3.7 முதனிலை வாடிக்கையாளர்களுக்கும் முதனிலை வாடிக்கையாளர்களுக்கும் மத்தியிலும், மத்திய வங்கி ஆளுநருக்கும் முதனிலை வாடிக்கையாளர்களுக்கும் மத்தியிலும் ஒவ்வொரு ஆட்களுக்கு மத்தியிலும் போதியளவு அழுத்தத்தை மேற்கொள்ளக்கூடிய இயலுமை காணப்பட்டதா என்பதை வெிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தமை.

3.8 இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகத்தர்களுக்கும் முதனிலை வாடிக்கையாளர்களுக்கும் மத்தியில் நடைபெறுகின்ற தொலைபேசி உரையாடல்கள் ஒலிப் பதிவு செய்யப்பட்டிருக்காமையால் அந்த தகவல்களை பரிசோதிப்பதற்கு முடியாதிருந்தமை

3.9 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி லவிற்பனை நடைபெற்ற சந்தர்ப்பத்திற்கு ற்புடையதான ிப் பதிவு செய்யப்பட்ட நேரடிக் காட்சிகள் பௌதீக ரீதியில் பரிசோதிக்கப்படாமை.

3.10 இந்த அறிக்கையை தயாரிப்பதற்காக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தகவல்களில் காணப்பட்ட இரகசிய மற்றும் கூருணர்வுடைய தகவல்களை சரியாக அடையாளம்காட்டுமாறு மத்திய வங்கி ஆளுநரிடம் எழுத்து மூலம் வேண்டப்பட்டதோடு அதற்கு வழங்கப்பட்ட விடையின்படி வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தையும் இரகசிய தகவல்களாக கருத நேரிட்டுள்ளமையின் காரணமாக அறிக்கையிடுவதில் மட்டுப்பாடுகள் காணப்பட்டமை.

- மேலே குறிப்பிடப்பட்ட விடயப்பரப்பு மட்டுப்படுத்தல்களுடன் இந்த விசாரணையில் சமர்ப்பிக்கப்பட்ட முறிகளுடன் தொடர்புடைய செயற்பாட்டில் உள்ள இதர குறைப்பாடுகளும் அத்தோடு இச் செயற்பாட்டுக்கு ஏற்புடைய சட்டஞ் சார்ந்த கணக்காய்வு நடத்தப்படாமை ஆகிய விடயங்களுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் குறிப்பாக முறிகள் வழங்கல் தொடர்பாக காணப்படுகின்ற விதி ஏல விற்பனை முறைமை என்பதும் விதி விலக்கு நேரடி விநியோக முறைமை என்பதும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட அறிக்கை தயாரிக்கப்படும் சந்தர்ப்பத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அச் சந்தர்ப்பத்தில் தேவையான சகல ஆவணங்களும் காணப்படாததால் மேற் குறிப்பிட்ட i, ii, iii ஆகிய பொய்யான தீர்மானங்கள் எட்டப்பட்டுள்ளன, மேலும், இந்த வரைபு கலந்துரையாடப்பட்ட சந்தர்ப்பத்தில் எழுந்த விடயங்களை தெளிவுபடுத்துவதற்கு இந்த விசாரணைக்கிடையே இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களத்தின் அத்தியட்சகர் ஊடாக பாராளுமன்ற அரசாங்க பொறுப்பு முயற்சிகள் குழுவிற்கு தருவிக்கப்பட்டது. 2016.10.21, 2016.10.24 என்ற இரண்டு கடிதங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு அணுகுவதற்கு வாய்ப்பிருக்கவில்லை என்பது தெரிகிறது. அந்த விடயங்கள் புதிய விடயங்கள் ஆகும். மேற்படி இரண்டு கடிதங்களும் இந்த அறிக்கையின் இணைப்புகளாக உள்ளடக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் பிரச்சனைக்குரிய முறிகள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு இருந்த கட்டுப்பாடுகளும் சரியான தகவல்கள் மேற்குறிப்பிட்ட அறிக்கை தயாரிக்கையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு மத்திய வங்கியினால் வழங்கப்படாத நிலையில் மேற் குறிப்பிட்ட i, ii, iii தொடர்பாக தீர்மானங்களுக்கு எட்டப்பட்டுள்ளதென்பது தெரிகிறது.இது கணக்காய்வாளர் தலைமை அதிபதி மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டு அல்ல என்பதோடு சீரான உண்மைத் தகவல்களின் அடிப்படையில் சரியான தீர்மானத்தை எட்டுவதற்கு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு தேவையான காரணிகள் ஆரம்ப நிலையில் காணப்படவில்லை என்பது குழுவின் கருத்தாகும்.
- 2016.10.21 ஆம் திகதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தையும் 2016.10.24 ஆம் திகதி குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களையும் உரியவாறு அறிக்கையில் மேற்கோள் காட்டப்படுவது உகந்ததாகும். அதன் பிரகாரம் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நேரடி முறைமைக்கு பெறப்படும் முறிகளுடன் தொடர்புடைய செயற்பாடு 2008 ஆம் ஆண்டு முடிவில் மத்திய வங்கியினால் நீட்டிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அதாவது 2008 ஆம் ஆண்டு நிறைவிலிருந்து 2009 – 2014 வரையான ஆண்டுகளில் நேரடி முறைமைக்கு வழங்கப்பட்ட முறிகள் சட்டத்துக்கு புறம்பாகவே வழங்கப்பட்டுள்ளதென்பது குழுவின் கருத்தாகும். மேற்படி சட்ட விரோத நேரடி முறிகள் மூலம் நாட்டுக்கு ஏற்பட்ட தாக்கம் தொடர்பாக முறையானதொரு விசாரணை நடத்தப்பட வேண்டியது இன்றியமையாததாகும்.
- ஆகவே மதிப்பிடப்பட்ட இழப்பு தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தீர்மானம் உரிய விடயங்களுக்கும் ஏற்புடைய சட்ட நிலைமைகளுக்கும் சமர்ப்பிக்கப்பட்ட சாட்சிகளுக்கும் முரணென்பதே குழுவின் கருத்தாகும்.
- மேலும், மேற்குறிப்பிட்டுள்ளவாறு 2008 – 2016 வரையான முழுமையான காலப்பகுதிக்கு ஏற்புடையதாக உரிய கணக்காய்வொன்று எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படுமானால் முறிகள் தொடர்பாகவும் அதற்கேற்புடையதாக நாட்டுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்தும் மிகவும் சரியான முடிவுகளை மேற்கொள்ள முடியுமென்பது குழுவின் எண்ணமாகும்.
- அரசாங்கத்துடனான நிதி நடவடிக்கைகளுடன் தொடர்புபடும் தனியார் நிறுவனங்கள் தொடர்பில் விபரமான முடிவுகளை மேற்கொள்வதற்குத் தேவையான அதிகாரத்தை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவது மிகவும் முக்கியமானதாகும். முக்கியமான முதளிலை வாடிக்கையாளர்களினதும் இரண்டாந்தரச் சந்தையினுள் தொழிற்படும் நிறுவனங்களினதும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கும் முழுமையான அதிகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு காணப்படுதல் வேண்டும். இதற்கான புதிய சட்டங்களை தயாரித்தல் உகந்ததென குழு கருதுகின்றது.
- அவ்வாறே, இந்த முறிச் சம்பவம் தொடர்பில் எழும் மற்றுமொரு முக்கிய விடயம் யாதெனில், மத்திய வங்கியின் உத்தியோகத்தரொருவர் மட்டுமன்றி இந்த செயன்முறையுடன் தொடர்புடைய அனைத்து

உத்தியோகத்தர்களும் ஒன்றாக அல்லது தனித்தனியாக இச்செயன்முறைக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்பதாகும். மேற்கூறப்பட்டுள்ளவாறு ஏற்பட்டுள்ள பாதகம் பற்றிய பிரச்சினை தனிநபரது தனித் தீர்மானத்துக்கும் மாறாக ஒரு குழுவினது தீர்மானம் என்பதை மேலதிக கடன் அத்தியட்சகர், பேராசிரியர் திரு. ஏ.இசட்.எம். அசீம் தமது சாட்சியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

- மத்திய வங்கிக்குள் காணப்படும் முறிகள் கொடுக்கல் வாங்கல் தொடர்பிலான இரகசிய தகவல்களை தம் வசம் வைத்துள்ள நபர்கள் இத்தகவல்களை எவ்வளவு தூரம் பாதுகாக்கின்றார்கள் என்பது குறித்து இந்த விசாரணையில் வெளிப்படுத்தப்பட்ட சாட்சிகளுக்கேற்ப சந்தேகம் எழுந்துள்ளது. முக்கியமாக இந்தப் பிரச்சினைக்குரிய 2015.02.27ஆந் திகதிக்கான முறிகள் ஏலவிற்பனையுடன் தொடர்புடைய முதளிலை வாடிக்கையாளர்களுக்கு மேலதிகமாக ஏனைய வெளித்தரப்பினரும் அறிந்து வைத்திருந்ததுடன், மத்திய வங்கி ஊழியரொருவரே 7 1/2 இலட்சம் பெறுமதியான முறிகளுக்கான கோரிக்கையை முன்வைத்திருந்ததாகவும், குறிப்பிட்ட நபர் மத்திய வங்கியின் ஏனைய ஊழியர்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடல்களின் பிரகாரம் இரகசியமாக இருக்க வேண்டுமென நியாயமான வகையில் எதிர்பார்க்கப்பட்ட தகவல்கள் பெரும்பாலானவர்களுக்கு மத்தியில் பிரச்சாரம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிகின்றது. இத்தகவல்களை வெளிப்படுத்திய உத்தியோகத்தர்கள் யார், இந்த ஒவ்வொரு உத்தியோகத்தரினாலும் இத்தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளனவா என்பது குறித்து விசேடமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். அவ்வாறு கண்டுபிடிப்பதற்குத் தேவையான எண்ணியல் தடயப் பதிவுகள் (digital foot prints) இலங்கை மத்திய வங்கி உத்தியோகத்தர்களின் எண்ணியல் தடயப் பதிவுகளை அவதானித்தல் வேண்டும். வரலாற்றில் இடம்பெற்ற சம்பவங்களைப் போன்றே எதிர்காலத்தில் மத்திய வங்கியின் முறிகள் செயற்பாடு மீதான நம்பிக்கையை உறுதிப்படுத்துவதற்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டி உள்ளது.

- உள்ளக தகவல்கள் வெளியில் கசிவதன் மூலம் தனியார் வாடிக்கையாளர்கள் இதில் இலாமடைந்துள்ளனர். பர்பச்சுவல் ரிரெஷரீ நிறுவனத்திற்கும் இவ்வாறு உள்ளக தகவல்கள் கிடைத்ததாக நியாயமான சந்தேகம் எழுந்துள்ளது.

- முறிகள் செயற்பாட்டில் முறைகேடான வகையில் அனுகூலங்களை பெற்றுக்கொள்வதற்கு முதனிலை வணிகர்கள் மத்திய வங்கியின் சில உத்தியோகத்தர்களும் ஊழியர் சேமலாப நிதி, இலங்கை வங்கி உள்ளிட்ட வங்கிகளின் சில உத்தியோகத்தர்களும் முறைகேடான வகையில் செயற்படுவதனையும் இதனூடாக இவ்வுத்தியோகத்தர்கள் திருடர் கூட்டமாக (R o g u e ri n g (நடந்துள்ளதையும் குழு அவதானித்துள்ளது. இதனை தடுப்பதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை மிக விரைவில் மேற்கொள்ளாவிடின் முறிகள் செயற்பாடு ல விற்பனையில் இடம்பெற்றாலும் நேரடி முறையின் கீழ் இடம்பெற்றாலும் நாட்டிற்கு ற்படும் நட்டத்தை தடுக்க முடியாது. இதற்கு அமைவாக எதிர்காலத்தில் நிகழும் தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் போது ல விற்பனை முறையை போன்று நேரடி முறைக்கு ற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- 2015.02.27 திகதி முற்பகல் 3 நாள் விதியாக அழைப்பட்ட வட்டி வீதத்தை கட்டுப்படுத்துவதற்கு பேணப்பட்ட இந்த வித்தியாசம் காரணமாக சந்தையில் 5 % தொடக்கம் 6.5% வரை அதாவது 1.5% ஆல் அதிகரித்தது. இது சந்தையில் வட்டி வீதத்தை வெகுவாக பாதிக்கும் விடயமாகும். இத்தகவல்கள் 2015.02.27 அன்று வெளியிடப்பட்டதாக கூறப்பட்டது. அதாவது பிரச்சினைக்குரிய லவிற்பனைக்கு பின்னராகும். இத்தகவல்களை சகல முதனிலை வணிகர்களுக்கும் லவிற்பனைக்கு முன் பெற்றுக்கொடுத்திருந்தால் சகல முதனிலை வணிகர்களுக்கும் நியாயமான சந்தர்ப்பம் கிடைத்திருக்கும். அத்துடன் இப்பிரச்சினை எழுந்திருக்காது.

- இதேபோன்று 2016.03.29 திகதி சர்வதேச சந்தையில் அமெரிக்க டொலர் 3 பில்லியன் இறைமை முறியை எடுப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை அன்றைய தினம் □ல விற்பனை முடிவடைந்த பின்னர் அறிவிப்பதற்கு பதிலாக □லவிற்பனைக்கு முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தால் சகல வாடிக்கையாளர்களுக்கும் இத்தகவல்களை அறிந்துகொள்ள இயலுமாக இருந்திருக்கும். அவ்வாறு நிகழ்ந்திருந்தால் வட்டி வீதம் அநேகமாக வீழ்ச்சியடைந்திருக்கும்.

- ரூபா1 பில்லியனுக்கு முறிகள் □லவிற்பனை நடத்தப்படும் தினத்தின் முடிவில் ரூபா 10 பில்லியன் பெற்றுக்கொள்ளப்பட்டமை விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது. இதற்கு காரணம் பர்பச்சுவல் ரிரெஷரீ□ நிறுவனம் தவிர □னைய முதனிலை வணிகர்கள் இவ்வாறான நிலைமையை எதிர்ப்பார்க்கமாட்டார்கள் என □ற்பட்டுள்ள உணர்வாகும். இதுபோல □னைய முதனிலை வணிகர்கள் தகவல்களை அறிந்திருந்தால் மிகவும் நியாயமான போட்டியை எதிர்ப்பார்த்திருக்கலாம். இந்நிலைமையை தடுப்பதற்கான விதப்புரைகள் இவ்வறிக்கையில் விதப்புரை பகுதியில் உள்ளடங்கியுள்ளது. இதற்கு அமைவாக மேற்கூறப்பட்டவாறு அறிவித்தலில் கோரியுள்ள அளவை விட வழமைக்கு மாறான தொகையை சந்தையில் பெற்றுக்கொண்டமையால் □ற்பட்டுள்ள பிரச்சினை பற்றி கேள்விபத்திர குழுவும் பொறுப்புக்கூற வேண்டும்.

  2016.03.29 ஆம் திகதி □லவிற்பனையில் பர்பச்சுவல் ரிரெஷரீ□ நிறுவனத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட முறிகளுக்கு கொடுப்பனவிற்கு இவர்களிடம் பணம் இல்லாமையினால், அதற்கு மத்திய வங்கியினால் நேரடியாக நிதி வழங்குவது எவ்வாறு இடம்பெற்றது என்பது பற்றிய சரியான விளக்கமளிப்படவில்லை. அந்தக் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றது எவ்வாறு என்பது பற்றி மத்திய வங்கியினால் எவ்விதமான சமர்ப்பிப்பும் இடம்பெறவில்லை. 2016.03.29 ஆம் திகதி □லத்தில் சமர்ப்பித்த ரூபா 29 பில்லியனான பெறுமதிக்கு முறிகளைப் பெற்றுக் கொண்ட பர்பர்சுல் டிரசரீ□ கம்பனி மேற்படி முறிகளுக்கு மத்திய வங்கியிடமிருந்து குறைந்த வட்டிக்கு கடன் பெற்றுக் கொண்டுள்ளது. மேற்படி நிலைமையில் பர்சர்சுவல் டிரசரீ□ கம்பனி □தேனும் முறையற்ற பயனை இந்தச் செயன்முறை ஊடாகப் பெற்றுக் கொண்டுள்ளதாக அவதானிக்கப்படுகின்றது. மேற்படி குறித்த விடயம் தொடர்பாக விசாரணை செய்து அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியதில்லை எனின் உறுதிசெய்து, இதனால் நாட்டுக்கு □ற்பட்டுள்ள நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டியவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ளவும் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளவும் செயற்படல் வேண்டும்.

கணக்காயவாளர் தலைமை அதிபதியின் அறிக்கையிலுள்ள அனைத்து விதப்புரைகள் மற்றும் முடிவுகளையும் ஏற்றுக்கொள்கின்ற குழு அந்த விதப்புரைகளையும் முடிவுகளையும் அங்கீகரித்து நடைமுறைப்படுத்துமாறு பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கின்றது.

11. குழுவின் பொது சிபாரிசுகள்

2015-2016 ஆகிய இரண்டு வருடங்களில் இலங்கை மத்திய வங்கி மேற்கொண்ட முறிகள் வழங்கலின் போது, நாம் விசாரணைக்கு உட்படுத்திய 2015 பெப்பரவரி 27 ஆம் திகதிய கொடுக்கல் வாங்கலின்போது, அப்போதைய மத்திய வங்கி ஆளுநராக இருந்த திரு. அர்ஜுன் மகேந்திரன் தலையீடு அல்லது அழுத்தம் மேற்கொண்டதாக நியானமான சந்தேகம் வரக்கூடியவாறான சாட்சிகள் மற்றும் விடயங்கள் குழுவின் முன் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக குழு அவதானிக்கின்றது.

குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் மற்றும சாட்சி விசாரணைகளின் போது, சில கொடுக்கல் வாங்கல்களில் உச்சமட்ட வெளிப்படைத்தன்மை இல்லை என்றும், இதன் போது செயற்பட்டுள்ள முறையில் இலங்கை மத்திய வங்கியின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றியும் நியானமான சந்தேகம் வரக்கூடியவாறான சாட்சிகள் அல்லது விடயங்கள் குழுவின் முன் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக குழு அவதானிக்கின்றது.

மேலும் அக்காலத்தில் இடம்பெற்றுள்ள முறிகள் கொடுக்கல் வாங்கல்கள் ஊடாக முதனிலை வாடிக்கையாளர்களில் ஒரு நிறுவனமான பேர்பச்சுவல் டிரஷரீ மிகப் பாரியளவில் நிதிசார் இலாபத்தை உழைத்துக் கொண்டுள்ளமையும் குழுவினால் அவதானிக்கப்படுகின்றது.

எனவே-

- அவ்வாறு மேற்படி கொடுக்கல் வாங்கலுக்கு பொறுப்புக்கூற வேண்டிய மத்திய வங்கியின் ஏனைய உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக விதிக்கப்பட வேண்டிய தண்டனை அல்லது வேறு நியமங்களை சிபாரிசு செய்வதற்கும்,
- மேற்படி முறைகேடான நடவடிக்கைகள் காரணமாக அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் ஏற்பட்டுள்ள நட்டம் அல்லது இழப்பை மேற்படி பொறுப்புக்கூற வேண்டிய ஆட்களிடமிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள வேண்டுமென்று சிபாரிசு செய்வதுடன், அதற்குத் தேவையான நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் குழு வலியுறுத்துகின்றது.
- மேலும், சிபாரிசு செய்யப்பட்ட தண்டனை அல்லது வேறு நியமங்கள் அவசியமானவாறு அமுல்படுத்தப்படுவது பற்றி ஆராய்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கும், அது பற்றிப் பின்னாய்வு செய்வதற்கும்,
- மேலும், அவ்வாறான நடவடிக்கைகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதற்கும் அத்தியாவசியமாக மேற்கொள்ள வேண்டிய சகல நடவடிக்கைகள், கண்காணிப்பு மற்றும் சமப்படுத்தல்களை அமுல்படுத்துவதற்கும்
- மேலே கூறப்பட்ட கண்காணிப்புகள் மற்றும் சமநிலைகள் மத்திய வங்கியினால் தகுந்தவாறு செயற்படுத்தப்படுவதை கண்டறிவதற்கும் உறுதிப்படுத்துவதற்கும், இது பற்றி பின்னாய்வு செய்வதற்கும், பாராளுமன்றம் நேரடியாக தலையிட வேண்டியதுடன் இது பாராளுமன்றத்துக்குரிய அரச நிதி நிர்வாகம் பற்றிய அடிப்படைப் பொறுப்பாகும் என்பதை குழு வலியுறுத்துகின்றது.

இவ்வாறு நடைமுறைப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிடுவதற்கும் வழமையிலுள்ள சட்டங்களின் கீழ் செயற்படுதலும் பாராளுமன்றத்திற்குரிய பொறுப்பாகுமென மிகவும் வினயமாக குழு விதந்துரைக்கின்றது. அத்தோடு மீண்டும் இதுபோன்ற நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்கு வழிமுறை மேற்கொள்வது இலங்கை மத்திய வங்கியிலும் இதற்கு இடைநேர்விளைவான ஏனைய நிறுவனங்களிலும் பொருத்தமான பொறிமுறையொன்று நடைமுறைப்படுத்துவதை இந்நிறுவனங்கள் பாராளுமன்றத்திற்கு உறுதிபடுத்த வேண்டுமென குழு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன்,

நாட்டின் நிதித் தேவையினை பூர்த்தி செய்வதற்கு பொறுப்பு வாய்ந்த முக்கிய நிறுவனமான இலங்கை மத்திய வங்கி நிதிக் கேள்விப் பத்திர வழங்கல் மற்றும் அளிப்பின் போது இந்நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கும் தேவையான பின்னாய்வுகளை மேற்கொள்வதற்கும் நிறைவேற்று அதிகாரத்தினால் விஷேட அவதானிப்புக் குழுவொன்றை நியமிக்க வேண்டுமென குழு விதந்துரைக்கின்றது.

1. மத்திய வங்கி உத்தியோகத்தர்கள், ஒரு தனி நிறுவனமான பேர்ப்பச்சுவல் ரெஷரீ நிறுவனத்துக்கு முறையற்ற நன்மையை ஈட்டக்கூடிய வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், அவ்வாறே, முதனிலை வாடிக்கையாளராக குறிப்பிட்ட நிறுவனமும் அத்தகைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல் ஆகியன மத்திய வங்கியின் நிதி நிருவாகத்திலான வெளிப் படைத்தன்மை மற்றும் நம்பிக்கைக்கு பெரும் பாதகமானதொரு நிலமையைத் தோற்றுவிப்பதனால், குறித்த நிலமைகள் தொடர்பில் சட்டரீதியான அதிகாரத்தைக் கொண்டுள்ள அங்கிகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் ஆழமான விசாரணைகளை மேற்கொள்வதற்கும், மீண்டும் அத்தகைய ஒரு நிலமை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கக்கூடிய சகல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் விதந்துரைக்கப்படுகின்றது.
2. முறிகள் செயற்பாட்டின் ஊடாக நாட்டுக்குத் தேவையான நிதியை பெற்றுக்கொள்கையில், அரசாங்கத்தின் அவசர நிதித் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய அரச நிதி நிறுவனங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென விதந்துரைக்கும் குழுவானது, இதற்கான ஏற்பாடுகளைக் கொண்ட பிரிவுகளை மத்திய வங்கியின் வழிகாட்டல் கையேடு உள்ளிட்ட ஏனைய உரிய ஆவணங்களில் உள்ளடக்க வேண்டுமென மத்திய வங்கிக்கு விதந்துரைக்கின்றது.
3. பிரச்சினைக்குரிய இம்முறிகள் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புபட்ட பேர்ப்பச்சுவல் ரெஷரீ நிறுவனமானது முதனிலை வாடிக்கையாளராக குறுகிய ஒரு காலப்பகுதிக்குள் அதிகூடிய இலாபத்தை ஈட்டியுள்ளதுடன், இவ்வாறு இலாபம் ஈட்டும் செயன்முறை தொடர்பில், முழுமையான அதிகாரம் கொண்ட பொறிமுறையொன்றின் மூலம் விசாரணையை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், இதன்மூலம், அவர்களது நடவடிக்கைகள் காரணமாக மத்திய வங்கி மற்றும் அரசாங்கத்துக்கு நிதிரீதியான நட்டம் ஏற்பட்டுள்ளதா என்பதை மிக விரைவில் புலப்படுத்திக் கொள்ளுதல் மத்திய வங்கியின் பொறுப்பாகுமென்பதை குழுவானது வலுவாக நம்புகின்றது.
4. எதிர்காலத்தில் இத்தகைய நிதி மோசடிகள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக முதனிலை வணிகர்களின் சந்தை நடவடிக்கைகள் மற்றும் இரண்டாம்நிலைச் சந்தை செயற்பாடுகள் குறித்து பின்னாய்வு செய்யும் ஒரு பொறிமுறை நிதி அமைச்சின் தலையீட்டுடன்

நிலைநாட்டப்படுதல் விதந்துரைக்கப்படுவதோடு, இதன் மூலம் மத்திய வங்கி அரசாங்கத்தின் நிதித் தேவைப்பாடுகளுக்கு நிதி திரட்டும் விதத்தை பின்ஆய்வு செய்வதற்கான ஆற்றல் நிதி அமைச்சுக்கு கிடைக்கும்.

5. இது வரை இற்றைப்படுத்தப்படாத பொதுப் படுகடன் முகாமைத்துவத் திணைக்களத்தின் தொழிற்பாட்டு கையேடு உடனடியாக இற்றைப்படுத்தப்பட வேண்டுமென்பதோடு, அதில் முறிகள் ஊடாக அரசாங்கத்துக்கு நிதி திரட்டுகையில் அவ்வாறு நிதி திரட்டக்கூடிய அரச நிறுவனங்களுக்கு முன்னுரிமை அளிக்கும் ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட வேண்டுமென விதந்துரைக்கப்படுகின்றது.

6. மேற்படி முறிகள் கொடுக்கல் வாங்கலுக்கு திரு. அர்ஜுன் மகேந்திரன் நேரடியாக பொறுப்புக்கூற வேண்டுமென்பதோடு இவருக்கும் ஏற்புடைய உத்தியோகத்தர்களுக்கும் எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதோடு ஏற்பட்ட இழப்பு இவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டுமெனவும் விதந்துரைக்கப்படுகின்றது.

7. இவ்வாறான கொடுக்கல் வாங்கல்களின் போது வெளிப்படைத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் பாதுகாப்பதற்கு பொறிமுறையொன்றை உருவாக்குதல் மற்றும் தற்போது காணப்படுகின்ற செலாவணி ஆணைக்குழுச் சட்டம் உள்ளிட்ட ஏற்புடைய சட்ட விதிகள், கட்டளைச் சட்டங்கள் துரிதமாக திருத்தப்பட வேண்டுமென்பது விதந்துரைக்கப்படுகின்றது.

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரச நிதி நிர்வாகம் முற்றாக ஒப்படைக்கப்பட்டுள்ள இந்த உயரிய பாராளுமன்றத்திற்கு, குழுவிற்கு இதுவரையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்கள், தகவல்கள், சாட்சியங்கள் (இதில் சில தகவல்கள் உணர்வுபூர்வமானவை என கூறப்பட்ட போதிலும்) மிக விரைவில் சமர்ப்பித்தல் குழுவின் தலையாய பொறுப்பாகுமென குழு நம்புகின்றது.

இப்பொறுப்புக்கு அமைவாக இந்த விதப்புரைகள் உள்ளடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதுடன், இந்த அறிக்கையை சமர்ப்பித்ததன் பின்னர், பாராளுமன்றத்தில் இதன் மீதான திறந்த கலந்துரையாடலொன்றை நடத்த வேண்டுமெனவும் குழு விதந்துரைக்கின்றது.